திமுது தென்னக்கூன் சிறிலங்கன் எயார்லையினில் நிதி, சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைகளில் ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பரந்துபட்ட அனுபவத்தினைக் கொண்டவர். அவர் ஐக்கிய அரபு எமிறேட்ஸ், கனடா, இந்தியா மற்றும் தூரகிழக்கு பிராந்தியத்தை மேற்பார்வை செய்கின்ற விதத்தில் சீனா போன்ற உலகின் பல்வேறு நாடுகளையும் தளமாகக் கொண்டு பணியாற்றியிருக்கின்றார். 2017இல் உலகளாவிய விற்பனைகள் மற்றும் விநியோகத் தலைவராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர் வர்த்தகத் தொழிற்பாடுகளின் பொது முகாமையாளராக இருந்தார். ஓமான் எயாரில் பணியாற்றிய காலத்தில் அவர் வட இந்தியாவிற்கான நாட்டு முகவராக மும்பாயைத் தளமாகக் கொண்டு பணியாற்றியிருக்கின்றார்.

இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டத்தில் இளமாணிப் பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

### புத்திகா மானகே

*விமான அறைகள் சேவை தலைவர்*

புத்திகா மானகே, 2003 ஆம் ஆண்டில் முகாமைத்துவப் பயிலுநராக எமது நிறுவனத்தில் இணைந்து கொண்டார். பின்னர் அவர், 2004 ஆம் ஆண்டில் வர்த்தகப் பெறுகைகள் பிரிவில் நிறைவேற்று உத்தியோகத்தராக பணிகளை ஆரம்பித்தார். இதற்கு மேலதிகமாக அவர், சிரேட்ட விமானத்திற்குள்ளேயான சேவைகள் நிறைவேற்று அதிகாரி (நிர்வாக மற்றும் பணியாளர் சேவைகள்), விமானத்திற்குள்ளேயான சேவைகள் முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் பணியாளர்களின் கடமை நிரல் தயாரிப்பு), மனிதவள அபிவிருத்தி மற்றும் வர்த்தகப் பங்காளித்துவ முகாமையாளர், சிரேஷ்ட முகாமையாளர் மனிதவள அபிவிருத்தி மற்றும் வர்த்தகப் பங்காளித்துவம் போன்ற பதவிகளில் 15 வருட கால அனுபவத்தைக் கொண்டுள்ளார். அவர், 2018 ஆம் ஆண்டில் விமான அறைகள் சேவைத் தலைவர் பதவியை மேற்கொண்டு வருகின்றார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் புள்ளிவிபரவியலில் விஞ்ஞான இளமாணி (கௌரவ) விசேட பட்டத்தைப் பெற்றவர். புத்திகா மானகே, மொறட்டுவ பல்கலைக்கழக்த்தில் முகாமைத்துவத்திற்கான விஞ்ஞான முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். அத்துடன் IPM நிறுவனத்தில் மனிதவள முகாமைத்துவத்திற்கான தொழிற்தகைமைகளையும் பெற்றுள்ளார். இவர் இதற்கு மேலதிகமாக தொழிற்சட்டம், விநியோக சங்கிலி முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளிலும் கல்வித் தகைமைகளைப் பெற்றவராவார்.

### பிறிமால் த சில்வா

*பொது முகாமையாளர் - சிறிலங்கன் விமானப் போக்குவரத்துக் கல்லூரி*

கம்பனியில் விமானியாக 1988இல் இணைந்து கொண்ட இவர், 2006 வரை நிதி அதிகாரியாகச் செயற்பட்டார். தற்பொழுது சிறிலங்கன் விமானப் போக்குவரத்துக் கல்லூரியின் பொது முகாமையாளர் பதவியை வகித்து வருவதுடன், பொறுப்புக்கூறத்தக்க (பகுதி 147) முகாமையாளருக்கான பொறுப்புக்களையும், விமானப் பராமரிப்பு மற்றும் பயிற்சிக்கான பொறுப்புக்களையும் வகித்து வருகின்றார். இந்நியமனத்திற்கு முன்னர் அவர், விமான அறைகளின் பாதுகாப்பு முகாமையாளர், விமான உள்ளகத் தொழிற்பாடுகள் மற்றும் பயிற்சிக்குப் பொறுப்பான முகாமையாளர் உட்பட கம்பனியில் பல்வேறு பதவிகளையும் வகித்திருக்கின்றார்.

### லெப்டினட் பந்துல வீரகம

*விமான மற்றும் தரைச் சேவைகள் பொது முகாமையாளர்*

விமான நிலையம் மற்றும் தரைப் பணிகள் பொது முகாமையாளரான லெப்டினட் பந்துல, கறைபடியாத 23 ஆண்டு கால இலங்கை இராணுவச் சேவையுடன் 2012இல் கம்பனியில் இணைந்து கொண்டார். முச்சேவைகளின் சூழலொன்றில் கட்டளையிடல் மற்றும் பயிற்சி வழங்கலில் பெற்றுக்கொண்ட விரிவான பணிகளுக்குப் புறம்பாக அவர் ஐக்கிய நாடுகள் திணைக்களத்தின் அமைதிப் படைத் தொழிற்பாடுகளிலும் பணியாற்றியுள்ளார். மனித வளங்கள், பறப்புக்கள் உள்ளகப் பணிகள் மற்றும் பாதுகாப்புப் பிரிவுகளில் பணியாற்றிய அவர் 2016 பெப்புருவரியில் விமான நிலைய மற்றும் தரைப் பணிகள் பிரிவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

லெப்டினட் பந்துல, பாதுகாப்பு ஆய்வுகளில் முதுமாணிப் பட்டத்தினை களனிப் பல்கலைக்கழத்திலிருந்தும் விஞ்ஞான முதுமாணிப் பட்டத்தினை பாகிஸ்தானிலுள்ள குவேட்டா பல்கலைக்கழத்திலிருந்தும் பெற்றுக்கொண்டார்.

# தொழில்முயற்சி இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு

### செயல்முறைக் கண்ணோட்டம்

சிறிலங்கன் எயார்லையின்ஸின் தொழில்முயற்சி இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டு முக்கியமாகக் குழும உத்தரவாதம் மற்றும் மதியுரைச் சேவைகள் பிரிவினால் வசதியளிக்கப்பட்டது. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் ERM கட்டமைப்பானது, சாத்தியமான வர்த்தக இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதிலும் சிறிலங்கன் எயார்லையின்சிற்கு இடர்நேர்வுகளினால் ஏற்படும் தாக்கங்களைத் தணிப்பதற்கான நடவடிக்கைத் திட்டங்களை வரைவதிலும் சிறிலங்கன் எயார்லையின் நியம அமைப்பொன்றினைப் பின்பற்றி வருகிறது. இடர்நேர்வுகள் தொழிற்பாடு, நிதி, தகவல் தொழில்நுட்பம், பத்திரம் மற்றும் பாதுகாப்பு, மனித வளங்கள், பேரண்டச் சூழல் அது போன்று தொழிற்துறை ரீதியில் குறிப்பிடக்கூடிய இடர்நேர்வுகள் என்பனவற்றை உள்ளடக்கிய உபாயம், செயன்முறை மற்றும் செயற்றிட்ட மட்டங்களில் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன. சிறிலங்கன் எயார்லையின்ஸ் தொழில்முயற்சி இடர்நேர்வு முகாமைத்துவத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பு முகாமைத்துவ வழிகாட்டல் குழு (மூத்த முகாமைத்துவக் குழு) இடர்நேர்வு முகாமைத்துவத் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் தொழிற்பாட்டு முகாமைத்துவம் (இடர்நேர்வுச் சொந்தக்காரர்கள்) என்பனவற்றிடம் ஒப்படைக்கப்பட்டது.

### நிறுவனத்தின் இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு




ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனமானது, சிறந்த இடர் முகாமைத்துவத்தை பேணுவதற்கு ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகிறது. அது, இடர் முகாமைத்துவத்தை ஆளுமையின் ஒரு அடித்தளமாகக் கருதுகிறது. சிறிலங்கன் எயார்லையின்ஸ ின் இடர்நேர்வுக் கலாச்சாரமானது அனைத்து ஊழியர்களும் பொருத்தமான இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட தீர்மானங்களை எடுப்பதற்கு ஊக்குவிக்கின்றது

### இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறை

சிறிலங்கன் எயார்லையின்ஸின் இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறையானது, இடர்நேர்வுகளை அடையாளம் காணுதல், இடர்நேர்வினைப் பகுப்பாய்வு செய்தல், இடர்நேர்வினைத் தீர்க்க நடவடிக்கை எடுத்தல் மற்றும் இடர்நேர்வினை அறிக்கையிடுதல் மற்றும் கண்காணித்தல் ஆகிய நான்கு முக்கிய மூலங்களை உள்ளடக்கியிருக்கிறது.




### இடநேர்வு அடையாளம் காணல்

சிறிலங்கன் எயார்லையின்ஸ், இடர்நேர்வினை அடையாளம் காணும் செயன்முறையில் தொழிற்பாட்டு ரீதியான மற்றும் கம்பனிக் குறிக்கோள்களை எய்துவதில் ஏதேனும் முட்டுக்கட்டைகளுக்குக் காரணமாகக்கூடிய உள்ளக மற்றும் வெளிவாரிக் காரணிகள் இரண்டினையும் அடையாளம் கண்டிருக்கின்றது. இடர்நேர்வுகள் குழும உத்தரவாதம் மற்றும் மதியுரைச் சேவைகள் பிரிவின் உதவியுடன் புத்திசாதுரியமான கூட்டங்கள், நேர்முகக் கலந்துரையாடல்கள்

மற்றும் வினாக் கொத்துக்கள் என்பன ஊடாக தொழிற்பாட்டு மட்டத்தில் அடையாளம் காணப்பட்டன. இடர்நேர்வுப் பதிவேடுகளை இற்றைப்படுத்துவதற்குப் பிரிவு ரீதியான / திணைக்கள ரீதியான இடர்நேர்வு இணைப்பாளர்களுக்கு தொழிற்பாட்டு ரீதியான முகாமைத்துவ உதவிகளும் தேவையான தகவல்களும் வழங்கப்படும். அடையாளம் காணப்பட்ட இடர்நேர்வுகள் இடர்நேர்வு முகாமைத்துவ வழிகாட்டல் குழுவினால் காலாண்டு ரீதியாக மீளாய்வு செய்யப்பட்டு அவை அரையாண்டுக்கொருமுறை சபைக் கணக்காய்வுக் குழுவிற்கு அறிக்கையளிக்கப்படுகிறது.

### இடர்நேர்வுப் பகுப்பாய்வு

அடையாளம் காணப்பட்ட இடர்நேர்வுகள் அவை நேரிடக்கூடியதன்மை மற்றும் அவற்றின் அளவையியல் ரீதியான தாக்கம் என்பனவற்றின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டதுடன் கணிசமானவை, உயர்வானவை, நடுத்தரமானவை அல்லது குறைந்தவை எனத் தரமிடப்பட்டன. இடர் மதிப்பீட்டு அளவு கணக்கிடப்பட்டு இடம்பெறக்கூடிய தன்மையுடன் பெருக்கப்பட்டு அதனால் ஏற்படும் தாக்கம் கணக்கிடப்படுகின்றது.

### இடர்நேர்வினைத் தீர்க்கும் வழிமுறை

தொழிற்பாடுகள் முகாமைத்துவம், இடர்நேர்வுகளின் தரமிடல்களின் அடிப்படையில் நடவடிக்கைத் திட்டங்களை வடிவமைப்பதற்குப் பொறுப்பாக இருக்கிறது. இடர்நேர்வினைத் தீர்ப்பதற்காக அடையாளம் காணப்பட்ட சிறிலங்கன் எயார்லையின்ஸ்ஸின் இடர்நேர்வு பதிலிறுப்புக்கள், தணிப்பு, மாற்றல், தவிர்த்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. தொழிற்பாட்டு ரீதியான முகாமைத்துவம் அடையாளம் காணப்பட்ட இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதற்குப் பொறுப்பாக இருந்ததுடன் நடவடிக்கைத் திட்டங்கள் இடர்நேர்வு முகாமைத்துவ வழிகாட்டல் குழுவினால் காலாண்டு அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்டன. கணிசமான இடர்நேர்வுகளைத் தீர்க்கின்ற நடவடிக்கைகள் பிரதம நிறைவேற்று அதிகாரியினால் மீளாய்வு செய்யப்பட்டு ஒப்புதலளிக்கப்பட்டன. உயர் இடர்நேர்வுகளைத் தீர்க்கும் வழிமுறை நடவடிக்கைகளுக்கு மூத்த முகாமைத்துக் குழுவினால் ஒப்புதல் வழங்கப்பட்டன. நடுத்தர இடர்நேர்வினைத் தீர்க்கும் நடவடிக்கைகளுக்கு திணைக்கள முகாமையாளர் ஒப்புதலை வழங்கியிருக்கின்றார். குறைந்த இடர்நேர்வுகள் தற்போதுள்ள கட்டுப்பாட்டு வழிமுறைகளுக்குள்ளேயே முகாமைப்படுத்தப்பட்டதுடன் இடர்நேர்வுத் தரமிடலில் ஏற்படும் மாற்றங்களுக்காக அவை நெருக்கமாகக் கண்காணிக்கப்பட்டன.

### இடர்நேர்வினை அறிக்கையிடல் மற்றும் கண்காணித்தல்

இடர்நேர்வு முகாமைத்துவ பதிவேடுகள், நடவடிக்கை விடயங்கள் உரிய கால அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படுவதனை கண்காணிப்பதற்காகப் பிரிவு திணைக்களத் தலைவர்களினால் மீளாய்வு செய்யப்பட்டன. இடர்நேர்வு முகாமைத்துவ வழிகாட்டல் குழு முக்கியமான இடர்நேர்வுகளை மீளாய்வு செய்து கணக்காய்வுக் குழுவிற்கு அரையாண்டிற்கொருமுறை அறிக்கையளித்தது. சபைக் கணக்காய்வுக் குழு, முக்கிய கம்பனி இடர்நேர்வுகளை அரையாண்டு அடிப்படையில் மீளாய்வு செய்ததுடன், சூழ்நிலைகள் பணிப்பாளர் சபையின் கவனத்தினை உடனடியாகத் தேவைப்படுத்தினாலொழிய பணிப்பாளர் சபைக்கு அரையாண்டு அடிப்படையில் அறிக்கைகளை வழங்கியது.

# முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும்



## செயற்படு சூழல்

### உலகளாவிய தோற்றப்பாடு

சர்வதேச விமானத் துறையானது, 2017 ஆம் ஆண்டில் எதிர்பாராத அளவு பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளது. உலக பொருளாதார வளர்ச்சிக்கு அதன் முக்கியத்துவம் இதன் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. தரமுயர்த்தப்பட்ட உலகளாவிய பொருளாதார நிலைகள் குறித்த வருடத்தில் விமானத்துறை வளர்ச்சிக்கும் உதவியது. விமானங்கள், சுமார் 4.1 பில்லியன் பயணிகளை சுமந்து சென்றுள்ளன. இது ஒரு வருடத்தில் பதிவு செய்யப்பட்ட ஆகக்கூடிய விமானப் பயணிகளின் எண்ணிக்கை சாதனையைப் புதுப்பிக்கிறது. விமானம் மூலமான பொருட்கள் போக்குவரத்து, சாதகமான வளர்ச்சியை வெளிப்படுத்தியதோடு, தொழிற்துறை சார்ந்த பொருட்கள் போக்குவரத்தானது, கிலோ மீற்றர் தொன்களில் அளவிடுகையில் 9.7% வளர்ச்சியைக் காண்பித்துள்ளது.

விமான சேவை வழங்குநர்கள் 20,000 க்கும் மேற்பட்ட புதிய, நேரடி விமான சேவைகளை ஆரம்பித்துள்ளனர். அதன் மூலம் நிகர இலாபமாக 38 பில்லியன் அமெரிக்க டொலரை பதிவுசெய்து 2016 ஆம் ஆண்டின் 3 பில்லியன் அமெரிக்க டொலர் இலாபத்தை கடந்து சென்றுள்ளது. விமானம் மூலமான பயணத்தில் காணப்படும் கேள்வி மற்றும் சர்வதேச பொருளாதாரத்தில் உள்ள சாதகமான நிலைமை என்பன தொழிற்துறையின் பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. வட அமெரிக்க விமான சேவை நிறுவனங்கள், சர்வதேச விமான சேவை இலாபங்களில் பெருமளவை பதிவு செய்துள்ளன. உலகளாவிய ரீதியில் அடைந்துகொள்ளப்பட்ட இலாபத்தில் சுமார் 50% ஐ இவை வெளிப்படுத்தியுள்ளன. ஏனைய தொழிற்துறைகளுடன் ஒப்பிடுகையில், இலாப வீதங்கள் தொடர்ந்து குறைந்து வருவதோடு, எதிர்பார்க்கப்பட்ட செயற்படு இலாப வீதம் 2017 ஆம் ஆண்டில் 7.5% ஆகவும், இது, வரலாறு காணாத ஒரு அதிகரிப்பாகவும் காணப்பட்டது. 9% முதலீட்டின் மீதான வருமானம் மூலம் விமானத்துறை தொடர்ச்சியாக மூன்றாவது வருடமாகவும், மூலதனச் செலவையும் தாண்டிச் சென்ற ஒரு இலாபத்தைப் பெற்றுக்கொடுத்துள்ளது.



எதிர்காலத்தில், சர்வதேச முதலீட்டாளர்களை தொழிற்துறைக்குள் ஈர்ப்பதில் இது முக்கிய பங்காக அமைந்துள்ளது.

சர்வதேச விமானப் பயண சேவைகளின் கேள்வி - தொழிற்துறை சார்ந்த பயணிகளின் கிலோ மீற்றருக்கான வருமானம் - 8.1% ஆல் அதிகரித்தள்ளது. 2005 ஆம் ஆண்டில் இருந்து ஒப்பிடுகையில் இதுவே காணப்பட்ட அதிகூடிய வளர்ச்சி வீதமாகும். எவ்வாறாயினும், சர்வதேச கொள்ளவின் வளர்ச்சி - சீட் கிலோ மீற்றர்களின் கிடைக்கக்கூடிய தன்மை ஆகியன, 6.7% குறைந்த வளர்ச்சியை வெளிப்படுத்தியது. பொருட்கள் போக்குவரத்து நடவடிக்கைகள் தொன் கிலோ மீற்றர்களில் அளவிடப்படுகின்றன. இது, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 4.8% வளர்ச்சியைக் காண்பித்துள்ளது. 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், இது, மிகக் குறைந்த வளர்ச்சி வேகமாகும். கொள்ளவில் காணப்பட்ட குறைபாடு காணமாக, 2017 ஆம் ஆண்டில் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்தில் அதிகூடிய பழுவுடன் காணப்பட்டது.

### உள்நாட்டுத் தோற்றப்பா

ஸ்ரீலங்கன் எயார்லைன், அதன் தெரிவு செய்யப்பட்ட வளர்ச்சி உபாயங்களைக் கையாண்டு வருகிறது. விமான சேவையானது, முன்னணி சந்தைகளை தனது வலையமைப்பில் இணைத்துக் கொண்டு, அவற்றைத் தெரிவு செய்கையில், அதிக வளர்ச்சி எதிர்பார்ப்புக்களைக் கருத்திற் கொண்டு அதன் மூலம் போட்டி நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில், சாதகமான நிலையை ஏற்படுத்தக்கூடிய தீர்மானங்களை மேற்கொண்டது. இதற்கமைய 2017 ஆம் ஆண்டில் நான்கு புதிய பயண முடிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்தியாவின் கோயம்புத்தூர், ஹைதராபாத் மற்றும் விஷாகப்பட்டனம் என்பனவே அவையாகும். அத்துடன், அவுஸ்திரேலியாவின் மெல்போர்னும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தில் 2017 ஆம் ஆண்டு ஒரு சவால்மிக்க வருடமாக அமைந்திருந்தது. பொருளாதார நடவடிக்கைகள் மந்தகதி நிலையில் காணப்பட்டது. மொத்த தேசிய உற்பத்தியின் வளர்ச்சி மிகவும் குறைவாக 3.1% ஆகக் காணப்பட்டது. கடந்த 16 வருடங்களில் இது மிகக் குறைவான ஒரு வளர்ச்சி வீதமாகும். சீரற்ற காலநிலையே இந்தக் குறைந்த மொத்த தேசிய உற்பத்திக்குப் பிரதான காரணமாகும். வெள்ளம் மற்றும் வறட்சி என்பன விவசாயத் துறையை கடுமையாகப் பாதித்ததோடு, முறையான வளர்ச்சிக்கு இது பிரதானமாகும்.

2017 ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறை தொடர் அபிவிருத்தி கண்டு வந்துள்ளது. 2017 ஆம் ஆண்டில் மொத்த சுற்றுலாப் பயணிகளின் வரவு 2.1 மில்லியனாகும். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 3.2% வளர்ச்சியைக் குறிப்பிட்டு, இதுவரை நாட்டிற்கு வருகை தந்த அதிகூடிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைப் பதிவு செய்துள்ளது. இந்தியா தொடர்ந்தும் அதிகூடிய சுற்றுலாப் பயணிகள் சந்தையாகச் செயற்பட்டு, 384,628 (7.8% வளர்ச்சி) சுற்றுலாப் பயணிகளையும், இரண்டாமிடத்தில் சீனா 268,952 (1% வீழ்ச்சி) மற்றும் மூன்றாமிடத்தில் ஐக்கிய இராச்சியம் 201,879 (7.3% வளர்ச்சி) என்ற நிலையைப் பேணி வருகின்றன. மொத்த தேசிய உற்பத்திக்கு சுற்றுலாத்துறை மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் 4.4 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இலங்கையின் போட்டிமிக்க தன்மை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், 2017/18 ஆம் ஆண்டில் 8% வளர்ச்சியை எட்டியுள்ளது. ஆய்வுக்குட்பட்ட ஆண்டில் கொழும்புக்குப் பல்வேறு புதிய விமான சேவைகள் பயணங்களை மேற்கொண்டிருந்தன. அவற்றில் சில ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தினால் மிக முக்கியமாக கருதப்படும் பயண முடிவுகளாகவும் காணப்பட்டது. போட்டிமிக்க தன்மையானது, கடந்த ஐந்து வருடங்களில் 7% ஆக நிலைத்திருந்தது. இதன் காரணமாக, சந்தையில் இலாபங்கள் குறைவு மற்றும் கேள்வியை விஞ்சிய கொள்ளளவு என்பன குறைந்த பயணக் கட்டணங்களை அறிமுகப்படுத்தச் செய்து வருமான வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## நிதித்துறை மீளாய்வு

செயற்பாட்டுச் சூழலில் காணப்பட்டு வரும் அதிகரிக்கும் போட்டித் தன்மை சந்தையில் காணப்படும் அதிக விநியோகம் மற்றும் அதிகரித்து வரும் எரிபொருள் விலையேற்றம் ஆகியன விமான

## முகாமைத்துவக் கலந்துரையாடல் தொடர்ச்சி.

சேவையின் வருமானத்தில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது.

உலகளாவிய பொருளாதார வளர்ச்சி சாதகமாக அமைந்திருந்தாலும், 2017 ஆம் ஆண்டின் இரண்டாம் பகுதி முதல் 2018 ஆம் ஆண்டு வரை விமான எரிபொருள் விலை அதிகரித்து வந்துள்ளது. புதிய எயார் பஸ் நியோ விமானங்களை அறிமுகப்படுத்தியதில் இருந்து எரிபொருள் சிக்கனத்தில் கனிசமான அளவு அபிவிருத்தி ஏற்பட்டாலும், அதிக கொள்ளளவு காரணமாக, பயன்படுத்தக்கூடிய எரிபொருளின் அளவு அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், அதிகரித்த எரிபொருள் செலவானது, விமானப் பயணக் கட்டணங்களை அதிகரிப்பதற்குக் காரணமாக இருப்பதனால், எரிபொருள் விலை குறைப்பு மற்றும் தெரிவு செய்யப்பட்ட உபாய முறை மூலம் போட்டித் தன்மைக்கு மத்தியில் சிறந்த பெறுபேறுகளை அடைந்துகொள்ள உதவியாக இருக்கும். சில விமான குத்தகை உடன்படிக்கைகளுக்கு அமைய விமானங்களின் பராமரிப்பு மற்றும் பயன்பாட்டுச் செலவு குறித்த வருடத்தில் அதிகரித்துள்ளது.

ஒட்டுமொத்த செயற்படு நட்டமாக குழுமம் ரூபா 10,395.22 மில்லியனை 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த நிதியாண்டில் பதிவு செய்துள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், 7,489.82 மில்லியன் ரூபா நட்ட அதிகரிப்பு காணப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி (விசேடமாக அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில்) நிதியியல் செலவுகளை அதிகரித்துள்ளது. குழுமத்தின் பெறுபேறுகளில் இது கடுமையான பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.

எவ்வாறாயினும், நிதியியல் மீள் திருப்பம் மற்றும் எதிர்கால நிலையான தன்மை என்பனவற்றுக்குத் தேவையான உபாயகரமான செயற்பாடுகளை நிறுவனம் முன்னெடுத்து வருகிறது. நிறுவனத்தின் அமைப்பை மீளமைக்க பல்வேறு திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன. பணிப்பாளர் சபை வரையிலான மீளமைப்புக்கள் மூலம், செலவு முகாமைத்துவம், வருமான வளர்ச்சி ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட்டு நிறுவனத்தின் போட்டிகரமான தன்மையை சந்தையில் நிலைநிறுத்தி, இலாபகரமான நடவடிக்கைகளில் மேலும் செயற்பட எதிர்பார்க்கப்படுகின்றது.

### வெளியக சூழலின் தாக்கம்




### அசைவு

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் நிலவிய எரிபொருள் விலை குறைந்து வரும் சூழ்நிலை மாற்றங்கண்டு, தற்போது சர்வதேச ரீதியில் 2017 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் உலக எரிபொருள் தேவைப்பாடு அதிகரிப்பு காரணமாக விலையில் அதிகரிப்பு ஏற்பட்டு வருகிறது. IATA 2018 ஆம் ஆண்டுக்கான விமான எரிபொருள் விலைகளை ஒரு கலனுக்கு USC 176 ஆகும். அதாவது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 12.5% வளர்ச்சி கணக்கிடப்பட்டுள்ளது. அத்துடன், 2025 ஆம் ஆண்டளவில் எரிபொருளுக்கான தேவைப்பாடு 1.9% முதல் 2.6% வரை வருடாந்தம் அதிகரிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### எமக்கு ஏற்பட்ட தாக்கம்

எரிபொருள் சிக்கனத்தைப் பெருமளவில் பெற்றுத் தரும் விமானங்களை எமது விமான சேவை பெற்றுக் கொண்டதனால், அதிகரித்த எரிபொருள் செலவின் தாக்கத்தை குறைவாக நாம் அடைந்தாலும், விமானத்தின் கொள்ளளவு அதிகரிப்பின் காரணமாக, எரிபொருள் செலவு அதிகரித்துள்ளது. மேலும், ஒட்டுமொத்த எரிபொருள் செலவு விமான சேவையின் செயற்பாட்டுச் செலவில் 27% மாக காணப்பட்டது. அது, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், 42% அதிகரிப்பாகும்.

### நாணயமாற்று வீதம்




*நாணயத் தளம்பல்*

அமெரிக்க டொலருக்கு எதிராக, வரலாறு காணாத வீழ்ச்சியை இலங்கை ரூபா இவ்வருடத்தில் அடைந்துள்ளது. அது, ரூபா 154.775 வாகக் காணப்பட்டது. வருட ஆரம்பத்தில் இது, ரூபா 151.81 வாக இருந்து, 2% சரிவை வெளிப்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும், 2018 ஆம் ஆண்டில் இதைவிட வேகமான சரிவு ஒன்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக, விமான சேவையின் வருமானத்தில் பெருமளவு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

*எமக்கு ஏற்பட்ட தாக்கம்*

நிறுவனத்தின் 80% வருமானம், வெளிநாட்டு நாணயங்கள் மூலமாகவே கிடைக்கப் பெறுவதனால், ரூபாவில் வீழ்ச்சி என்பது எமது வருமானத்தை கணிசமான அளவு பாதிப்புக்கு

உள்ளக்கக்கூடிய ஒரு விடயமாகும். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், ஏற்பட்ட நாணயமாற்று நட்டம், இவ்வருடம் குறைவாக இருந்தாலும், நிறுவனத்தின் செயற்படு செலவுகளை (அமெரிக்க டொலர்களினால் மேற்கொள்ளப்படும்) அதிகரிக்கச் செய்து ஒட்டு மொத்த வருமானத்தில் பாதிப்பை ஏற்படுத்த அது காரணமாக அமைந்திருக்கிறது.

### வருமானம்

தொடர்ந்து மாற்றமடைந்து வரும் சூழலில் 19% வருமான வளர்ச்சியை நிறுவனம் வெளிப்படுத்தி ரூபா 164,859.51 மில்லியன் வருமானத்தைப் பதிவு செய்துள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், அதிகரித்த பயணிகளின் எண்ணிக்கை இந்த வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்திருக்கிறது. எவ்வாறாயினும், ஏனைய சேவைகள் மற்றும் விமான சேவை நிலையம் என்பனவற்றை செயற்பாட்டில் இருந்து அகற்றி நாம் இழந்த வருமானத்தை ஈடு செய்ய இது ஏதுவாக இருந்தது.

இதற்குச் சமமாக, நிறுவனத்தின் வருமானமும் இலங்கை ரூபாவில் கணக்கிடுகையில் 19.3% வளர்ச்சி கண்டு 161,654.46 மில்லியன் ரூபா வருமானத்தைப் பதிவு செய்துள்ளது. இது, அதிகரித்த பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்தின் காரணமாக ஏற்பட்டிருந்தது. மொத்த செயற்பாடுகள் மற்றும் வலையமைப்பின் விஸ்தீரணம் மற்றும் அதிக கொள்ளளவு பயன்பாட்டின் மூலமும் புதிய பயண முடிவுகளை இணைத்துக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட விஸ்தரிப்புக்கள் இந்த வருமான வளர்ச்சிக்கு காரணமாக இருந்தது.

எவ்வாறாயினும், இந்த வளர்ச்சிகள் இலங்கை ரூபாவில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக முடக்கப்பட்டுள்ளது. சமமான சந்தைகளில் போட்டி நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில், இது மேலதிக வீழ்ச்சியை வெளிப்படுத்துகிறது. எவ்வாறாயினும், ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் நிறுவனம் இதுவரை பெற்ற அதிகபட்ச வருமானத்தைப் பதிவு செய்து புதிய சாதனை படைத்துள்ளது.

மொத்த குழும வருமானம் (ரூ. பில்.)




மொத்த நிறுவன வருமானம் (ரூ. பில்.)




குழும வருமானப் பகிர்வு







நிறுவனம் தொடர்ச்சியாக அதன் வலையமைப்பை மீளமைப்பதில் ஈடுபட்டு வருகிறது. எதிர்கால நிலையான தன்மையை குறைந்த நட்டங்கள் மற்றும் சிறந்த பாவனை மூலம் உறுதிப்படுத்த எதிர்பார்க்கின்றது. அதற்கமைய, ஆசியாவின் புதிய மூன்ற பயண முடிவுகளும், அவுஸ்திரேலியாவில் ஒரு புதிய பயண முடிவும் ஸ்ரீலங்கன் வலையமைப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டில் இணைக்கப்பட்ட விஷாகபட்டணம், ஹைத்ராபாத் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய பயண முடிவுகள் மூலம் இந்தியாவில் நிறுவனத்தின் செயற்பாடுகள் மேலும் பலப்படுத்தப்பட்டு, வலையத்தின் சிறந்த ஒரு விமான சேவை நிறுவனமாக அது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம், இந்தியாவில் மொத்தமாக 14 நகரங்களில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் செயற்பட்டு வருகிறது.

2017 ஒக்டோபர் மாதம் விமானப் பயண முடிவுகளை செயற்திறன் மிக்கதாக மாற்றியமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், கொழும்பில் இருந்து மெல்போர்னுக்கு பயணங்கள் அரம்பிக்கப்பட்டன. இலங்கையில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு நேரடி விமான சேவைகளை வழங்கி, ஏனைய நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் சிறந்ததொரு போட்டி நிலையை வெளிப்படுத்த நிறுவனத்தினல் முடிந்துள்ளது.

## முகாமைத்துவக் கலந்துரையாடல் தொடர்ச்சி.

### நிறுவன வருமானங்களை வலயங்களுக்கு அமைய வகைப்படுத்தல்




| | |
|---|---|
| ஸ்ரீலங்கா | 25.97% |
| ஆசியா (இலங்கை தவிர்ந்த) | 38.85% |
| ஐரோப்பா மற்றும் ஆபிரிக்கா | 10.79% |
| மத்திய கிழக்கு | 18.67% |
| வட மற்றும் தென் அமெரிக்கா | 3.0% |
| தென் மேற்கு பசிபிக் | 2.72% |




| | |
|---|---|
| ஸ்ரீலங்கா | 31.69% |
| ஆசியா (இலங்கை தவிர்ந்த) | 33.95% |
| ஐரோப்பா மற்றும் ஆபிரிக்கா | 13.77% |
| மத்திய கிழக்கு | 16.65% |
| வட மற்றும் தென் அமெரிக்கா | 3.05% |
| தென் மேற்கு பசிபிக் | 0.89% |

பயணிகள் மூலம் அதிகரிக்கப்பட்ட வருமானம், பெருந்தொகையான பயணப்பொதி மற்றும் பதிவு செய்யப்படாத சேவைகள் என்பன தவிர்ந்த ரூபா 26,686.54 மில்லியனாக அமைந்திருந்தது.

| | இ.ரூ. மில். |
|---|---|
| பயணிகள் வருமானம் இ.ரூ வில் 2.24% அதிகரிப்பு | 2,543.95 |
| ஆசனங்களின் கொள்ளளவு 18.45% அதிகரிப்பு | 20,906.27 |
| பயணிகளின் சுமை 2.86% அதிகரிப்பு | 3,236.32 |
| | 26,686.54 |

இலங்கை ரூபாவில் 2.24% வருமான அதிகரிப்பு பயணிகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டாலும், நிறுவனத்தின் வருமானத்தில் 80% வெளிநாட்டு நாணயங்களினால் கிடைக்கப் பெறுவதனால், இதனை அமெரிக்க டொலர்களில் கணக்கிடுகையில் பின்வரும் பெறுபேறுகளை வெளிப்படுத்தப்படுகின்றன.

| | 2018 | 2017 | மாற்றம் % |
|---|---|---|---|
| பயணிகள் மூல வருமானம் இ.ரூ வில் | 8.62 | 8.43 | +2.24 |
| பயணிகள் மூல வருமானம் USC யில் | 5.63 | 5.72 | -1.50 |

பயணிகள் வருமானத்தில் 1% வீழ்ச்சி, பயணிகள் சுமையில் 1%, ஆசனக் கொள்ளளவிம் 1%, பயணிகள் வருமானத்திலும் பின்வருமாறு காண்பிக்கப்படுகிறது.

| | இ.ரூ. மில். |
|---|---|
| பயணிகள் சுமையில் 1% மாற்றம், வருமானம் மற்றும் ஆசன கொள்ளளவு மாறாதிருந்தால் | 1,593.56 |
| ஆசனக் கொள்ளவில் 1% மாற்றம், வருமானம் மற்றும் சுமை மாறாதிருந்தால் | 1,051.09 |
| பயணிகள் வருமானத்தில் 1% மாற்றம், பயணிகள் சுமை மாறாதிருந்தால் | 1,317.15 |

### செலவினம்

2018 ஆம் ஆண்டில் குழுமத்தின் செலவுகள் ரூபா 184,209.49 மில்லியனாகக் காணப்பட்டது. அது, 2017 ஆம் ஆண்டின் 167,496.56 உடன் ஒப்பிடுகையில், 10% அதிகரிப்பாகும். குழும செலவினப் பகுப்பாய்வு பின்வருமாறு:

| | 2018 | | 2017 | | மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | இ.ரூ. மில். | % | இ.ரூ. மில். | % | இ.ரூ. மில். | % |
| விமான எரிபொருள் செலவினம் | 47,037.86 | 26% | 33,129.60 | 20% | 13,908.26 | 42% |
| ஊழியர்களின் செலவினம் | 20,897.26 | 11% | 20,012.56 | 12% | 884.70 | 4% |
| விமான நிலையங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மற்றும் பயணிகளுக்கான செலவினம் | 25,248.56 | 14% | 21,302.32 | 13% | 3,946.24 | 19% |
| விமானங்களுக்கான குத்தகை கட்டணம் | 25,726.29 | 14% | 22,789.22 | 14% | 2,937.07 | 13% |
| விமானங்கள் பராமரிப்பு மற்றும் பயன்பாட்டுக் கட்டணம் | 22,829.07 | 12% | 17,644.09 | 11% | 5,184.98 | 29% |
| பெறுமானத் தேய்வு / பதிவழிப்பு | 1,976.04 | 1% | 2,326.30 | 1% | (350.26 ) | (15%) |
| விற்பனை சந்தைப்படுத்தல் மற்றும் பிரசார செலவுகள் | 15,814.59 | 9% | 12,737.28 | 8% | 3,077.31 | 24% |
| விமானிகளுக்கான செலவுகள் | 6,035.58 | 3% | 5,435.73 | 3% | 599.84 | 11% |
| நாணயமாற்று நட்டம் | 1,815.64 | 1% | 2,835.07 | 2% | (1,019.43) | (36%) |
| ஏனைய செலவுகள் | 7,873.84 | 4% | 7,868.48 | 5% | 5.36 | 0% |
| நிதிச் செலவுகள் | 8,954.77 | 5% | 7,053.10 | 4% | 1,901.67 | 27% |
| விமானங்களுக்கான குத்தகை உடன்படிகை இரத்துச் செய்யப்பட்டமைக்கான இழப்பீடு | - | 0% | 14,362.81 | 9% | (14,362.81) | (100%) |
| குழுமத்தின் மொத்த செலவுகள் | 184,209.50 | 100% | 167,496.56 | 100% | 16,712.94 | |

2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், குழுமத்தின் மொத்தச் செலவுகள் 2018 ஆம் ஆண்டில் ரூபா 16,712.94 மில்லியனாக அதிகரித்துள்ளது. அதிகரிக்கப்பட்ட செயற்பாட்டுச் செலவினம் இதற்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது. மூன்று விமானங்களை விமான சேவையில் புதிதாக இணைத்துக் கொண்டதன் காரணமாக வாரம் ஒன்றுக்கு 67 புதிய விமானப் பயணங்கள் அதிகரிக்கப்பட்டு செலவினத்தில் 18% அதிகரித்து பயணிகள் கொள்ளளவு கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டது.

விமான எரிபொருள் செலவானது, குழுமத்தின் மொத்தச் செலவினத்தில் 26% ஆகக் காணப்பட்டது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது ரூபா 13,908.26 மில்லியன் அதிகரித்த ஒரு தொகையாக காணப்பட்டது.

இதற்கு பிரதானமாக இரண்டு காரணங்கள் உள்ளன. அவை, உலகளாவிய ரீதியில் எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் விமானங்களின் கொள்ளளவு அதிகரிப்பு என்பனவாகும். 2018 ஆம் ஆண்டில் சராசரி எரிபொருள் விலை USC 191 ஆக இருந்தது. இது 2017 ஆம் ஆண்டில் USC 161 ஆகக் காணப்பட்டது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்தியா மற்றும் மெல்போர்னுக்கான பயணங்கள், எரிபொருள் பயன்பாட்டை அதிகரித்துள்ளதோடு, இது, கணிசமான அளவு மாற்றத்திற்குக் காரணமாகவும் இருந்தது.

அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் இலங்கை ரூபாவின் சரிவு காரணமாக நிறுவனம் ரூபா 1,398.68 மில்லியன் நட்டத்தை எதிர்கொண்டது. (2018 ஆம் ஆண்டில் அமெரிக்க டொலர் ஒன்றின் சராசரி விலை ரூபா 153 வாகவும், 2017 ஆம் ஆண்டில் இது ரூபா 147 வாகவும் காணப்பட்டது).

| | இ.ரூ. மில். |
|---|---|
| எரிபொருள் விலை அதிகரிப்பு 18.21% | (7,194.84) |
| கொள்ளளவு அதிகரிப்பு 16.23% | (5,314.74) |
| அமெரிக்க டொலருடன் இலங்கை ரூபாவின் சரிவு 3.80% | (1,398.68) |
| | (13,908.26) |

வருமானம் ஒரு கலனுக்கு டொன் - கிலோ மீற்றர் என்ற அடிப்படையில் எரிபொருளின் செயற்திறன் (RTK/USG) கணக்கிடப்பட்டது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், RTK/USG 10.93 க்கு அதிகரித்து RTK/USG 0.22 அதிகரிப்பை வெளிப்படுத்தியது.

எரிபொருள் விலையில் ஒரு கலனுக்கு ஒரு சதம் அமெரிக்க டொலர் மாற்றம் ஏற்படும் போது, நிறுவனத்திற்கு வருடாந்தம் ரூபா 246.81 மில்லியன் செலவு அதிகரிப்பு ஏற்படுகிறது. இது, அமெரிக்க டொலரின் நாணயமாற்று வீதம் மற்றும் எரிபொருள் பாவனை என்பன ஒரே நிலையில் இருக்கும் போது கணக்கிடப்பட்டவையாகும்.

இதற்கு சமமாக, ஒரு சதவீத எரிபொருள் செயற்திறன் மாற்றம், குழுமத்தின் வருடாந்த எரிபொருள் செலவில் ரூபா 470.38 மில்லியன் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும். வெளிநாட்டு நாணயமாற்று வீதம் மற்றும் எரிபொருள் விலைகள் மாறாதிருக்கும் பட்சத்தில் இது கணக்கிடப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் விமான குத்தகை செலவினம் 13% ஆல் அதிகரித்து ரூபா 25,726.29 மில்லியனாகக் காணப்பட்டது. இதற்கு முக்கிய காரணம், 2018 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் புதிய விமானங்களான A320 நியோ செயற்பாட்டுக்க வந்தது காரணமாக இருந்தது. குறித்த வருடத்தின் மூன்று புதிய A321 நியோ விமானங்கள் நிறுவனத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட்டது.

விமானங்கள் பராமரிப்பு மற்றும் பயன்பாட்டு செலவினத்தில் 2018 ஆம் ஆண்டு 5,184.98% அதிகரிப்பு காணப்பட்டது. இது, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், 29% அதிகரிப்பாகும். புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நியோ விமானங்கள் அதிகளவு பராமரிப்பு மற்றும் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதனால் இந்தச் செலவின அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. A330-200 விமானத்தின் குத்தகைக் காலத்தை நீடித்தமை மற்றுமொரு செலவின அதிகரிப்புக்குக் காரணமாகும்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் பிரசார செலவுகள் 24% ஆல் அதிகரித்துள்ளன. இதற்கு சர்வதேச விநியோக முறை செலவுகள், அதிகரிக்கப்பட்ட தரகுகள் மற்றும் வழங்கப்பட்ட மேலதிகக் கொடுப்பனவுகள் என்பன பிரதான காரணமாகும். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், பயணிகளின் எண்ணிக்கை 31% ஆல் அதிகரிக்க இது காரணமாக இருந்தது.

விமான நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட செலவுகளைக் குறைப்பதற்கும், விமானிகள், பயணிகள் மற்றும் ஏனைய செலவினங்களில் மிகச் சிறியதொரு மாற்றத்தைப் பேணவும், நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டது. 2017/18 ஆம் ஆண்டில் செயற்பாட்டில் 30% வளர்ச்சி கண்டு செலவினத்தை அவ்வாறே பேணுவது பெரும் சாதனையாகும்.

ஊதியங்களின் அதிகரிப்பு மற்றும் ஓய்வுபெறல் செலவுகள் ஆகியன ஒன்றுதிரட்டிய பேரம்பேசுதல் உடன்படிக்கைகளுக்கு அமைய அமைந்திருந்தன. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இது, 4% அதிகரிப்பை வெளிப்படுத்தியுள்ளது.

## செயற்பாட்டு மீளாய்வு

### வர்த்தக நடவடிக்கைகள்

*பயண முடிவுகள் வலையமைப்பு மற்றும் விமானங்கள்*

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தற்போது 20 நாடுகளில் 40 பயண முடிவுகளுக்குப் பயணம் செய்து வருகிறது. கோட்ஷெயார் (codeshare) நடவடிக்கைகள் மற்றும் விமான சேவைகளினால் வழங்கப்படும் கழிவுகள் மூலம் 27 நாடுகளில் 64 பயண முடிவுகளுக்கு இதன் மூலம் பயணிகள் செல்ல முடியும். இவற்றில் வட அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய ஆசியா, ஆபிரிக்கா, கனடா மற்றும் அவுஸ்திரேலியா என்பன உள்ளடங்கும்.

ஏற்கனவே நிறுவனத்துடன் 2017/18 ஆம் நிதியாண்டில் இணைந்துள்ள Codeshare பங்காளிகளான குவன்டாஸ் மற்றும் ஜப்பான் எயார்லைன்ஸ் ஆகிய நிறுவனங்களுடன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் புதிய பயண முடிவுகளை அவுஸ்திரேலியா, ஆசியா மற்றும் கிழக்காசியாவில் அதிகரிக்க முடிந்தது. இதற்கு மேலதிகமாக, மியன்மார் எயார்வேஸ் இன்டர்நஷனல் நிறுவனத்துடன் புதிய codeshare பங்காளித்துவத்தை ஆரம்பித்து சிங்கப்பூர் மற்றும் பாங்கொக் ஊடாக பயணிகளுக்கு யங்கூனுன் செல்வதற்கு வாய்ப்பு பெற்றுக்கொடுக்கப்பட்டது. இதன் மற்றுமொரு அம்சமாக, மியன்மார் எயார்வேஸ் இன்டர்நஷனல் நிறுவனத்திற்கு ஸ்ரீலங்கன் எயார்வேஸ் நிறுவனத்தின் சேவைகளைப் பயன்படுத்தி பயணிகளை கொழும்புக்கு அனுப்பி வைக்கவும் முடியும். தற்போது, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்

## முகாமைத்துவக் கலந்துரையாடல் தொடர்ச்சி.

- எத்திஹாத் எயார்வேஸ், மலேசியா எயார்லைன்ஸ், எயார் கனடா, அலிதாலியா, ஓமான் எயார், பின் எயார், ஜப்பான் எயார்லைன்ஸ், குவன்டாஸ் எயார்வேஸ், ஜெட் ஸ்டார், ஏஷியா எயார்வேஸ், கட்டார் எயார்வேஸ் மற்றும் மியன்மார் எயார்வேஸ் இன்டர்நஷனல் ஆகிய நிறுவனங்களோடு codeshare நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

2018 மார்ச் 31 ஆம் திகதி, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம், ஒவ்வொரு வாரமும் கொழும்புக்கு வெளியே 38 பயணப் பாதைகளில் 350 விமானப் பயணங்களை மேற்கொள்கிறது. இந்தப் பயணப் பாதைகளில் 10 தெற்காசிய வலையத்திலும், 17 வலய பயணப் பாதைகளிலும், 10 மத்திய கிழக்கு பயணப் பாதைகளிலும் 01 ஐரோப்பிய பயணப் பாதையிலும் அமைந்திருந்தது.

*வலையமைப்பு செயற்திறன் அதிகரிப்பும் வருமானமும்*

வலயத்தில் ஏற்பட்டுள்ள போட்டித் தன்மையின் அதிகரிப்பு காரணமாக, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் வாடிக்கையாளர் வர்த்தகத்தில் குறிப்பிடத்தக்க ஒரு வருமான வீழ்ச்சி 2017 ஆம் ஆண்டில் இடம்பெற்றது. சரக்கு போக்குவரத்துத் துறை சிறந்த பெறுபேறுகளை தொடர்ந்தும் வெளிப்படுத்தி வந்துள்ளது. வாடிக்கையாளர் வருமான குறைவு காணப்பட்டாலும், சிறந்த வர்த்தக பயன்பாட்டின் மூலமும், வருமான முகாமைத்துவ நடவடிக்கைகள் மூலமும் இதுவரை நிறுவனம் பெற்ற அதிகூடிய வருமானத்தைப் பதிவு செய்யவும், வரலாற்றில் இதுவரை சுமந்து சென்ற அதிகூடிய பயணிகளின் எண்ணிக்கையும் 2018 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த நிதியாண்டில் நிறுவனம் பதிவு செய்தது. 5.8 மில்லியன் பயணிகளை நிறுவனம் சுமந்து சென்றுள்ளதோடு, இது 82.7% ஊழியர் அற்ற பயணிகளின் எண்ணிக்கையாகும். இது, நிறுவனத்தின் ஆரம்பகாலம் முதல் பதிவு செய்யப்பட்ட அதிகூடிய பயணிகள் பழு சதவீதமாகும். வருமானம் 860.38 மில்லியன் அமெரிக்க டொலர் (ரூபா 131.72 பில்லியன்) ஆகவும் சரக்கு போக்குவரத்து வருமானம் 95.51 மில்லியன் அமெரிக்க டொலராக (இலங்கை ரூபா 14.62 பில்லியன்) காணப்பட்டது. மொத்த விமானப் போக்குவரத்து வருமானம் 963.93 மில்லியன் அமெரிக்க டொலராக (இலங்கை ரூபா 147.56 பில்லியன்) ஆகக் காணப்பட்டதோடு, 2016/17 ஆம் ஆண்டின் குறைந்த செயற்பாட்டு கொள்ளளவு வீதமான 18.5% உடன் ஒப்பிடுகையில், இது, 28% வளர்ச்சியை கண்டுள்ளது.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பயண முடிவுகளான இந்தியாவின் கோயம்புத்தூர், ஹைத்ராபாத், விஷாக பட்டனம் மற்றும் அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் ஆகிய பயண முடிவுகளின் மூலம் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் செயற்பாட்டுக் கொள்ளளவு 2017/18 ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளது.

குறித்த வருடத்தில் நிறுவனம் தனது விமானங்களின் எண்ணிக்கையை இதுவரை இருந்த தொகையைவிட கனிசமான அளவுக்கு விருத்தி செய்து, புதிய மைல்கல் ஒன்றை அடைந்துள்ளது. இதற்கு பிரதான காரணமாக, புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட மூன்று விமானங்களான எயார்பஸ் A321 நியோ மற்றும் எயார்பஸ் A320 நியோ என்பன காரணமாக அமைந்திருந்தது. நியோ குடும்ப விமானங்களை அறிமுகப்படுத்தியது முதல் நிறுவனத்தின் செயற்பாட்டு உபாய முறையை பிராந்திய பாதைகள் மூலம் விருத்தியடையச் செய்ய நிறுவனத்தினால் முடிந்துள்ளது. 2017/18 ஆம் நிதியாண்டு முடிவில் ஸ்ரீலங்கன் நிறுவனம் 26 விமானங்களை உரிமையாகக் கொண்டுள்ளது.

**சர்வதேச விற்பனை மற்றும் விநியோகம்**

மாற்றமடைந்து வரும் செயற்பாட்டு சூழல் மற்றும் விமானப் பயணத்துறையானது, எமது விற்பனையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆய்வுக்குட்பட்ட ஆண்டிலும் இது இவ்வாறே காணப்பட்டது. இதில் மிகவும் அதிகமான தாக்கம் பிராந்தியத்தைச் சேர்ந்த ஏனைய விமான சேவை நிறுவனங்கள் சாதாரண விமானப் பயண நடவடிக்கைகளில் இருந்து விலகி குறைந்த செலவு வர்த்தக முறைக்குள் பிரவேசித்தமை மற்றும் ஹைபிரிட் விமானங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை என்பன காரணமாக அமைந்திருந்தது.

இதற்கு பதிலளிக்கும் வகையில், நாம் எமது விற்பனை மற்றும் விநியோக உபாய முறைகளை ஒன்லைன் மற்றும் ஓப் லைன் முறைகளில் முன்னெடுத்து வருகின்றோம். எமது பயணிகள் மூலமான வருமானம் எதிர்பார்க்கப்பட்ட அளவிலும் பார்க்க 1.71% அதிகரிப்பை வெளிப்படுத்தியுள்ளது. நிகர வருமானம் 2.92% ஆகக் காணப்பட்டது. இது, நாம் வருடம் முழுவதும் பேணி வந்த சிறந்த விற்பனை நடவடிக்கைகளின் பெறுபேறாக கிடைத்த பலனாகும். 10 வருடங்களின் பின் நாம் இந்த வருமான வளர்ச்சியைக் கொண்டாடுகின்றோம். எமது வரலாற்றில் நாம் அடைந்துகொண்ட மிகப்பெரிய வருமான விருத்தி இதுவாகும். எமது கொள்ளளவு 18.45% ஆல் கடந்த 2016/17 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வளர்ச்சியடைந்துள்ளது. ஒவ்வொரு துறையிலும் வருமானம் மிகவும் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு, முகவர்களின் தரகுகள் மேற்பார்வை செய்யப்பட்டு குறித்த ஆண்டின் வருமானங்கள் ஈட்டப்பட்டுள்ளன.

எமது புதிய நான்கு அறிமுகங்களான இந்தியாவின் விஷாக பட்டனம், ஹைத்ராபாத், கோயம்புத்தூர் மற்றும் அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் ஆகியன சர்வதேச பிரவேசத்தை அதிகரித்துள்ளதோடு, புதிய சந்தைகளை அடைந்து கொள்ளவும், வருமானத்தில் வளர்ச்சியை காணவும் உதவியது. இதற்கு மேலதிகமாக, தற்போது காணப்படும் பயண முடிவுகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பயணங்களின் அதிகரிப்பு அதாவது, டோஹா கட்டார், டுபாய், பாங்கொக், புதுடில்லி, மும்பாய் மற்றும் பெங்களுர் ஆகியன மூலம் எமது வருமானம் மேலும் வளர்ச்சி கண்டது. இதற்கு மேலதிகமாக, எமது சகல விமானங்களும் கொழும்பு கன்டன் ஊடாக பாங்கொக் மற்றும் கொழும்பு ஹொங்கொங் ஊடாக பாங்கொக் ஆகிய நடவடிக்கைகளை தற்போது நேரடியாக முன்னெடுப்பதனால் எமது வாடிக்கையாளர்களின் அதிகரித்த கேள்விகளுக்கு சிறந்த முறையில் எம்மால் சேவையாற்ற முடிந்துள்ளது.

அடுத்து வரும் நிதியாண்டில் எமது சர்வதேச விநியோகப் பிரிவில் உள்ளடக்கம் மற்றும் செயற்பாட்டு ரீதியான மாற்றங்களை ஏற்படுத்த எதிர்பார்க்கப்பட்டள்ளது. முகவர் தரகுத் திட்டங்கள், நேரடி செயற்பாட்டு முறைகள் என்பன அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் அதிக அளவு சந்தை வளர்ச்சியை அடைந்து போட்டியினால் பின்தள்ளப்பட்ட வர்த்தக வளர்ச்சியை சிறப்பாக சமாளிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

**சர்வதேச அழைப்பு நிலையம்**

எமது சர்வதேச அழைப்பு நிலையமானது, பிரசித்தி பெற்ற சர்வதேச அழைப்பு நிறுவனமான 'Scicom' ஊடாக செயற்பட்டு வருகின்றது. இந்த அழைப்பு நிலையத்தின் மூலம் உலகம் முழுவதும் உள்ள வாடிக்கையாளர்கள் மற்றும் FlySmiLes அங்கத்தவர்கள் ஒரே இலக்கத்தை தொடர்பு கொள்வதன் மூலம் பலதரப்பட்ட சேவைகளான புதிய பதிவுகள், திகதி மாற்றங்கள் மற்றும் ஏனைய சகல சேவைகளையும் பெற்றுக்கொள்கின்றன. இந்த அழைப்பு நிலையமானது, வாரத்தின் 7 நாட்களும் 24 மணி நேரமும் செயற்பாடு கொண்டு அழைப்புகள், மின்னஞ்சல், ஸ்கைப் மற்றும் நீடிக்கப்பட்ட கொடுப்பனவு முறைகளான அமெக்ஸ், வீசா, மாஸ்டர் மற்றும் ஏனைய உள்நாட்டு வங்கி வைப்புக்கள் போன்ற முறைகளுக்கும் சேவை வழங்குகிறது.

வாடிக்கையாளர்கள் எமது அழைப்பு நிலையத்தை தங்களது உள்நாட்டுத் தொலைபேசி மூலம் பிரான்ஸ், ஜேர்மனி, சிங்கப்பூர், ஐக்கிய இராச்சியம், ஹொங்கொங், இந்தியா, ஜப்பான், குவைத், மலேசியா, பாகிஸ்தான், தாய்லாந்து மற்றும் சீனா போன்ற பல்வேறு நாடுகளில் இருந்து தொடர்புகொள்ள முடியும். எமது ஏனைய பயண முடிவுகளுக்கும் இந்தச் சேவையை விருத்தி செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது இந்த அழைப்பு நிலையமானது, பல்வேறு மொழிகளிலும் சேவைகளைப் பெற்றுக்கொடுக்கிறது. ஆங்கிலம், சிங்களம், தமிழ் மற்றும் மண்டரின் ஆகிய மொழிகளில் அழைப்புக்களை மேற்கொள்ள முடியும். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட டிஜிட்டல் செயற்பாடுகளுடன் இணைந்து அழைப்பு நிலையமும் வாரத்தின் 7 நாட்களும் 24 மணி நேரமும் சமூக ஊடக வலையமைப்புக்களான பேஸ்புக், டுவிட்டர் என்பன ஊடாகவும் 2018/19 நிதியாண்டில் சேவைகளை பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கின்றது.

### பிளைஸ்மைல்ஸ் (FlySmiLes)

10 வருட காலத்தை பூர்த்தி செய்துள்ள FlySmiLes திட்டம், அதன் 10வது ஆண்டு நிறைவை 2018 எப்ரல் 01 ஆம் திகதி கொண்டாடியுள்ளது. அதற்கு சமாந்தரமாக, வாடிக்கையாளர்களை இணைத்துக்கொள்ளவும், செயற்பாட்டை அதிகரிக்கவும், எமது சேவைத் தரங்களை மீள் பரிசீலனை செய்யவுமென நான்கு ஊக்குவிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

வன்வேர்ள்ட் எயார்லைன் எலாயன்ஸ் குழுமத்துடன் இணைந்துகொண்ட இறுதி அங்கத்தவராக பிளைஸ்மைல் செயற்பட்டு வருகிறது. உலகம் முழுவதும் அரை மில்லியன் பயணிகளைக் கொண்டு குறிப்பிடத்தக்களவு அங்கத்தவர் வளர்ச்சியை அதாவது, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், 12% வளர்ச்சியுடன் செயற்பட்டு வருகிறது. இந்த அங்கத்தவர் எண்ணிக்கையில் பெருந்தொகையான அங்கத்தவர்கள் இலங்கை, இந்தியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.

பிளைஸ்மைல்ஸ் அங்கத்தவர்களுக்கு வன்வேர்ள்ட் குழுமத்தின் 13 அங்கத்துவ விமான சேவை நிறுவனங்களிடம் புள்ளிகளைச் சம்பாதிக்கவும், செலவிடவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இரண்டு பிளைஸ்மைல்ஸ் பங்காளி விமான சேவைகள் மற்றும் 28 உள்நாட்டு, வெளிநாட்டு விமான சேவைகள் அல்லாத நிறுவனங்கள் என்பனவற்றுக்கும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. 2017/18 ஆம் ஆண்டில் சம்பாதித்தல், செலவிடல் 58% ஆகக் காணப்பட்டது. இது, தொழிற்துறையின் ஏனைய சராசரியை தாண்டியதொரு நிலையாகும். கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் பிளைஸ்மைல்ஸ் ஊடாக 11% வருமான வளர்ச்சி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதில் 29% வளர்ச்சி, விமான சேவைகள் அல்லாத நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

பிளைஸ்மைல்ஸ் ஊடாக எமது பெறுமதிமிக்க பயணிகளை எம்மோடு தொடர்ந்து இணைந்திருக்கச் செய்யக்கூடியதாக இருக்கிறது. 2017/18 ஆம் ஆண்டிலும் எமது தொடர் பயணிகளுக்கு அதிகளவு சிறப்பு பயண நன்மைகளைப் பெற்றுக்கொடுக்க நாம் ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தோம். இந்த நடவடிக்கைகளில் பிளைஸ்மைல்ஸ் சேவை நிலையத்தை கொழும்பு 3, ஐஸ்லன்ட் பிஸ்னஸ் சென்டருக்கு இடம்மாற்றம் செய்தமை, பிளைஸ்மைல்ஸ்க்கு என தனிப்பட்டதொரு இணைய தளம் உருவாக்கப்பட்டமை, “ரெட் காபட்” ஊக்குவிப்புத் திட்டத்தின் முதல் கட்ட செயற்பாடு என்பன குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

இலாபம் மற்றும் வளர்ச்சியை அதிகரிப்பதற்காக பிளைஸ்மைல்ஸ் செயற்றிட்டத்தின் ஊடாக புள்ளிகள் சம்பாதித்தல் அட்டவணை மற்றும் மேலதிக பொதிகளுக்கான பிளைஸ்மைல்ஸ் செலவீட்டு வீதங்களை மாற்றியமைத்ததன் மூலமும் தனியொரு செலவின அட்டையை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் வன்வேர்ள்ட் உறுப்பினர்களுக்குப் பெற்றுக்கொடுத்து விமானப் பயணச் சீட்டுக்களை கொள்வனவு செய்ய வாய்ப்பு வழங்கியமையும் சிறந்த செயற்பாடுகளாகக் காணப்படுகின்றன.

எதிர்வரும் வருடங்களில் எமது விமான சேவை அல்லாத சேவை நிலையங்களை அதிகரித்து, மேலதிக சம்பாதித்தல் மற்றும் செலவின செயற்பாடுகளை எமது வாடிக்கையாளர்களுக்குப் பெற்றுக்கொடுத்து, அவர்களுக்கு இதன் ஈடுபாட்டை அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், ஒன்லைன் கொடுக்கல் வாங்கல்களுக்கு விசேட அனுகூலங்களைப் பெற்றுக்கொடுக்கவும் நாம் எதிர்பார்த்துள்ளோம்.

### ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ்

ஸ்ரீலங்கன் நிறுவனத்தின் வர்த்தக நடவடிக்கைகள், விமானப் போக்குவரத்து மாத்திரமன்றி, முழுமையான பயணச் சேவைகளையும் கொண்டுள்ளது. ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் என்பது, நிறுவனத்தின் களியாட்டப் பிரிவு ஒன்றாகும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகளுக்கு பல்வேறுபட்ட சேவைகளை இது பெற்றுக்கொடுக்கிறது. குறுகிய காலப்பகுதிக்குள் பல்வேறு இடங்களையும் பார்வையிடச் செல்லும் வசதியை எமது நாடு கொண்டிருப்பது எமக்கு பெரும் நன்மையாக அமைந்துள்ளது.

ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ், பல்வேறு முன்னணி ஹொட்டேல்கள், பயண ஏற்பாட்டாளர்கள் மற்றும் சுற்றுலாத்துறை நிறுவனங்களுடன் பங்காளித்துவ நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. 24 பிரெஞ்சைஸ் வர்த்தகச் செயற்பாடுகளுடன் ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் இணைந்துள்ளது. எமது சகல பயண முடிவுகளுக்கும் அது அமுலில் உள்ளது. ஸ்ரீலங்கன் நிறுவனத்தின் மொத்த உபாயகரமான செயற்பாடான அபிவிருத்தியடைந்து வரும் சந்தைகள் என்ற பகுதியை மையமாகக் கொண்டே ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் செயற்பட்டு வருகின்றது.

இதற்கு மேலதிகமாக, ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் நிறுவனம் எமது வலையமைப்புடன் இணைந்து பல்வேறு விதமான பயண முறைகளை வாடிக்கையாளர்களுக்குப் பெற்றுக் கொடுக்கிறது. இது, குழும மற்றும் தனிப்பட்ட பயணிகளாகிய இரு பிரிவினருக்கும் வழங்கப்படுகின்றது. குறித்த வருடத்தில் எமது செயற்பாடுகளை நகருக்கு வெளியே உள்ள சந்தைகளிலும் விஸ்தரிக்க முடிந்துள்ளது. இலங்கை முழுவதும் ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் என்ற வர்த்தகப் பெயரைப் பிரபல்யப்படுத்துவது எமது நோக்கமாகும்.

செலவு முகாமைத்துவத்தை நோக்குகையில், பல்வேறு செலவுக் கட்டுப்பாட்டு செயற்பாடுகள், இணைப்புப் பயண முடிவு செயற்பாடுகள் மூலமும் நிறுவனம் அதிகளவு செலவினை மீதப்படுத்தியுள்ளது. பயணிகளின் நாடு, இனம் மற்றும் பயண முடிவு என்பனவற்றைக் கருத்திற் கொள்ளாது சகலருக்கும் சமமான சிறந்த சேவையை ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் அவர்களது விருப்பத்திற்கு ஏற்ப சிக்கனமான முறையில் பெற்றுக்கொடுத்துள்ளது.

### துணைச் சேவைகள்

ஏனைய சேவைகள் வருமானம் 2017/18 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்துள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் அது 36% வளர்ச்சியாகும். இது, வருடாந்த கொள்ளளவு வளர்ச்சியை விட அதிகரித்த ஒரு வளர்ச்சியாகும். எமது சேவைகளுக்கு

## முகாமைத்துவக் கலந்துரையாடல் தொடர்ச்சி.

வாடிக்கையாளர்களிடையே காணப்படும் வரவேற்பு இதன் மூலம் தெளிவாகிறது.

எமது நிறுவனத்தின் முதன்மைக் கொள்கையாகிய வாடிக்கையாளர்களின் தேவைகளை அடையாளம் கண்டு, அவற்றுக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட தீர்வுகளாக சேவைகளைப் பெற்றுக்கொடுப்பது இங்கு மேற்கொள்ளப்படுகிறது. ஏற்கனவே காணப்படும் ஏனைய சேவைகளாகிய ஆசனத் தரமுயர்த்தல், முற்கொடுப்பனவுப் பொதி சலுகை, மேலதிக கால் இடைவெளி மற்றும் கார் வாடகைக்கு பெற்றுக்கொள்ளும் வசதி என்பனவற்றுடன் தரமுயர்த்தப்பட்ட முற்பதிவு மற்றும் விரும்பத்தக்க ஆசனங்களை பதிவு செய்தல் போன்ற வசதிகளையும், சிக்கனப் பிரிவு வாடிக்கையாளர்களுக்கு விசேட உணவு வகைகளை ஓடர் செய்து பெற்றுக்கொள்ளும் வசதி ஆகியவற்றை 2018/19 ஆம் நிதியாண்டில் அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், மேலதிக சேவைகளின் வருமானத்தை அதிகரிப்பதற்காக எமது நிறுவனம் இந்த சேவைகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியொன்றை வாடிக்கையாளர்களுக்காக ஏற்பாடு செய்து வருமான அதிகரிப்பை அடைந்துகொள்ள எதிர்பார்க்கிறது.

### ஸ்ரீலங்கன் கார்கோ

2017 ஆம் ஆண்டு விமானம் மூலம் சரக்கு போக்குவரத்து தொழிற்துறைக்கான ஒரு முக்கிய ஆண்டாக அமைந்திருந்தது. 2010 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார சரிவின் பின் அதிகூடிய பெறுபேறுகளை அடைந்துகொண்ட வருடமாக இது அமைந்திருந்தது. குறித்த ஆண்டில் இருப்புக்கள் சேகரிப்பு மீள ஆரம்பிக்கப்பட்டது. சர்வதேச வான் போக்குவரத்து சங்கத்திற்கு (IATA) அமைய இதன் வளர்ச்சி டொன் கிலோ மீற்றர்களினால் அளவிடப்படுகிறது. 9% வளர்ச்சியைப் பதிவு செய்து 2016 ஆம் ஆண்டின் வருடாந்த வளர்ச்சியான 3.6% உடன் ஒப்பிடுகையில் இரு மடங்கிலும் பார்க்க அதிகம் வளர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும், சந்தை கொள்ளளவின் வளர்ச்சியானது, 3% அதிகரிப்பையே காண்பித்துள்ளது. 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், இதுவரையில் ஆகக் குறைந்த வளர்ச்சி வீதம் இதுவாகும். இதற்கமைய, கேள்வியின் வளர்ச்சி, வழங்கலின் வளர்ச்சி போன்று மூன்று மடங்கு வேகத்தினால் வளர்ந்துள்ளது. ஈ வர்த்தகம் மற்றும் மருந்துப் போக்குவரத்து ஆகியவற்றின் வளர்ச்சி இதற்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது. அனைத்து உலக சந்தைகளும் இதன் காரணமாக துரித வளர்ச்சியை அவர்களது வருமானத்தில் கண்டு கொண்டுள்ளதோடு, இலாபத்திலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்த சிறந்த சர்வதேச சந்தை நிலையைப் பயன்படுத்தி அதிக இலாபங்களை அடைந்துகொள்ளும் நடவடிக்கையில் ஸ்ரீலங்கன் கார்கோ ஈடுபட்டுள்ளது. ஆய்வுக்குரிய நிதியாண்டில் 96.2 மில்லியன் அமெரிக்க டொலர்களை இதன் மூலம் வருமானமாகப் பெற்று, கடந்த வருட வருமானத்துடன் ஒப்பிடுகையில் 18% வளர்ச்சி கண்டது. குறித்த ஆண்டில் கிடைக்கப்பெற்ற வருமானத்தில் 10% சதவீதத்தை இது குறிக்கிறது. குறித்த ஆண்டில் எமது நிறுவனம் 132,958 மெற்றிக் தொன் சரக்குகளை கையாண்டுள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 14% வளர்ச்சியாகும். அத்துடன், ஒரு தொன் கிலோ மீற்றருக்குக் கிடைக்கும் வருமானத்திலும் 10% வளர்ச்சி கண்டு, 0.23 அமெரிக்க டொலராக அது அதிகரித்தது.

இலங்கையில் 24% வருமானம் பதிவு செய்யப்பட்டது. அதில் 5% வளர்ச்சியை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் காணலாம். 21% வருமானம் இந்தியா மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது. சென்னை 10% வருமானத்திற்குக் காரணமாக அமைந்திருந்தது. சீனா ஒரு முக்கிய வான் சரக்கு சந்தை என்பதால் அது 19% வருமானத்தைப் பெற்றுக்கொடுத்தது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், 10% சரிவை இது வெளிப்படுத்தியுள்ளது. இதற்குக் காரணமாக, குவான்சோ மற்றும் ஹொங்கொங் பாதைகள் ஊடான போக்குவரத்து அமைந்திருந்தது. மத்திய கிழக்கு சந்தை வான் மூல சரக்குப் போக்குவரத்தில் பின்தங்கிய ஒன்றாக இதுவரை காலம் காணப்பட்டிருந்தாலும், இம்முறை அதிகூடிய வளர்ச்சியை பதிவு செய்து குறித்த காலத்தில் 67% ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு பிரதான காரணமாக பிரதான விநியோக சந்தைகளில் இருந்து விலகி, உற்பத்தி சந்தைகளுக்கு அவை சென்றதாகும். இது, ஸ்ரீலங்கன் கார்கோ வலையமைப்புக்கு இலாபகரமாக அமைந்திருந்தது. ஐரோப்பா 6% வருமானத்திற்குக் காரணமாக அமைந்திருந்தது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், ஐக்கிய இராச்சியத்தின் மூலம் கிடைத்த வருமானம் 107% வளர்ச்சி கண்டுள்ளது. 2017 ஒக்டோபரில் ஆரம்பிக்கப்பட்ட மெல்பேர்ன் வரையான பயண முடிவு இந்த வளர்ச்சிக்கு பிரதான காரணமாகும். வலயத்தில் அதிக இலாபத்தைப் பெற்றுத் தரும் ஈ கொமர்ஸ் வர்த்தகத்தில் இலாபம் பெறுவதற்கு இது காரணமாக அமைந்திருந்தது. மெல்பேர்ன் பயண முடிவு சரக்குப் போக்குவரத்திற்கு சிறந்ததொரு பயண முடிவு என்பதை உறுதிப்படுத்தியுள்ளது. ஐரோப்பிய வர்த்தகத்தில் அதிக இலாபத்தை அடைய இது உதவி புரியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கன் கார்கோ மூன்றாம் தரப்பு சரக்குப் போக்குவரத்து நடவடிக்கைகளை இரத்துச் செய்வதற்கு ஒரு உபாயகரமான தீர்மானத்தை மேற்கொண்டது. 2014 ஆம் ஆண்டில் இது ஆரம்பிக்கப்பட்டு 2017 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் இரத்துச் செய்யப்பட்டது. விமானம், ஊழியர் பராமரிப்பு, காப்புறுதி ஆகிய செலவுகள் மூன்றாம் தரப்பினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு இந்த வர்த்தகம் முன்னெடுக்கப்பட்டது. இந்த செயற்பாடானது, பிரதானமாக பெங்களூர் மற்றும் மும்பாய், டாக்கா ஆகிய பகுதிகளில் செயற்பாட்டில் இருந்தது. இதன் மூலம் கிடைக்கப்பெறும் இலாபம் குறைவானது என்பது அடையாளம் காணப்பட்டு இணைப்புகளில் காணப்படும் இலாபமும் குறைவு என்பது தெளிவாக இருந்தது. இதனால் குறைவடையக்கூடிய சரக்குப் போக்குவரத்துக் கொள்ளளவை பெங்களூருக்கு பெற்றுக்கொடுப்பதற்காக ஸ்ரீலங்கன் கார்கோ ஒரு உபாயகரமான தீர்மானத்தை மேற்கொண்டு சென்னை மற்றும் கொச்சின் வழிகள் ஊடாக ஒப்பந்த ரீதியில் சரக்குப் போக்குவரத்தை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

விசேட உடன்படிக்கைகள் மூலம் பங்காளித்துவ விமான சேவை நிறுவனங்களுடன் பயணிகளின் இணைப்பை தொடர்ந்து பேணி வந்து ஸ்ரீலங்கன் கார்கோ முக்கியமான சரக்கு போக்குவரத்து மையங்களில் பிரவேசத்தைப் பெற்றுக்கொண்டது. ஹொங்கொங் பாதை ஊடாக சரக்கு போக்குவரத்தல் ஏற்பட்ட குறைபாட்டை இந்த உடன்படிக்கைகள் மூலம் கோலாலம்பூம் மற்றும் மாலைதீவு ஊடாக அதிக கொள்ளளவைப் பெற்றுக்கொடுத்து, சீனாவுக்கு இலங்கை சரக்குகளை அதிகளவில் கையாண்டு வளர்ந்து வரும் ஈ கொமர்ஸ் சந்தையில் பங்கை அடைந்து கொண்டது.

வான் மூலமான கடிதப் போக்குவரத்து வருமானம் குறித்த வருடத்தில் 1.2 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. இதற்கு பிரதான காரணமாக, ஈ கொமர்ஸ் அமைந்திருந்தது. வான் மூலமான சரக்கு போக்குவரத்திற்கு 2018 ஆம் ஆண்டில் மேலதிக வரவேற்பு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால், ஸ்ரீலங்கன் கார்கோவுக்கு 2017/18 இல் சக்தியாக அமைந்திருந்த ஈ கொமர்ஸ் எதிர்காலத்திலும் அவ்வாறே அமைந்திருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

2017 ஆம் ஆண்டு வான் மூல சரக்கு போக்குவரத்திற்கு சிறந்ததொரு ஆண்டாக அமைந்திருந்தாலும் பல்வேறு சவால்களை நிலையான தன்மை, இலாபம் மற்றும் வாடிக்கையாளர் திருப்தி ஆகிய பிரிவுகளில் சந்திக்க நேரிட்டது. கப்பல் போக்குவரத்து மற்றும் ரயில் போக்குவரத்துக்களின் காரணமாக வருமானத்தில் வீழ்ச்சிகள் ஏற்படவும் வாய்ப்புகள் இருப்பதுடன் இது கலந்த போக்குவரத்து முறைகள் மூலமாகவும் ஏற்படலாம். எனவே, தொழிற்துறையின் செயற்திறனை அதிகரிப்பதற்கும், சேவைத் தரத்தை அதிகரிப்பதற்கும் தேவைப்படுகின்றது. எதிர்வரும் வருடம் வான் மூல சரக்கு போக்குவரத்திற்கு சிறந்ததொரு வருடமாக காணப்பட்டாலும், ஏற்படும் போட்டிகளை சந்திப்பதற்காக சிறந்ததொரு சேவைத் தரத்தையும் பேண வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இது, விமான சேவை நிறுவனங்களிடையே மாத்திரமன்றி. ஏனைய சரக்கு போக்குவரத்து நிறுவனங்களுடனும் காணப்படலாம். ஸ்ரீலங்கன் கார்கோ அடுத்த வருடத்தை ஒரு சவால் மிக்க ஆண்டாக எதிர்கொண்டு, சிறந்த உபாயகரமான திட்டங்களை முன்னெடுத்து வாடிக்கையாளர் சேவை மற்றும் துரிதமான இணைப்பு என்பனவற்றின் ஊடாக நிலையான ஒரு சந்தையை உருவாக்க செயற்படும்.

### விமான நடவடிக்கைகள்

விமானப் பயணத் துறையில் பாதுகாப்பு முக்கியமான ஒரு அடிப்படைத் தேவையாகும். இதில் எந்தவித கருத்து வேறுபாடும் இல்லை. நிலையான மற்றும் சிறந்த பெறுபேறுகளை அடைந்துகொள்ள நாம் ஆளுமை மற்றும் தராதர தேவைப்பாடுகள், பயிற்சி, விமானங்களின் செயற்பாட்டு அம்சங்கள் ஆகியனவற்றை மூன்று பிரதான விமானிகளின் கீழ் செயற்படுத்தி வருகின்றோம். எமது விமான சேவை நிறுவனம், தொடர்ச்சியாக நிலையான தன்மையைப் பேணி, பாதுகாப்புத் தேவைப்பாடுகளில் உலக தரங்களில் எவருக்கும் நிகரற்ற நிலையில் காணப்படுகின்றது. குறித்த ஆண்டில் எமது விமான சேவை 34,477 பயணங்களை மேற்கொண்டுள்ளது. 5.8 மில்லியன் வாடிக்கையாளர்களை 20 நாடுகளின் 40 பயண முடிவுகளுக்குச் சுமந்து சென்றுள்ளது. 320 திறமையான தேர்ச்சிபெற்ற விமானிகளைக் கொண்டு அது இயங்கி வருகிறது.

### விமான செயற்பாட்டு கட்டுப்பாட்டு நிலையம் (AOCC)

AOCC என்பது, விமானத் துறையில் மிக முக்கியமான ஒரு நிறுவனமாகும். பிரசுரிக்கப்பட்ட அட்டவணைக்கு அமைய செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் அதேவேளை, எதிர்பாராத நிலைகளின் போது பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து விமானப் போக்குவரத்தினை சீராக்குவதில் முக்கிய பங்கை வகித்து வருகின்றது. AOCC வாரத்தின் 7 நாட்களும் 24 மணித்தியாலமும் என்ற அடிப்படையில் செயற்பட்டு வருகிறது. ஆர்வமுள்ள சகலருடனும் இணைந்து வலையமைப்பை பேணி செயற்பட்டு வருகின்றது. திட்டமிடல், மேற்பார்வை, திடீர் தேவைப்பாடுகளை மதிப்பீடு செய்தல், நாளாந்த நடவடிக்கைகளை முன்னெடுத்தல், வாடிக்கையாளரின் வசதி, செயற்பாட்டு செயற்திறன், செலவு சிக்கனம் என்பன இவர்களின் செயற்பாட்டு நடவடிக்கைகளாகும். AOCC ஆனது, உரிய நேரத்துடன் செயற்பாடு என்பதன் ஒரு மையமாக காணப்படுவதோடு, விமானங்களின் புறப்படுதல் பயண அட்டவணைகள் ஆகக் குறைந்த தரை நேரங்கள் என்பனவற்றை உறுதிப்படுத்தவும் செயற்பட வேண்டும். நேரத்தை சரிவர மேற்பார்வை செய்வது ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ள வேண்டிய ஒரு செயற்பாடாகும். AOCC யின் மொத்த வலையமைப்பு சகல ஆர்வம் காட்டுவோரும் மேற்கூறப்பட்ட தேவைப்பாடுகளை சரிவர மேற்கொள்ளும் வரையில் அதன் செயற்திறன் உறுதியாகப் பேணப்படும். எமது விமான சேவை சராசரி சரியான நேர செயற்பாட்டை 80% <15 (15 நிமிடங்களில் புறப்படுதல்) மற்றும் 82% < 15 (15 நிமிடங்களில் வருகை தருதல்) என்ற பெறுபேறுகளை தொழிற்துறையின் சராசரியான 85% <15 நிமிடத்துடன் ஒப்பிடுகையில் பேணியுள்ளது.

விமானப் பயண நிலையம் (FDC) AOCC யின் கீழ் செயற்படுவதோடு, விமானங்களைப் பயணத்திற்கு தயார் படுத்துதல், சர்வதேச தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல், பாதைகளின் உறுதிப்பாடு, அதிகபட்ச நேரத்தை ஏற்றுதல் மற்றும் இறக்குதலுக்குப் பெற்றுக்கொடுத்தல் என்பனவற்றை உறுதிப்படுத்துகிறது. மேலும், FDC சர்வதேச எரிபொருள் விலையின் மீது தொடர் கவனத்தைப் பேணி வருகிறது. விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பும் போது, மிகச் சிறந்த எரிபொருள் பயன்பாட்டை உறுதிப்படுத்தவும் செயற்பட்டு வருகின்றது. எமது நிறுவனம், இதன் மூலம் குறித்த ஆண்டில் அதிகூடிய அனுகூலங்களை அடைந்து கொண்டது. மேலும், வெளிநாட்டு விமானங்களுக்கு சேவைகளை வழங்கி FDC மேலதிக வருமானத்தையும் பெற்றுக்கொண்டது.

### எரிபொருள் அவதானிப்பு

விமான சேவை நிறுவனம் ஒன்றின் செலவுகளில் முக்கிய பங்கை எரிபொருள் வகித்து வருகிறது. விசேடமாக சர்வதேச சந்தைகளில் காணப்படும் எரிபொருள் விலை மாற்றம் இதற்குப் பிரதான காரணமாகும். விமான எரிபொருள் (ஜெட் A-1) இன் பயன்பாட்டை விமான செயற்பாட்டுத் திணைக்களம் சரிவர முகாமைத்துவப்படுத்துவது மிக முக்கியமாகும். இதன் மூலம் செலவினத்தை குறைக்கவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். விமான எரிபொருளின் மேற்பார்வையை மிகக் கடினமாக மேற்கொள்ள வேண்டும் என்பதனால், அனைத்து ஆர்வம் காட்டுவோருக்கும் அது பற்றிய அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொடுத்து, சரியான அளவீடுகள் மற்றும் விநியோகம், திட்டமிடல் மற்றும் எரிபொருள் பாவனைக்கு முக்கியமான அம்சங்கள் பயணிக்கும் தொழிநுட்பங்கள், திறமையான விமானங்களின் செயற்பாடுகள் ஆகியன அனைத்தும் இதற்கு மூலகாரணமாக அமைந்திருக்கின்றன.

சர்வதேச தரப்படுத்தலில் எரிபொருள் பயன்பாட்டு செயற்திறனுக்கு 15ஆம் இடத்திலும், சமமான வர்த்தக பிரிவுகளில் 8 ஆம் இடத்திலும் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் நிறுவனம் இடம்பெற்றிருந்தது. 2017 ஆம் ஆண்டின் பெறுபேறுகள் இதுவரை வெளியிடப்படவில்லை.

### திடீர் நடவடிக்கைத் திட்டம் (ERP)

விமானப் பயணத்துறையில் திடீர் நிகழ்வுகளுக்கு முகம் கொடுக்கத் தயாராக இருத்தல் ஒரு முக்கிய தேவைப்பாடாகும். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் எப்போதும் இதனை தமது அடிப்படை கோட்பாடாகப் பேணி வருகிறது. குழும திடீர் நடவடிக்கைத் திட்டமானது, நன்கு திட்டமிடப்பட்டு அனைத்து ஆர்வம் காட்டுவோருக்கும் விளக்கமளிக்கப்பட்டு அமுலில் உள்ள ஒன்றாகும். இதற்காக தொடர் பயிற்சிகள், செயற்பாடுகள் என்பனவற்றை மேற்கொண்ட அனைவருக்கும் ஒரு விழிப்புணர்வை பெற்றுக்கொடுத்து, செயற்பாடுகளை முன்னெடுக்கும் முறையை ஒரு திடீர் தேவைப்பாட்டின் போது அனைவரும் அறிந்திருக்கும் வகையில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விமான நடவடிக்கைகள் பிரிவின் தலைவரினால் இந்த விசேட பகுதி மேற்பார்வை செய்யப்படுகின்றது.

### விமானத்திற்குள்ளான சேவைகள்

*விமானத்திற்குள்ளான நிர்வாகம்*

ஸ்ரீலங்கன் வர்த்தகப் பெயரின் பெறுமதிகளை தொடர்ந்தும் பேணுவதில் நாம் செயற்பட்டு வருகின்றோம். எமது உபசரணையை எப்போதும் நாம் வெளிப்படுத்தியே வருகின்றோம். எமது பணியாளர்கள்

## முகாமைத்துவக் கலந்துரையாடல் தொடர்ச்சி.

நன்கு பயிற்சிகளைப் பெற்று, சிறந்த வாடிக்கையாளர் சேவையை விமானத்தினுள் பெற்றுக் கொடுக்கின்றனர். எமது ஈடுபாடு, வாடிக்கையாளர் ஆய்வுகள் என்பனவற்றின் ஊடாக வர்த்தகப் பிரிவில் விமானத்தின் உள்ளான அனுபவம் 90% தரப்படுத்தலைப் பெற்றுள்ளது.

குறித்த நிதியாண்டில் மேற்கொள்ளப்படட் முக்கிய செயற்பாடுகள் -

- **அனைவரையும் ஈடுபடுத்துதல்:** ஸ்ரீலங்கன் வர்த்தகப் பெயரின் பெறுமதியை உறுதிப்படுத்தும் வகையில் விமானத்தின் உள்ளேயான முகாமைத்துவக் குழு அனைவரையும் ஈடுபடுத்திய ஒரு கலந்துரையாடலை மேற்கொண்டது. இந்தக் கலந்துரையாடலின் போது, அவர்களின் செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை, வர்த்தகப் பெயரின் பெறுமதியைப் பேணுதல், ஊழியர்களின் உதவியை பெற்றுக்கொள்ளுதல் ஆகிய தலைப்புகள் கலந்துரையாடப்பட்டன. இந்தக் கலந்துரையாடலின் போது, சகல ஊழியர்களிடையயும் ஒவ்வொருவருக்கும் இடையிலான இணைப்பை அதிகரித்து, வாடிக்கையாளருக்கு மிகச் சிறந்த தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கவும், வாடிக்கையாளர் சேவை, உற்பத்தி அபிவருத்தி, பொறியியல் வளர்ச்சி மற்றும் ஆளுமை என்பனவற்றுடன் அன்றாடம் பரிமாறப்படும் உணவு மற்றும் பானங்கள் பற்றியும் இங்கு கலந்துரையாடப்படுகின்றது
- **ஊழியர்கள் தினம்:** ஊழியர்களை தொடர்ந்தும் இணைத்துக் கொண்டிருப்பதற்கான விமானத்தின் உள்ளேயான சேவைகள் தொடர்பாக ஊழியர் தினத்தில் மாதாந்தம் கலந்துரையாடி விமானத்திற்கு உள்ளேயான முகாமைத்துவக் குழு, பயண முடிவிலிருந்து வரும் ஊழியர்களை காலை 5.00 மணி முதல் மாலை 5.00 மணி வரையான காலப்பகுதியினுள் சந்தித்து, கருத்துக்களைப் பெற்றுக்கொள்கின்றன. இதன் மூலம், ஊழியர்களிடையே தொடர்பாடலை அதிகரித்து, அவர்களுக்கு உள்ள பிரச்சினைகளைத் தீர்த்து, சுமுகமான முறையில் நடவடிக்கைகளை முன்னெடுக்க உதவி புரிகிறது.
- **ஊழியர்களின் விடுமுறைகளை மேற்பார்வை செய்தல்:** கடுமையான முறையில் விமானத்தினுள் பயணிக்கும் ஊழியர்களின் விடுமுறைக் கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதனால் சுகவீன விடுமறை அறிவிப்புக்கள் 30% ஆல் குறைவடைந்துள்ளது.
- **தொடர்ச்சியான சேவைப் பயிற்சி:** தொடர்ச்சியாக பெற்றுக்கொடுக்கப்படும் சேவைகள் சம்பந்தமாக பயிற்சியளிக்கப்பட்டு, ஊழியர்களின் சீரான மற்றும் தரமான சேவை வழங்கல் உறுதிப்படுத்ப்பட்டது.
- **வர்த்தகப் பிரிவுச் சேவை:** வர்த்தகப் பிரிவு அறைகளில் அதற்கென நியமிக்கப்பட்ட பணிப்பெண்களை சேவையில் அமர்த்தி வர்த்தகப் பிரிவில் பயணிக்கும் பயணிகளுக்க மிகச் சிறந்த செவை உறுதிப்படுத்தப்பட்டது.

### *விமானத்திற்குள்ளேயான உதவிச் சேவைகள்*

விமானத்திற்குள்ளேயான உதவிச் சேவைகள், தொடர்ச்சியான செயற்திறனை அதிகரித்து, சிக்கனப்படுத்தல்களில் ஈடுபட்டு வருகின்றது. இந்தப் பிரிவு, விமானத்திற்குள்ளேயான வெளியீடுகள், விமானத்தினுள் பயன்படுத்தப்படும் துணி வகைகள், ஏனைய சேவைகள் மற்றும் உணவு உட்கொள்ளும் கருவிகள் ஆகியவற்றில் 389,000 அமெரிக்க டொலர் சேமிப்புக்களை மேற்கொண்டுள்ளது. தரத்தில் எவ்வித குறைபாடுகளும் ஏற்படாத வகையில் உணவு வகைகளில் செலவினம் குறைக்கப்பட்டு சேமிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருந்த போதிலும், வாடிக்கையாளர்களின் உணவு மற்றும் பானங்களுக்கான தரப்படுத்தலில் எந்தவித குறைவையும் ஏற்படுத்தாது இவை பேணப்பட்டு வந்துள்ளன. உணவுப் பொருட்களின் செலவினக் குறைவு சுமார் 106,000 அமெரிக்க டொலர்களாக நாட்டிற்கு வெளியேயும் கொழும்பில் அது 255,000 அமெரிக்க டொலர்களாகவும் காணப்பட்டுள்ளது. இவ்வருடம், நாம் எமது சிக்கன பிரிவு வாடிக்கையாளர்களுக்கு 'பயணத்தின் போது கொள்வனவு' என்ற நடைமுறையை அறிமுகப்படுத்தி, மேலதிக வருமானம் பெறப்பட்டு வருகிறது. மேலும், இந்தப் பிரிவு, உணவு தள்ளுவண்டிகளைத் திருத்தி, மீளமைத்து, மீள் பாவனைக்குப் பயன்படுத்தி வருகிறது. இதன் மூலம் புதிய கருவிகளைக் கொள்வனவு செய்யாது சிக்கனமான முறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### *விமானத்திற்குள்ளேயான தீர்வையற்றவை*

முதல் முறையாக விமானத்திற்குள்ளேயான தீர்வையற்ற விற்பனை 2017 ஜூன் 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, 2018 ஜூலை 02 ஆம் திகதி அது முடிவுக்கு வந்தது. விமானத்திற்குள்ளேயான தீர்வையற்ற விற்பனை மூலம் மாதாந்த சராசரி இலாபமாக 210,000 அமெரிக்க டொலர் கிடைக்கப் பெற்றது. தினசரி சராசரி வருமானம் 15,000 அமெரிக்க டொலர்களாகும்.

### *விமானத்திற்குள்ளேயான பயிற்சி*

சிறந்த சேவைத் தரங்களைப் பேணுவதற்கு விமானத்திற்குள்ளேயான நடவடிக்கைகளை பயிற்சி நடவடிக்கைகளாக ஊழியர்களுக்கு நாம் பெற்றுக் கொடுத்துள்ளோம். மிகச்சிறந்த பயணிகள் சேவையை விமானத்தில் பெற்றுக்கொடுப்பதை உறுதிப்படுத்தும் வகையில் நாம் பயிற்சித் திட்டம் ஒன்றை மீண்டும் ஆரம்பித்துள்ளோம். இந்தப் பயிற்சித் திட்டத்தின் மூலம் சிக்கன மற்றும் வர்த்தகப் பிரிவின் சேவைத் தேவைகள், செயற்பாட்டு நடவடிக்கைகளின் தராதரங்கள், வாடிக்கையாளர்களின் கருத்துக்கள் மற்றும் வாடிக்கையாளர்களுடனான ஈடுபாடு என்பன தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்பட்டன. வர்த்தகப் பிரிவு பயணிகளுக்கென்றே விசேடமாக உருவாக்கப்பட்ட விசேட சேவைப் பயிற்சிகளும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு ஊழியர்களைத் தெரிவு செய்கையில், அவர்களின் சிரேஷ்டத்துவம், Body mass index (BMI), வருகை மற்றும் நடவடிக்கைகளின் பெறுபேறுகள் என்பன கவனத்திற் கொள்ளப்பட்டன.

### *விமானத்திற்குள்ளேயான செய்திகள்*

விமானத்தினுள் ஊழியர்களுக்கான மாதாந்த செய்தி சஞ்சிகை ஒன்று வெளியிடப்பட்டது. விமானத்திற்குள்ளான திணைக்களத்தின் அபிவிருத்தி, நிகழ்வுகள், அறிவிப்புக்கள், ஊழியர்களின் விசேட செயற்பாடுகள் மற்றும் தொழிற்துறை தகவல்கள் என்பன இதில் அடங்கும். இந்த சஞ்சிகை மூலம் 1,300 விமானப் பயண ஊழியர்களை சிறந்த விளக்கத்தோடு கொண்டிருத்தல் உறுதிப்படுத்தப்படுகிறது.

### *விமானத்தினுள்ளான எதிர்கால நோக்கு*

விமானத்தினுள்ளான சேவைகள் தொடர்ச்சியாக உபாயகரமான முக்கியத்துவத்தை அடைந்து வருகிறது. எதிர்வரும் ஆண்டில் ஸ்ரீலங்கன் வர்த்தகப் பெயருடன் இணைந்த மேலதிக பெறுபேறுகளை இதன் மூலம் வெளிப்படுத்த வேண்டியுள்ளது. இதற்கமைய, ஊழியர்களின் பயிற்சிக்காக மற்றும் அதன் மூலம் தரம், சேவை நிலை என்பனவற்றை அதிகரிப்பதற்காக நாம் தொடர்ந்தும் முதலீடுகளை மேற்கொண்டு வருகின்றோம். சேவை நிலைகள் மாத்திரமன்றி, செயற்பாட்டு செலவினத்தைக் குறைக்கவும், நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கின்றோம். ஊழியர்களின் செயற்பாட்டு அறிக்கைகளைத் தயாரிப்பதை தன்னியக்க செயற்பாடாக மாற்றி, எரிபொருள் செயற்திறன், சகல விமானங்களிலும் பயன்படுத்தப்படும் பொருட்களினதும் எடையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும்.

## வர்த்தகப் பிரிவுகள் மீளாய்வு

### ஸ்ரீலங்கன் விமான நிலையம் மற்றும் தரைச் சேவைகள்

*செயற்பாடுகள்*

எமது செயற்பாடுகள் எப்போதும் பாதுகாப்பான, துல்லியமான சேவையை நோக்கி அமைந்துள்ளது. இதே நோக்குடன் விமான நிலையம் மற்றும் தரைச் சேவைகளும் 2017/18 ஆம் நிதியாண்டை சிறப்பாக முன்னெடுத்து வந்தது. ஆய்வுக்குட்பட்ட ஆண்டில், இந்த திணைக்களம் 13% மற்றும் 21% வேலைக் கொள்ளளவு மற்றும் நிகர வருமானம் ஆகிய பிரிவுகளில் வளர்ச்சியை அடைந்துள்ளது.




செயற்பாட்டு நடவடிக்கைகளில் கணிசமான அளவு அதிகரிப்பை தேசிய விமான நிறுவனம் என்ற ரீதியில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அடைந்து கொண்டது. அதிகரிக்கப்பட்ட பயண முடிவுகள் மற்றும் விமானங்களின் எண்ணிக்கை காரணமாக 53% அதிகரித்த விமானப் பயணங்கள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் முன்னெடுத்தது. பயணிகள் மற்றும் சரக்கு ஆகிய இரு பிரிவுகளும் 14% வருமான வளர்ச்சி காரணமாக அமைந்தது. அதற்கு முந்திய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் இந்த வளர்ச்சி அடையப் பெற்றுள்ளது. மொத்த வருமானத்திற்கு 103.98 மில்லியன் அமெிக்க டொலர்களை இது பெற்றுக்கொடுத்தது. இதவரை காலம் அடைந்து கொண்ட அதிகூடிய நிகர வருமானமான 61.55 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இதன் போது அடையப்பெற்றன.

சரக்கு தொன்கள் கையாள்கை




விமான நிலைய சேவைகள் அதிகரித்த வர்த்தக செயற்பாடுகளை அடைந்து கொண்டதோடு, புதிய உடன்படிக்கைகளை பங்காளிகளுடன் கைச்சாத்திட்டு இன்டிகோ, சில் எயார், சைனா சதர்ன், கல்ப் மற்றும் என்டர் எயார்லைன் ஆகிய நிறுவனங்களுடன் வர்த்தகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. விமான நிலையம் மற்றும் தரைச் சேவைகளினால் 65,090 விமானங்கள் செயற்படுத்தப்பட்டன. மொத்த பயணிகளின் எண்ணிக்கை 10.6 மில்லியனாக அமைந்திருந்தது.

விமான நிலைய சேவைகள் இப்பிரிவின் வருமானத்திற்கு 79 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுக்கொடுத்தது.

குறித்த திகதி வரை சரக்கு கையாளல்கள் அதிகூடிய தொன்களைப் பதிவு செய்து, 277,000 தொன்களுடன் 99.95% செயற்திறனை முழு ஆண்டிலும் பேணி வந்துள்ளது. குறித்த ஆண்டின் மொத்த வருமானத்தில் சரக்கு கையாளல் நடவடிக்கைகளினால் கிடைப்பது 25 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அமைந்திருந்தது. டிஜிட்டல் மயப்படுத்தலின் முக்கியத்துவத்தை அறிந்த சரக்கு போக்குவரத்துத் துறையானது, பல்வேறு முக்கிய புதிய அறிமுகங்களை அதாவது, பாவனையாளர்களை ந-யசை-ஞயல-டிடைடள இனைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டன. இதன்மூலம் கொழும்பு சந்தையில் 70% டிஜிட்டல் மயப்படுத்தல் செயற்பாடுகளைக் காணக்கூடியதாக இருந்தது.

### முக்கிய முன்னேற்றங்கள்

விமான நிலையம் மற்றும் தரை சேவைகள் பிரிவு குறித்த ஆண்டில் பல முக்கிய செயற்பாடுகளை முன்னெடுத்தது. இவற்றின் ஊடாக சேவை மற்றும் செயற்பாட்டுத் தரங்களை முன்னேற்றி செயற்திறனை அதிகரித்து பயணிகளுக்கு சிறந்த உட்கட்டமைப்பு பொதிகள் பயன்பாடு ஆகிய வசதிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

- எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்படும் சேவைகளை மேலும் தரமுயர்த்தும் வகையில், ஆலோசனை நிறுவனங்கள் மற்றும் தொழிற்துறை வல்லுநர்களுடன் இணைந்து சேவை மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- விமான நிலைய செயற்பாட்டாளர், விமான நிலையம் மற்றும் விமான பயண சேவைகள், ஸ்ரீலங்கா நிறுவனம் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட்டு உட்கட்டமைப்பு செயற்பாடுகள் மற்றும் பொதிகள் பரிசோதனை செயற்பாடுகளை தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- தரைச் சேவை வழங்கும் கருவிகளை மீளமைப்பதற்கான முதலீடுகளை மேற்கொள்வதற்கு முன்னுரிமைக் கோரல்கள் வழங்கப்பட்டன.
- சிறந்த சேவைகளை மேற்கொள்ளும் ஊழியர்களுக்கு மேலதிக அனுகூலங்களைப் பெற்றுக்கொடுத்து சேவையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- செயற்பாட்டுத் தேவைகளுக்கு ஏற்ப புதிய கடமை நிரல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- ஊழியர்களின் தொழில் அறிவை வளர்க்கவும், திறமையை வளர்க்கவும் பயிற்சித் திட்டங்கள் அறிமுகப்பபடுத்தப்பட்டன.
- பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதிப்படுத்த அறிவுப் பரிமாற்ற நிகழ்ச்சிகள், ஆளுமை கணக்காய்வுகள், விழிப்புணர்வு நடவடிக்கைகள் என்பன நடத்தப்பட்டன.
- முழு நிறுவனமும் ஒன்று சேர்ந்து, பசுமை சவால் என்ற சூழலை மையமாகக் கொண்ட செயற்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு, பொலித்தீன் உற்பத்திகளைக் குறைப்பதற்காக முன்வைக்கப்பட்ட முன்மொழிவு வெற்றிபெற்று செயற்பாட்டுக்கு வந்துள்ளது.

### ஆளுமை மற்றும் கௌரவம்

விமான நிலைய மற்றும் தரைச் சேவைகள் பல்வேறு சட்டதிட்டங்களுக்கு அமையவும், சர்வதேச விமானப் பயணக் கட்டுப்பாட்டு நிறுவனங்களின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதாகவும் இருக்க வேண்டும். இவற்றில் முக்கியமாக IATA பாதுகாப்புக் கணக்காய்வு தரைச் செயற்பாடுகளின் போது பூர்த்தியடைந்திருக்க வேண்டும். (ISAGO) மற்றும் IATA செயற்பாட்டு பாதுகாப்புக் கணக்காய்வு (IOSA) ஆகிய கணக்காய்வும் பூர்த்தி

## முகாமைத்துவக் கலந்துரையாடல் தொடர்ச்சி.

செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அடுத்து வரும் ஆண்டுக்கான கணக்காய்வுகளை எதிர்நோக்க எமது குழு தயாராகவுள்ளது.

குறிப்பிட்ட வருடத்தில் விமான நிலையம் மற்றும் தரைச் சேவைகள் பிரிவு கொரியன் எயார் நிறுவனத்தினால் கௌரவிக்கப்பட்டு, அந்த நிறுவனத்தின் தொடர்ச்சியான உதவி மற்றும் ஒத்துழைப்பு என்பனவற்றைக் கருத்திற் கொண்டு அதனால் மேற்கொள்ளப்பட்ட உள்ளக சேவைத் தர மதிப்பீட்டின் போது தென் கிழக்காசியாவின் மிகச் சிறந்த சேவைத் தரத்தைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய தரை சேவை நிறுவனமாக ஸ்ரீலங்கன் நிறுவனத்தைத் தெரிவு செய்தது. அத்துடன், 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 100% உதவி மற்றும் பாதுகாப்பு உறுதிப்பாடு என்பனவற்றுக்காக மலேசியன் எயார்லைன்ஸ் நிறுவனமும் எமது விமான நிலையம் மற்றும் தரைச் சேவைகளுக்கு கௌரவிப்பு விருதுகளைப் பெற்றுக்கொடுத்துள்ளது.

### எதிர்கால நோக்கங்கள்

விமான நிலையம் மற்றும் தரைச் சேவைகள் என்பன எதிர்வரும் காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள மீளமைப்புக்களை வெற்றிகரமாக எதிர்நோக்கி, செயற்திறன்மிக்க சூழல் ஒன்றையும், அதன்மூலம் போட்டிகளை விஞ்சிய சிறப்புப் பெறுபேறுகளை அடைந்துகொள்ளவும் எதிர்பார்க்கப்படுகின்றது. சகல செயற்பாடுகளின் போதும், வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பு, துல்லியம் மற்றும் சேவைகளை நிறுவனம் உறுதிப்படுத்தியது.

### ஸ்ரீலங்கன் பொறியியல்

ஸ்ரீலங்கன் பொறியியல், எமது உள்ளக விமானப் பராமரிப்புப் பிரிவு ஒரு வெற்றிகரமான வருடம் ஒன்றாக 2017/18 ஐ அடைந்ததுள்ளது. இந்தப் பிரிவு, மிகப்புதிய பராமரிப்பு, பழுதுபார்ப்பு மற்றும் செயற்பாட்டுப் பிரிவு ஒன்ளை உருவாக்கி தனிப்பட்ட உற்பத்தி வரிசைகளை அமைத்து, ஒரே நேரத்தில் பல்வேறு பராமரிப்புக்களை மேற்கொள்ளும் வசதிகளை ஏற்படுத்தியது. இதற்கமைய, எமது செயற்பாடுகள் இப்போது 'A' Check மற்றும் 'C' Check களை மேற்கொண்டு பராமிப்புக்களை 4C/6Y வரை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. புதிய மாற்றங்களின் மூலம் பராமரிப்பு செயற்பாடுகள் மேலும் தரமுயர்த்தப்பட்டு, செயற்திறன் அதிகரிக்கப்பட்டு, விமானங்களின் பராமரிப்புக் காலம் குறைவடைவதற்கு உதவியுள்ளது. மேலும், எமது ஒவ்வொரு வரிசை பராமரிப்பு பிரிவுகளினதும் செயற்பாடுகளைத் தரமுயர்த்தி, எமது மூன்றாம் தரப்பினர் மூலமான வருமானத்தை அதிகரிக்கும் வகையிலான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதிய "M" பிரிவு சட்ட திட்டங்களுக்கு (CAASL-IS Part M) அமைவாக விமான செயற்பாடுகளை முகாமைத்துவப்படுத்தி, பல்வேறு உள்ளக செற்பாடுகளில் மாற்றங்களை மேற்கொண்டு, முகாமைத்துவத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தி, புதிய பெறுபேறுகளை அடைந்துகொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

குறித்த வருடத்தில் நாம் 09 கனரக பராமரிப்புப் பரிசோதனைகளை விமானங்களில் மேற்கொண்டுள்ளது. அவற்றில் இரண்டு 12 Y பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. எமக்கு மூன்று புதிய எயார்பஸ் A320 நியோ விமானங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. எமது பொறியியல் பிரிவு தொழில்நுட்ப செயற்பாடுகளில் முக்கிய பணிகளை மேற்கொண்டு விமானங்கள் மற்றும் அதன் கருவிகள் எஞ்ஜின் உற்பத்தியாளர்கள், குத்தகைக்காரர்கள் ஆகியோருடன் இணைந்து செயற்பட்டு சர்வதேச ரீதியில் A320 நியோ இல் காணப்பட்ட சிக்கல்கள் பற்றி நன்கு அறிந்து கொண்டனர். அனைத்து பிரிவுகளுடனும் நெருங்கி செயற்பட்ட அவர்கள் ETOPS செயற்பாடுகள் மற்றும் எஞ்ஜின் நிலை பரிசோதனை ஆகியனவற்றில் எஞ்ஜின் உற்பத்தியாளர்களுடன் இணைந்து செயற்பட்டனர். விமான உற்பத்தியாளரான எயார் பஸ் நிறுவனத்திற்கு அமைய ஸ்ரீலங்கன் நிறுவனத்திடமுள்ள A320 நியோ விமானங்கள் நம்பகத் தன்மையில் அதிகூடிய பெறுபேறுகளைப் பெற்ற நிலையில் காணப்படுகிறது. சர்வதேச சராசரி வீதங்களைவிட அதிகளவு பயன்பாட்டை இவற்றின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவித்துள்ளது.

குறித்த ஆண்டில் எமது உட்கட்டமைப்பு வசதிகள் தரமுயர்த்தப்பட்டுள்ளன. சர்வதேச தேவைப்பாடுகளுக்கு அமைய, மெல்லிய உடலமைப்பைக் கொண்ட விமானங்களை நிறுத்தி வைத்திருப்பதற்கு உரிய வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது அகலமான உடலமைப்பைக் கொண்ட விமானங்களுக்கான தரிப்பிட வசதிகளை அமைப்பதற்கான மேலதிக திருத்தப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இது 2018/19 ஆம் ஆண்டில் அமுலுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பொறியியல் பிரிவு எதிர்வரும் வருடங்களில் தமது செயற்பாடுகளை மூன்றாம் தரப்பினருக்கும் பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கிறது. விமானங்களை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களை பெற்றுக்கொடுக்கவும், மேலதிகப் பழுதுபார்ப்புகளுக்கு அனுமதி பெறவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளன.

### ஸ்ரீலங்கன் ஏவியேசன் கொலேஜ்



**தெற்காசிய வலயத்தில் 2018 ஆம் ஆண்டில் மிகச் சிறந்த பயிற்சி நிலையம்**
SLAC IATA சர்வதேச வலய பயிற்சிப் பங்காளிகள் கருத்தரங்கு இஸ்தான்புல் துருக்கி
16-18 ஏப்ரல் 2018 இன் போது கௌரவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கன் ஏவியேசன் கொலேஜ் (SLAC), ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் பயிற்சிப் பிரிவாகும். குறித்த ஆண்டில், குறிப்பிடத்தக்க அளவு பெறுபேறுகளை வெளிப்படுத்தி, பல முக்கிய செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது. சர்வதேச ரீதியில் மிகவும் மதிக்கத்தக்க பயிற்சி மற்றும் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து விமானப் பயணக் கல்வி தொடர்பாக சிறந்த மாணவர்களையும், தொழில் வல்லுநர்களையும் உருவாக்கி வருகிறது. துருக்கியில் இடம்பெற்ற IATA சர்வதேச வலய பயிற்சிப் பங்காளிகள் கருத்தரங்கின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட கௌரவிப்பு இதற்கு சிறந்த சான்றாகும். குறித்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயற்பாடுகளில் சில பின்வருமாறு:

- **பொறியியல் இளமானி பாடநெறி:** எமது நிறுவனம் லண்டனின் கிங்ஸ்டன் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாதிட்டு, விமான பொறியியல் துறையில் பொறியியலில் இளமாணி (கௌரவ) Top-up

பட்டப்படிப்பை இலங்கையில் பெற்றுக்கொடுக்கிறது. இது ஐக்கிய இராச்சியத்தில் 2001 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு மாணவர்களுக்கு 'EASA B பயிற்சி சான்றிதழ் வழங்கப்பட்டு கௌரவ பட்டத்துடன் றோயல் ஏரனோட்டிகல் சொசைட்டியினால் அங்கீகாரத்துடன் பெற்றுக்கொடுக்கப்படுகிறது. EASA பிரிவு 66/ CAASL IS 66 அனுமதிப்பத்திரம் அல்லது சமமான B பிரிவு விமானப் பழுதுபார்ப்பு பொறியியல் பாடநெறியைக் கற்பதற்கு அல்லது Top-up பட்டத்தை பகுதிநேர அடிப்படையில் மேற்கொள்வதற்கு வாய்ப்பை வழங்குகிறது. கிங்ஸ்டன் பல்கலைக்கழகத்தின் தேர்ச்சி பெற்ற விரிவுரையாளர்களின் உதவியுடன் சிறந்த ஊழியர்களை உருவாக்குவதற்கு தேவையான பாடநெறிகள் இங்கு கற்பிக்கப்படுகின்றன.

- **விஞ்ஞான இளமானி:** SLAC சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் (JDU) உடன் இணைந்து குறித்த வருடத்தில் புதிய பாடநெறி ஒன்று அதாவது, விமானப் பழுதுபார்ப்பு பொறியியல் துறையில் விஞ்ஞான இளமானிப் பட்டத்தை அறிமுகப்படுத்தியது. இந்த அடிப்படையில் முதலாவது மாணவர் குழு 2018 ஏப்ரல் மாதம் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பித்தது. இந்த நான்கு வருட பட்டப் படிப்பின் போது, மாணவர்கள் விமான பழுதுபார்ப்பு பொறியியலாளர்களாக வெற்றிகரமாக தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வருவார்கள்.
- **செயன்முறைப் பயிற்சி:** எமது கல்லூரி செயன்முறைப் பயிற்சிகளை மாணவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்காக பல்வேறு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. பயன்படுத்த முடியாத இரண்டு விமானங்களைக் கொள்வனவு செய்து, பயிற்சிப் பிரிவில் அமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், SLAC முழுமையான செயற்பாடுகளைக் கொண்ட சகல வசதிகளுடனும் கிளை ஒன்றை கொழும்பில் ஆரம்பித்துள்ளது.
- **பலதரப்படுத்தல் மற்றும் மீளப் பெயரிடுதல்:** விமானப் பயண பாடநெறிகளைத் தவிர மேலும் பல உள்ளக மற்றும் வெளியகப் பயிற்சி செயற்பாடுகளை முன்னெடுக்கவும் கல்லூரி நடவடிக்கை மேற்கொண்டது.
- **புதிய பெயரிடல்:** கல்லூரியின் புதிய பெயரிடல் செயற்பாடுகள் மற்றும் அதன் மூலம் கல்லூரியின் பெறுமதியை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கமைய SLAC கல்வி ஆலோசகர் ஒருவரை சகல கல்வி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்வதற்காக செயலமர்த்தி பல்கலைக்கழகம் ஒன்றின் அங்கீகாரத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து பெற்றுக்கொள்ள ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.
- **சூழலுக்குப் பாதிப்பற்ற பயிற்சிகள்:** எமது கல்லூரி தொடர்ச்சியாக சூழலுக்குப் பாதிப்பற்ற முறையில் பயிற்சிகளை முன்னெடுத்து வருகிறது. காகிதங்கள் அற்ற செயற்பாடுகளை எப்போதும் கருத்திற் கொண்டு செயற்பட்டு வருகிறது. மேலும், எமது கல்லூரி ஊழியர்களிடமும் பொலித்தீன் மற்றும் லஞ்ச் சீட் போன்றவற்றைப் பயன்படுத்தாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காகிதம், நீர், சக்திவலு ஆகியவற்றைப் பொறுப்புடன் பயன்படுத்தும் விழிப்புணர்வுத் திட்டத்தை நாம் ஏற்படுத்தியுள்ளோம்.

## ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டெட்

*செயற்பாடுகள்*

ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டெட் நிறுவனமானது, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தினால் முழுமையாக உரிமம் கொள்ளப்பட்ட ஒரு நிறுவனமாகும். பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்ள சகல விமானங்களுக்கும் விமானத்தினுள் உணவுத் தேவைகளை இது பெற்றுக்கொடுக்கிறது. ஸ்ரீலங்கன் கேட்டரிங் நிறுவனம் மற்றுமொரு வெற்றிகரமான வருடத்தைப் பதிவு செய்துள்ளது. பல்வேறு செயற்பாட்டு அபிவிருத்திகள் மூலம் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் இலாபத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளது. கடந்த 10 வருட காலமாக ஸ்ரீலங்கன் கேட்டரிங் நடவடிக்கைகள் சிறந்த செயற்பாடுகளை வெளிப்படுத்தி, அதன் திறமைகளைக் காண்பித்துள்ளது. நிறுவனம் அதன் பங்குதாரர்களுக்கு சிறந்த அனுகூலங்களைப் பெற்றுக்கொடுத்து, கடினமான வர்த்தக சூழல்களின் போதும் இலாபத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

விமானத்திற்கு உள்ளேயான உணவு வழங்கலைத் தவிர இடைத்தங்கல் பயணிகளுக்கு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தள சர்வதேச விமான நிலையத்தில் உணவகச் சேவைகளையும் முன்னெடுத்து வருகிறது. அதன் மேலதிக வர்த்தக செயற்பாடுகளாக செரன்டிவா டிரான்சிட் ஹொட்டேலை முகாமைத்துவப்படுத்துவதுடன், தொழில்சார் ஆடை சலவை நிறுவனம் ஒன்றையும், கொழும்பு கோட்டை டச் வைத்தியசாலையில் வெனிலாபொட் மற்றும் சேமொண்டு உணவகம் என்பனவற்றையும் முகாமைத்துவப்படுத்தி வருகிறது.

*வருமானம்*

ஸ்ரீலங்கன் கேட்டரிங் நிறுவனம் அதன் நடவடிக்கைகளை சிறந்த முறையில் முன்னெடுத்து, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், வருமான அதிகரிப்பை 19.14% இனால் மேற்கொண்டு ரூபா 8,598 மில்லியனைப் பெற்றுக்கொடுத்துள்ளது. கடந்த வருடம் இது ரூபா 7,216 மில்லியனாகக் காணப்பட்டது. வருமான வளர்ச்சி ஐந்து வருட செயற்பாடுகளுடன் ஒப்பிடுகையில், 11.93% ஆக 2013/14 ஆம் ஆண்டில் இருந்து 2017/18 ஆம் ஆண்டு வரையில் காண்பித்துள்ளது.

**வருமானம் எதிர் வருமான வளர்ச்சி**




குறித்த ஆண்டில் வருமானப் பகிர்வில் குறிப்பிடத்தக்க ஒரு மாற்றம் ஏற்படவில்லை. அது, கடந்த ஆண்டுக்கு சமமாகவே இருந்தது. விமானத்தினுள் உணவு வழங்கல் மூலம் 78.57% வருமானம் கிடைத்துள்ளது. இது, கடந்த வருடத்தின் 76.59% ஐ விட அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்த விமானத்திற்குள்ளேயான உணவு வழங்கல் 22.23% வருமான வளர்ச்சியை, அதாவது, 2017/18 ஆம் ஆண்டில் ரூபா 6,755 மில்லியன் வருமானத்தை 2016/17 ஆம் ஆண்டின் ரூபா 5,525 மில்லியனுக்கு எதிராக பதிவு செய்துள்ளது. இதற்கு பிரதான காரணம், உணவு வழங்கல் 22.61% ஆல் அதிகரித்து குறித்த வருடத்தில் 6,270,457 உணவு பரிமாறல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## முகாமைத்துவக் கலந்துரையாடல் தொடர்ச்சி.




| | |
|---|---|
| விமான சமையலறை | 78.57% |
| ஆடை சலவையகம் | 2.60% |
| மஜயு உணவகம் | 14.08% |
| மத்தள உணவகம் | 0.11% |
| இடைத்தங்கல் ஹொட்டேல் | 1.74% |
| எமிரேட்ஸ் லோன்ஞ்ச் | 1.55% |
| வெனிலா பொட் கபே | 0.29% |
| சோமொண்டு உணவகம் | 1.06% |




| | |
|---|---|
| ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் | 76% |
| எமிரேட்ஸ் எயார்லைன்ஸ் | 6% |
| கட்டார் எயார்வெஸ் | 5% |
| மிஹின் லங்கா | 0% |
| டேர்கிஸ் எயார்லைன்ஸ் | 3% |
| கொரியன் எயார்லைன்ஸ் | 1% |
| ஓமான் எயார் | 1% |
| ஏனைய எயார்லைன்ஸ்கள் | 8% |




| | |
|---|---|
| விமான சமையலறை | 76.59% |
| ஆடை சலவையகம் | 2.75% |
| மஜயு உணவகம் | 15.31% |
| மத்தள உணவகம் | 0.40% |
| இடைத்தங்கல் ஹொட்டேல் | 1.58% |
| எமிரேட்ஸ் லோன்ஞ்ச் | 1.99% |
| வெனிலா பொட் கபே | 0.31% |
| சோமொண்டு உணவகம் | 1.09% |




| | |
|---|---|
| ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் | 70% |
| எமிரேட்ஸ் எயார்லைன்ஸ் | 6% |
| கட்டார் எயார்வெஸ் | 6% |
| மிஹின் லங்கா | 4% |
| டேர்கிஸ் எயார்லைன்ஸ் | 4% |
| கொரியன் எயார்லைன்ஸ் | 2% |
| ஓமான் எயார் | 1% |
| ஏனைய எயார்லைன்ஸ்கள் | 7% |

ஸ்ரீலங்கன் கேட்டறிங், தமது வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ளவும், செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. இரண்டு விமான சேவை நிறுவனங்களான சைனா சதர்ன் மற்றும் கல்ப் எயார் ஆகிய நிறுவனங்களும் இணைத்துக் கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும், குறித்த ஆண்டில் ஸ்ரீலங்கன் கேட்டறிங் நிறுவனம் சவூதியா எயார்லைன் நிறுவனத்துடனான வர்த்தகத்தை துண்டித்துக் கொண்டது.

விமானத்தினுள்ளேயான உணவுப் பரிமாறலில் பிரதான பங்காளி ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனமாகும். அது, மொத்த விமானங்களில் 65.59% ஆகவும், மொத்த உணவு உற்பத்தியில் 75.56% ஆகவும் காணப்படுகிறது. 2016/17 ஆம் அண்டில் இது 69.86% ஆகக் காணப்பட்டது. குறித்த காலப்பகுதியில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட உணவு 32.6% ஆல் அதிகரித்து, கடந்த வருடத்தின் 4,380,690 இல் இருந்து 5,508,805 உணவுகள் வரை வளர்ச்சியடைந்தது.

மொத்த வருமானத்தில் 14.08% பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அமைந்துள்ள உணவகத்தின் மூலம் கிடைத்தது. விமான நிலைய உணவகத்தின் வருமானம் 9.58% ஆல் அதிகரித்து, கடந்த வருடத்தின் ரூபா 1,104 மில்லியனில் இருந்து ரூபா 1,210 மில்லியன் வரை வளர்ச்சியடைந்தது. இவை தவிர, ஏனைய வர்த்தக நடவடிக்கைகளின் புரள்வு 8.04% ஆல் அதிகரித்தது.

### செயற்படு செலவுகள்

மொத்த செயற்பாட்டுச் செலவினம் 9.18% ஆல் அதிகரித்து, ரூபா 2,823 மில்லியனாகக் காணப்பட்டது. இது, 2016/17 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், ரூபா 2,586 மில்லியனாக இருந்தது. நிர்வாகச் செலவினம் 7% ஆல் அதிகரித்துள்ளதுடன், ஏனைய செயற்பாட்டுச் செலவினம் 12.36% ஆல் அதிகரித்துள்ளன.

### இலாபம்

மொத்த இலாபம் 18.60% ஆல் அதிகரித்து, குறித்த ஆண்டில் ரூபா 6,624 மில்லியனாகக் காணப்பட்டது. மொத்த இலாப சதவீதம் 0.46% ஆல் குறைவடைந்து அதாவது 2016/17 ஆம் ஆண்டில் 77.40% ஆகக் காணப்பட்டு, 2017/18 ஆம் ஆண்டில் 77.05% ஆகக் காணப்பட்டது. இதற்கு பிரதான காரணம், புரள்வின் அதிகரிப்பைவிட விற்பனைச் செலவினத்தில் காணப்பட்ட அதிகரிப்பாகும். எவ்வாறாயினும், ஸ்ரீலங்கன் கேட்டறிங் நிறுவனம் கடந்த ஐந்து வருடங்களில், நிலையான மொத்த இலாப சதவீதத்தைப் பேணி வரும் வகையில் செயற்பட்டுள்ளது. அது, 75% மற்றும் 77% க்கு இடையில் காணப்பட்டது.




குறித்த வருடத்தில் செயற்பாட்டு இலாபம் 25.75% ஆல் வளர்ச்சியடைந்து, ரூபா 3,809 மில்லியனாகக் காணப்பட்டது. செயற்பாட்டு இலாப சதவீதம் 5.4% அதிகரிப்பை 2016/17 ஆம் ஆண்டின் 41.98% இல் இருந்து 44.31% ஆக வளர்ச்சியடையச் செய்து ஒரு சிறந்த வளர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளது. நிகர இலாபம் 4.12% வளர்ச்சி கண்டு ரூபா 3,890 மில்லியனாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், நிகர இலாப சதவீதம் 51.78% இல் இருந்து 45.25% வரை குறைவடைந்துள்ளது. ரூபாவில் ஏற்பட்ட சரிவே இதற்குப் பிரதான காரணமாகும்.

ஸ்ரீலங்கன் கேட்டரிங் நிறுவனம் ஒரு பங்கிற்கான வருமானமாக குறித்த வருடத்தில் ரூபா 4.14 வை பதிவு செய்துள்ளது. சென்ற வருடத்தில் அது ரூபா 3.97 வாக இருந்தது. குறித்த வருடத்தில் மொத்தப் பங்குகளின் எண்ணிக்கையில் மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. இதனால், ஒரு பங்கிற்கு அதிகரித்துள்ள வருமானமான 4.12% வளர்ச்சி பங்குதாரர்களுக்குக் கிடைக்கும் மொத்த இலாப வளர்ச்சியில் காணப்பட்ட அதிகரிப்பாகும்.

### பிரதான அபிவிருத்திகள்

குறித்த வருடத்தில் ஸ்ரீலங்கன் கேட்டறிங் நிறுவனம் சுமார் ரூபா 284 மில்லியனை புதிய திட்டங்களில் முதலீடு செய்துள்ளது. இவற்றில் பிரதானமாக பாதுகாப்புத் திட்டம் ஒன்றான ICAO பாதுகாப்புத் தர அங்கீகாரத்தைப் பெறுவதற்கு முதலீடு செய்துள்ளது. இதன் ஆரம்பக்கட்டம் முழுமையாக பூர்த்தியடைந்துள்ளது. இரண்டாம் கட்டத்தின் 95% குறித்த வருடத்திலேயே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கன் கெட்டறிங் நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய உணவகத்தை மேம்படுத்தும் நோக்கில் முதலீடுகளை மேற்கொண்டுள்ளது. அதன்மூலம், அதிகரிக்கும் கேள்விகளுக்கு உணவு வகைகளைப் பெற்றுக்கொடுக்க நிறுவனத்திற்கு வாய்ப்புக் கிடைக்கும். 90% ஆன புனரமைப்புக்கள் குறித்த ஆண்டிலேயே பூர்த்தியடைந்துள்ளன. இதற்கு மேலதிகமாக, வெளியக ஊழியர்களுக்கு பயிற்சி மற்றும் நலன்புரிச் சேவைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக, கட்டடம் ஒன்றை அமைப்பதற்கும் ஸ்ரீலங்கன் கேட்டறிங் நிறுவனம் முதலீடுகளை மேற்கொள்கிறது. மேலும், செரன்டிவா இடைத்தங்கல் ஹொட்டேலிலும் நிறுவனம் முதலீடு செய்துள்ளது. தற்போது, ஹொட்டேல் அறைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம், இடைத்தங்கல் ஹொட்டேலின் வருமான வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

## உதவிச் சேவைகள்

### தகவல் தொழில்நுட்பம்

*ஸ்ரீலங்கன் தகவல் தொழில்நுட்ப முறைமை*

ஸ்ரீலங்கன் தகவல் தொழில்நுட்பமானது, 'SriLankan IT systems' என்ற வர்த்தகப் பெயரில் இயங்கி வருகிறது. விமான சேவைகள் வர்த்தகத்தையும், செயற்பாடுகளையும் டிஜிட்டல் மயப்படுத்தி மிகச் சிறந்த விமான சேவை தொழில்நுட்பத்தையும் ICT பின்னணியையும் ஸ்ரீலங்கன் குழுமத்திற்குப் பெற்றுக்கொடுக்கும் வகையில் செயற்பட்டு வருகிறது.

விமான சேவைக்கு சிறந்த வாடிக்கையாளர் சேவையைப் பெற்றுக்கொடுப்பதற்கான, நம்பகமான சிறந்த பயண அனுபவத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு 'SriLankan IT systems' புதிய டிஜிட்டல் தீர்வு ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. குறித்த 2017/18 ஆம் ஆண்டில் பல்வேறு வர்த்தக நடவடிக்கைகளை ஈ வர்த்தகமாக மாற்றியமைத்தது. இதில் பிரதானமாக, நிறுவனத்தின் இணைய தளத்தை மீளமைத்தல், ஒன்லைன் விற்பனை நடவடிக்கைகள், பிளைஸ்மைல்ஸ் இணைய தளம், விமான சேவையின் தொடர் பயணிகள் செயற்றிட்டம், மொபைல் அப் செயற்பாடுகள், ஸ்ரீலங்கன் ஹொலிடேஸுக்கு ஈ வவுச்சர்களைப் பெற்றுக்கொடுத்தல், ஷொப்பிங் பாஸ்கட் தீர்வுகளை ஸ்ரீலங்கன் ஹொலிடேஸுக்கு பெற்றுக்கொடுத்தல் என்பன உட்பட பல்வேறு பயணிகள் சேவை தரமுயர்த்தல்களை நிறுவனம் மேற்கொண்டது.

*புதிய பிளைஸ்மைல்ஸ் இணைய தளம்*

ஸ்ரீலங்கன் தகவல் தொழில்நுட்பம், பிளைஸ்மைல்ஸ் இணைய தளத்தை மீளமைத்து, அதிக செயற்பாடுகளை ஒன்லைன் மூலம் மேற்கொள்வதற்கு வசதியளித்துள்ளது. இந்தப் புதிய இணைய தளத்தின் மூலம் வாடிக்கையாளர்களின் திருப்தி அதிகரித்துள்ளது. பாவனையாளர்களுக்கு இலகுவான வகையிலும், ஸ்ரீலங்கன் நிறுவனத்தின் பிரதான இணைய தளத்துடன் சமமான தோற்றத்தைப் பெற்ற வகையிலும் இது அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, விமானப் பயண தராதரங்களுக்கு அமையவும் புனர் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டது. இந்தப் புதிய செயற்பாடுகள் மூலம் பிளைஸ்மைல்ஸ் அங்கத்தவர்களுக்கு குறிப்பிட்ட காலப்பகுதிகளுக்கு சலுகைகளை பெற்றுக் கொடுக்கவும் முடியும். இந்த இணைய தளத்தின் மூலம் பாவனையாளர்களுக்கு இணைய தள சேவைகள் அநேகமானவற்றை சிக்கலின்றி மேற்கொள்ள முடியும். அத்துடன், இந்தப் புதிய இணைய தளம் கையடக்கத் தொலைபேசி மூலமும் பயன்படுத்தக்கூடிய ஒன்றாக இருப்பதோடு, அவர்களுக்கு தனிப்பட்ட ஒரு பாவனையாளர் பதிவுப் பக்கம் ஒன்றைப் பெற்றுக்கொடுத்து, கையடக்கத் தொலைபேசி பாவனையாளர்களின் வசதியை அதிகரித்துள்ளது.

## முகாமைத்துவக் கலந்துரையாடல் தொடர்ச்சி.

*டிஜிட்டல் மயப்படுத்தல் / அதிகரிக்கப்பட்ட செயற்திறன்*

விமானப் பயண நடவடிக்கைகளை செயற்றிறன் மிக்கதாக ஆக்குவதற்கு ஸ்ரீலங்கன் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் உள்ளக மற்றும் வெளியக ஆர்வம் காட்டுவோருக்கு பல்வேறு டிஜிட்டல் தீர்வுகளை பெற்றுக் கொடுத்துள்ளது. விமானத்திற்குள்ளேயான தீர்வையற்ற நடவடிக்கைகளை நிறுவனம் கடந்த வருடத்தில் அறிமுகப்படுத்தியது. அதனை முழுமையாக டிஜிட்டல் மயப்படுத்தி, ஒன்லைன் றியல் டைம் செயற்பாடாக மாற்றியமைத்து, காகிதமற்ற முறையில் செயற்பட வைத்துள்ளது. இதற்கு மேலதிகமாக, இருபுற செயற்பாடு கொண்ட குரல்வழி தொடர்புகள் (IVR) ஒருங்கிணைப்பையும், சர்வதேச அழைப்பு நிலையத்திற்குப் பெற்றுக்கொடுத்து, செயற்பாட்டு செயற்திறனை அதிகரித்துள்ளது. ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் நிறுவனத்தின் வாடிக்கையாளர்களுக்கு ஈ வவுச்சர்களைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் காகித வவுச்சர்களை இல்லாதொழித்து டிஜிட்டல் வாடிக்கையாளர் அனுபவம் ஒன்றைப் பெற்றுக்கொடுத்துள்ளது. இதற்கு மேலதிகமாக. இலத்திரனியல் ஆவணங்களை தன்னியக்கமயப்படுத்தல் மற்றும் மீள் பரிசீலனை என்பனவற்றின் ஊடாக பல்வேறு திணைக்களங்களின் செயற்திறன் அதிரித்து வாடிக்கையாளர் திருப்தியும் அதிகரிக்கக் காரணமாக அமைந்துள்ளது.

*புதிய தொழில்நுட்பம் / கிளவுட் தொழில்நுட்பம்*

ஸ்ரீலங்கன் தகவல் தொழில்நுட்ப முறைமை நிறுவனம் தமது ஈ வர்த்தகத் தீர்வுகளை கிளவுட் தொழில்நுட்பத்தை பயன்படுத்த அதிகபட்ச ஒன்லைன் செயற்பாட்டையும், அதிகரித்த வாடிக்கையாளர் இணைப்பையும் அடைந்து கொண்டுள்ளது. வேட் வைட் கென்டன்ட் டிலிவெரி நெற்வோர்க் (CDN) மூலம் www.srilankan.com என்ற இணையத தளம் மற்றும் அதன் இணை இணைய தளங்கள் மற்றும் ஹொட்டேல்கள் ஆகிய அனைத்தையும் உலகம் முழுவதுமுள்ள அனைவருக்கும் பயன்படுத்தக்கூடிய வகையில் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அதிகரிக்கப்பட்ட இணைய தள சேவை மூலம், இணைய தளத்தின் வேகம் அதிகரிக்கப்பட்டு, வாடிக்கையாளர் திருப்தியும் மேம்படுத்தப்பட்டுள்ளது. எமது நிறுவனத்திற்கு, கிளவுட் தொழில்நுட்பம் ஊடாக தொழிற்துறையின் மிகப் புதிய செயற்பாடுகளைப் பெற்றுக்கொடுத்து, சர்வதேச பயணிகளுக்கு சிறந்ததொரு இணைய தள அனுபவத்தை வழங்கவும் இது வழிவகுத்துள்ளது.

*முகாமைத்துவ தகவல் முறைமை*

ஸ்ரீலங்கன் தகவல் தொழில்நுட்ப நிறுவனம், தரவுகள் மீது தங்கியிருக்கக்கூடிய றியல் டைம் முகாமைத்துவ தகவல் முறைமை ஒன்றை (MIS) எமது விமான சேவைகள் வர்த்தகத்திற்கும் பெற்றுக்கொடுத்துள்ளது. இதன் மூலம், தன்னியக்கமாக செயற்படக்கூடிய வர்த்தக அறிவு (BI) உடன் கூடிய எதிர்காலத்தை கணக்கிடக்கூடிய மற்றும் நிகழ்வுகளை கணிக்கக்கூடிய திட்டம் ஒன்று பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. விமான சேவை வர்த்தகத்தின் தரவுகளை சகல வர்த்தக பிரிவுகளுக்கும் பெற்றுக்கொடுத்து, முக்கிய தீர்மானங்களை மேற்கொள்ளும் போது சிறந்ததொரு தீர்மான அறிவையும் மெஷின் லேர்னிங் (ML) மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) ஆகிய தொழில்நுட்பங்களையும் பயன்படுத்த வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்த அனைத்து நடவடிக்கைகளும் நடமாடும் வசதிகளைக் கொண்ட றியல் டைம் செயற்பாட்டைக் கொண்ட செயற்பாட்டு புள்ளி விபரங்களைக் கணக்கிட்டு மிக முக்கிய வர்த்தகத் தீர்மானங்களுக்கு தரவுகளை பெற்றுக்கொடுக்கிறது. இந்தப் புதிய தொழில்நுட்பங்களின் மூலமும் MIS தீர்வுகள் மூலமும் பல்வேறு சேமிப்புக்களை நிறுவனம் மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

*தராதரங்கள், இணக்க மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆளுமை*

விமான சேவையின் ICT தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் அதேவேளை, விமானப் பயணத்துறையின் இணக்கத்தை தொடர்ச்சியாகப் பேணுவதற்கும், தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாடுகளையும், மேற்பார்வைத் திட்டங்களையும் முறையாக மேற்கொள்ளவும் ஸ்ரீலங்கன் IT சிஸ்டம்ஸ் நடவடிக்கைகளை மேற்கொண்டது. முழு வர்த்தகத்திற்குமான சொத்துக்கள் திட்டமிடல் முறை (ERP) அறிமுகப்படுத்தப்பட்டு, சிறந்த சேவைத் தரமுயர்த்தல், AIRMAN A320 விஸ்தரிப்பு மற்றும் MEL இணைப்பு வேலைத் திட்டங்கள் என்பன வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டன. வாடிக்கையாளரின் தரவுகளைச் செயற்படுத்தும் தராதரங்கள், தகவல் பரிமாற்றம் மற்றும் நேரலையான தகவல்கள் என்பனவற்றையும், பயண முடிவுகள் தொடர்பான விபரங்களும் இதில் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. அடையாள முகாமைத்துவ செயற்பாடு ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டு நிறுவனத்தின் தொடர்புச் சேவைகளை முறைப்படுத்தி ஊழியர்களின் தகவல்களை நேரடியாக இற்றைப்படுத்தி மனிதவள மற்றும் தகவல் தொழில்நுட்ப முறைமைகளை ஒன்றிணைத்துள்ளது. வலைப்பின்னல் ஊடான பாதுகாப்பு, ஆளுமை மற்றும் இடர் முகாமைத்துவம் போன்ற தீர்வுகளை வழங்கி, பாதுகாப்பான தகவல்களையும், நிகழ்ச்சிகளையும் முகாமைத்துவப்படுத்தும் (SIEM) தீர்வு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டு தகவல் தொழில்நுட்பத்திற்கு அதிகரிக்கப்பட்ட பாதுகாப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கன் நிறுவனம் ISO/IEC 27001:2013 என்ற தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ (ISMS) சான்றிதழை ஸ்ரீலங்கன் குழுமத்திற்கு குறித்த 2017/18 ஆம் நிதியாண்டில் பெற்றுக்கொண்டது. ஸ்ரீலங்கன் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் ISO/IEC 20000:2011 சான்றிதழை சேவை முகாமைத்துவத்திற்கும் ISO 9001:2015 தர முகாமைத்துவத்திற்கும் பெற்றுக்கொண்டது.

*அதிக செயற்பாடு கொண்ட விமான சேவையின் ICT*

ஸ்ரீலங்கன் வர்த்தக மற்றும் தொடர் செயற்பாட்டு அலுவல்கள் வாரத்தின் 7 நாட்களும் 24 மணித்தியாலமும் எந்தவித தடைகளும் அற்ற தகவல் தொழில்நுட்பத் தேவைப்பாடுகளைக் கொண்டுள்ளது. இது, ஸ்ரீலங்கன் தகவல் தொழில்நுட்பத்தின் மிக முக்கியமான இலட்சியமாகும். கடந்த நிதியாண்டில், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் மிகச்சிறந்த சேவைத் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு இந்த தடங்கல் அற்ற தகவல் தொழில்நுட்பமும் சிறந்த ICT சேவைகளும் உலகளாவிய ரீதியில் கிடைத்தமை காரணமாக இருந்தது. ICT சேவைகள் சர்வதேச அழைப்பு நிலைய நடவடிக்கைகளையும், வர்த்தகச் செயற்பாடுகளையும் உள்ளடக்குகிறது. புதிய பயண முடிவான அவுஸ்திரேலியாவின் மெல்போர்னுக்கான இறுதி வரையிலான தொழில்நுட்பத் தீர்வுகளை பெற்றுக்கொடுக்கிறது. ஸ்ரீலங்கன் தகவல் தொழில்நுட்ப முறைமை நிறுவனம், வாரத்தின் 7 நாட்களும் 24 மணி நேரமும் பகிரப்பட்ட சேவைகளை ஸ்ரீலங்கன் குழுமத்திற்கும் கொழும்பு விமான நிலையத்தில் சேவை பெறும் சகல விமான சேவை நிறுவனங்களுக்கும் பெற்றுக்கொடுக்கிறது.

## மனிதவள முகாமைத்துவம்




விமான சேவைத் துறையில் செயற்படுதல் என்பது, தொடர்ச்சியான சவால்களுக்கு முகம் கொடுக்கும் ஒரு நிலையாகும். இதன் முக்கியத்துவத்தை நாம் நன்கு அறிந்துள்ளோம். சிறந்த குழுவொன்றின் மூலம் நிறுவனத்தை முன்னோக்கிச் செல்வதற்கு செயற்படுவது எமது உபாயகரமான நடவடிக்கைகளில் ஒன்றாகும். மனித வளத்திற்கான எமது முகாமைத்துவம் பல்வேறு உபாகரமான பகுதிகளைக் கொண்டுள்ளது. இவற்றில் மனிதவளத்தைப் பெற்றுக்கொள்ளல், ஊழியர்களை நன்கு சேவையில் ஈடுபடுத்துதல், திறன் அபிவிருத்தி மற்றும் திறமை வளர்ச்சி, பெறுபேறுகளில் தங்கியிருக்கும் கலாசாரம் ஒன்றை உருவாக்குதல் ஆகியன இதன் முக்கிய அம்சங்களாகும். இந்த நான்கு பிரிவுகளையும் கருத்திற் கொண்டு நாம் எமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம். ஊழியர்களை இணைத்துக் கொள்ளல், செயற்பாட்டில் சரியானவர்களைத் தெரிவு செய்யவும், எமது சேவைத் தளத்தை ஒரே குழுவாக அமைத்து, கற்றுக்கொண்டு தம்மைத்தாமே விருத்தி செய்து கொள்ளும் ஈடுபாடு மற்றும் செயற்திறன் என்பனவற்றைக் கொண்ட குழுவொன்றை உருவாக்க செயற்பட்டு வருகின்றோம். ஊழியர்களை ஊக்குவித்து கூடுதல் தரங்களையும், செயற்பாடுகளினதும் மூலம் நிறுவனத்தின் தற்போதைய நிலையை மாற்றியமைக்க நாம் எதிர்பார்க்கின்றோம்.

### ஊழியர்களை இணைத்துக்கொள்ளல்

ஸ்ரீலங்கன் நிறுவனத்தின் மிகப் பெறுமதியான சொத்து எமது ஊழியர்களாவர். எமது ஊழியர்களின் தேவைகளையும், செயற்திறனையும் அதிகரிக்க நாம் எப்போதும் ஈடுபாட்டுடனும், பொறுப்புடனும் இருக்கின்றோம். எமது ஊழியர்களின் செயற்திறனை அதிகரித்து, அவர்களுக்கு உயர் நிலையை அடைந்து கொள்வதற்கு வழிவகுத்துக் கொடுக்கவும், நாம் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். குறித்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சில முக்கிய நடவடிக்கைகள் பின்வருமாறு:

- **சேவையில் அமர்த்தும் குழுக்கள்:** எமது வரிசை முகாமையாளர்களுடன் நாம் தொடர்ந்து இணைந்திருந்து, ஒவ்வொருவரினதும் தொழில்களுக்கு ஏற்ற வகையில், அவர்களின் சேவை விபரங்களையும், செயற்பாடுகளையும் அமைத்துக் கொடுத்து, இரட்டைச் செயற்பாடுகளைத் தடுத்து உபாயகரமான முதலீடுகளை தொழில்நுட்பத்தில் மேற்கொண்டு, சிறந்த தன்னியக்க செயற்பாட்டையும், புதிய வேலைமுறைகளையும் அறிமுகப்படுத்தி ஊழியர்களுக்கு சிறந்ததொரு வேலைத் தளத்தை உருவாக்குவது எமது நோக்கமாகும்.
- **ஊழியர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கை:** ஊழியர்களை இணைத்துக்கொள்ளும் உபாய முறையை நாம் மீள்பார்வை செய்துள்ளோம். விசேடமாக, சவால்மிக்க தொழிற் சந்தையில் தொழிலை நாடுவோருக்கு சிறந்த திறமைகள் இருக்க வேண்டியதும், அவற்றை அடையாளம் காண வேண்டியதும் கட்டாயமாகும். இதற்கமைய, ஊழியர்களை இணைத்துக் கொள்ளும் எமது ஒன்லைன் இணைய தளம் மற்றும் சமூகத்தின் மூலமான ஊழியர்களை இணைத்துக் கொள்ளல் மற்றும் சரியான திறமைகளைப் பெற்றுக்கொள்ளல், அதற்காக சமூக வலையமைப்புக்களை பயன்படுத்துதல் என்பனவற்றை மேற்கொண்டு வருகின்றோம். பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்கும் நிறுவனங்களுடன் நாம் இணைந்துள்ளோம். இதன் மூலம் ஊழியர் தேவைகளைத் தொடர்ச்சியாகப் பூர்த்தி செய்ய நாம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். புதியதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 'உழைக்கும் போதே செலுத்துங்கள்' என்ற திட்டத்தின் மூலம் தொழில் திறமைகளை அடைந்துகொள்ள, விசேடமாக இளம் திறமைசாலிகளை எம்மோடு இணைத்துக்கொள்ளவும், அவர்கள் சிறந்த திறமைகளை அடைந்துகொள்ளவும் இந்தத் திட்டங்கள் உதவியாக அமைந்திருக்கும்.

### ஊழியர் ஈடுபாடு

விரும்பப்படும் ஊழியராக எமது இடத்தைத் தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்ள, நாம் பொருத்தமான வேலைத் தளத்தை உருவாக்கி வருகின்றோம். நிறுவனத்தின் சகல ஊழியர்களுக்கும் சமமான வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. எமது ஊழியர்களுடன் தொடர்ந்து இணைந்து ஈடுபாட்டுடன் தமது பணிகளை மேற்கொள்ள, அதன் மூலமாக சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்துபவர்களுக்கு அனுகூலங்களைப் பெற்றுக்கொடுத்து, அவர்களுக்கு உதவி புரிந்து, சகல செயற்பாடுகளின் மூலமாகவும் எமது குழும உபாயங்களுடன் இணைந்த ஒரு நடவடிக்கையை அவர்கள் வெளிப்படுத்துவதற்காக நாம் செயற்பட்டு வருகின்றோம். ஊழியர்களின் ஈடுபாட்டை அதிகரிப்பதற்கு நாம் மேற்கொண்ட சில நடைமுறைகள் பின்வருமாறு:

- **ஊக்குவிப்புத் திட்டம் UL 1:** எமது குழும இலக்குகளை அடைந்துகொள்ள முன்வந்து செயற்படும் வகையில் ஒரு தொனிப்பொருளை உருவாக்கி, ஊழியர்களின் ஈடுபாட்டை அதிகரிக்கும் வகையில் நாம் செயற்பட்டோம். இந்தத் தொனிப்பொருள் மூலம், தமது சொந்த தேவைப்பாடுகளைவிட ஸ்ரீலங்கனின் தேவைப்பாடுகளை முன்வைத்து ஒரு குழுவாக நிறுவனத்தின் நன்மைகருதி செயற்பட நாம் அவர்களை ஊக்குவித்துள்ளோம். ஸ்ரீலங்கனின்

பெறுமதிகளான ஆக்கபூர்வமான தன்மை, துல்லியமான செயற்பாடு, தலைமைத்துவம், முன்கூட்டியே செயற்படுதல், வேலைத்தளத்தின் பொறுப்பு ஆகியவற்றை ஊழியர்களிடையே அதிகரிக்கச் செய்து எமது குழும இலக்குகளை அடைந்துகொள்ள நாம் முயற்சி எடுத்துள்ளோம்.

- **UL 1 குழுச் சவால்:** இந்த வருட ஊழியர் தொனிப்பொருளின் கீழ் முன்வைக்கப்பட்ட பெறுமதிகள் மேலே UL-1 இல் கலந்துரையாடப்பட்டுள்ளது. எமது விமான சேவை ஊழியர்களிடையே கல்வி நிகழ்ச்சியுடன் சேர்ந்த வகையில், கிரிக்கட் போட்டி ஒன்றையும் நாம் ஏற்பாடு செய்திருந்தோம். இந்தத் திட்டமானது, ஊழியர்கள், விளையாட்டின் மூலம் சிந்தித்து செயற்பட்டு வெற்றி கொள்வதற்கு ஊக்குவிக்கும் வகையிலானதாக அமைந்திருந்தது. அதனை வேலைத்தளத்திலும் தொடர ஊக்குவிக்கப்பட்டது. கிரிக்கட் விளையாட்டை வாழ்க்கையில் ஒரு பாடமாகக் கொண்டு, அதன் மூலம் பயிற்சி வாய்ப்புக்களையும், உபாயங்களைக் கலந்துரையாடவும், குழுவாக செயற்படவும், அழுத்தமான நேரங்களில் செயற்பட வேண்டிய முறைகள் போன்ற விடயங்களை நாம் பயிற்றுவித்துள்ளோம். இந்த நிகழ்ச்சி, குழுக்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஊழியர்களிடையே நட்புறவை அதிகரிக்கச் செய்யவும், பிணைப்பை ஏற்படுத்தவும், வாழ்க்கைத் திறன்களை அதிகரிக்கவும், குழுவாகச் செயற்படவும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

### திறமைகளைக் கட்டியெழுப்புதல் மற்றும் திறன் அபிவிருத்தி

சவால் மிக்க விமான சேவைத் துறையில் பல்வேறு திறமைகளைப் பெற்றுக்கொடுத்து, ஊழியர்களை திறமைசாலிகளாக மாற்றி, தொடர்ந்து வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பது ஒரு கடினமான விடயமாகும். எமது நிறுவன ஊழியர்களை ஊக்குவிப்பதற்காக நாம் மேற்கொள்ளும் முதலீடுகளை தட்டிச் செல்லும் வாய்ப்புக்களும் காணப்படுகின்றது. இதற்கு முகம் கொடுப்பதற்காக, நாம் முறையாகத் திட்டமிடப்பட்ட, கட்டமைப்புக்குள் கொண்டுவரப்பட்ட பயிற்சித் திட்டங்களை எமது ஊழியர்களுக்கு பெற்றுக் கொடுத்து வருகின்றோம். இவற்றில் தொழிலுடனான பயிற்சி, ஆலோசனை போன்றன உள்ளடக்கப்படுகின்றன. தொழில்சார் மற்றும் தொழில்சாரா திறன் அபிவிருத்தி வாய்ப்புக்களும் வழங்கப்படுகின்றன.

- **தொடர் செயற்பாட்டைத் திட்டமிடல்:** எமது சகல திணைக்களங்களிலும் சிரேஷ்ட முகாமைத்துவம், மத்திய முகாமைத்துவம் மற்றும் நிறைவேற்று அதிகாரிகள் ஆகிய முகாமைத்துவக் குழுக்கள் காணப்படுகின்றன. முக்கிய ஊழியர்களை இழக்க நேரிடும் சந்தர்ப்பங்களில் நிறுவனம் எதிர்நோக்கும் என எதிர்பார்க்கப்படும் அவசர நிலைகளைச் சமாளிக்க குழுவொன்றாக முகாமைத்துவத்தை நாம் செயற்பட வைத்து வருகின்றோம். எமது திறமை முகாமைத்துவக் கொள்கையானது, 80% முகாமைத்துவ வெற்றிடங்களை உள்ளக ஊழியர்கள் மூலமாகவே பூர்த்தி செய்து நிறுவனத்திற்கு உள்ளேயே அவர்களை உருவாக்கி பெருமளவு நேரத்தையும் பணத்தையும் சேமிப்பதோடு, ஊழியர்களின் சொந்த வளர்ச்சிக்கும் அது உதவியாக அமைந்திருக்கிறது.
- **வதிவிட / பிராந்திய முகாமையாளர் குழு:** ஊழியர்களின் முக்கியத்துவத்தை நன்கு விளங்கிக் கொண்ட ஒரு நிறுவனம் என்ற ரீதியில், நாம் தொடர்ச்சியாக அடுத்தகட்ட ஊழியர்களை எப்போதும் தயார்படுத்தும் நிலையிலும், தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ள தயார்படுத்திக் கொண்டும் உள்ளோம். எதிர்கால வதிவிட / பிராந்திய முகாமையாளர்களை உருவாக்குவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் "முகாமையாளர் திறமைக் குழு" என்ற குழுவை உருவாக்கி, சிறந்த ஊழியர்களைத் தேர்ந்தெடுத்து, அந்தக் குழுவில் அமர்த்தி, அவர்களுக்கு திறமையையும், அனுபவத்தையும் பெற்றுக்கொடுத்து, எதிர்காலத்தில் எமது விமான சேவையைப் பிரதிநிதித்துவப்படுத்த ஒரு வதிவிட முகாமையாளர் அல்லது பிராந்திய முகாமையாளராக மாறுவதற்கு தேவையான திறமைகளை அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கின்றோம்.

### பெறுபேறுகள் மீது கணக்கிடப்படும் அனுகூலங்களும் நன்மைகளும்

பெறுபேறுகள் மீது கணக்கிடப்படும் தொழில் கலாசாரம் ஒன்றை உருவாக்குவது எமது நிறுவனத்தின் மனிதவள உபாயமாகும். தொடர்ச்சியாக சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்துவோருக்கு எமது நிறுவனம் சிறந்த அனுகூலங்களைப் பெற்றுக்கொடுத்து, பெறுபேறுகளை நோக்கிய ஒரு நிறுவனமாக எம்மை மாற்றியுள்ளது. இதனால், நியாயமான பெறுபேறுகள் மதிப்பீட்டை முழு நிறுவனத்திலும் நாம் மேற்கொண்டுள்ளோம். இந்த நடவடிக்கையின் இறுதியில் அவற்றுக்கு ஏற்ப அனுகூலங்களையும் நன்மைகளையும் பெற்றுக் கொடுத்து வருகின்றோம்.

குறித்த ஆண்டில் எமது செயற்பாடுகளை நாம் தொடர்ச்சியாக முன்னெடுத்து பெறுபேறுகள் ஆய்வை மேற்கொண்டுள்ளோம். பெறுபேறுகள் ஆய்வுக் குழு ஒன்றை உருவாக்கி, அவர்கள் மூலமாக ஒவ்வொரு கட்டத்தினதும் முக்கியத்துவத்தை எமது முகாமையாளர்களிடையே அறிவுறுத்தி, குழுமத்தின் இலக்குகளை மையமாகக் கொண்ட பெறுபேறுகளை அடைந்து கொள்ளும் முக்கியத்துவத்தை விளக்கியுள்ளோம். பெறுபேறுகள் மீது தங்கியுள்ள அனுகூலங்கள் முறையை உருவாக்கிய ஸ்ரீலங்கன் நிறுவனம், அந்த அனுகூலங்களை குறிப்பிட்ட ஒவ்வொரு பெறுபேறுகளுக்கும் ஏற்ப மாற்றங்களை ஏற்படுத்தி பெற்றுக்கொடுத்துள்ளது.

வயதுப் பிரிவு



பால்




சேவையில் ஈடுபட்டுள்ள வருடங்கள்




| பதவி | ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|
| கெபின் குரூ | 1208 |
| பொறியியலாளர் | 181 |
| நிறைவேற்று அதிகாரி | 525 |
| விமானப் பணியாளர் | 328 |
| நிறைவேற்று அதிகாரமற்றவர்கள் | 3996 |
| முகாமையாளர்கள் | 257 |
| சிரேஷ்ட முகாமைத்துவம் | 39 |
| தொழில்நுட்பவியலாளர்கள் | 463 |
| பயிலுநர்கள் | 22 |
| மொத்தம் | 7019 |

## சமூக ஈடுபாடு




ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் சமூகப் பொறுப்பானது, அதற்கென அமைக்கப்பட்டுள்ள குழும சமூகப் பொறுப்புப் பிரிவின் மூலம் "ஸ்ரீலங்கன் கெயார்ஸ்" என்ற பெயரில் தயாரிக்கப்பட்டுள்ள திட்டமிடலுக்கு அமைய செயற்பட்டு வருகின்றது. இதன் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டங்களில் விசேடமாக, குறைந்த வசதிகளைப் பெற்றவர்களுக்கு சேவையாற்றவென இது இயங்கி வருகின்றது. சமூகத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தவும், சிறுவர்கள் மற்றும் இளம் சந்ததியினருக்கு நன்மை புரியவும் விசேடமாக கவனம் செலுத்தப்பட்ட பகுதிகளான கல்வி, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பனவற்றில் அதிகம் அவதானம் செலுத்தப்படுகின்றது. எமது சிறுவர் மற்றும் இளம் சந்ததியினரை நோக்கிய செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள், சிரேஷ்ட பிரசைகளுக்கான செயற்பாடுகள் மற்றும் ஏனைய நன்கொடைகள் என்பனவும் உள்ளன.

இந்தச் செயற்றிட்டங்கள் ஊக்குவிப்புத் திட்டங்கள் மற்றும் நிறுவனத்தின் வர்த்தகப் பங்காளிகளுடனான இணைந்த செயற்பாடுகளாகவும், ஊழியர்களின் தொண்டர் சேவைகள் மூலமாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குறித்த காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய திட்டங்களின் விபரங்கள் பின்வருமாறு:

**கல்வி**





உலக
சிறுவர் தினம்



நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அமைய, எமது செயற்பாடுகளில் கல்வியை நாம் முதன்மை அம்சமாகக் கருதுகின்றோம். எமது நடவடிக்கைகள் மூலம் சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கு கல்வி வாய்ப்புக்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டு, அவர்களின் திறமைகளை அபிவிருத்தி செய்து, விழிப்புணர்வை ஏற்படுத்தி, நாட்டிற்கு முக்கியமாகத் தேவைப்படும் திறமைகளை அதிகரிக்கவும், நற்பண்புகளை உருவாக்கவும், பின்தங்கிய பாடசாலைகளின் வசதிகளை அதிகரிக்கவும் நாம் முயற்சி செய்து வருகின்றோம்.

இதற்கமைய, குறித்த வருடத்தில் பின்வரும் பல்வேறு முக்கிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

**உலக சிறுவர் தினம்**

திட்டத்தின் நோக்கம்: *சமூகம் தொடர்பான தன்னம்பிக்கை, திறன் என்பனவற்றை கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பத்தை சிறுவர்களுக்குப் பெற்றுக்கொடுத்தல்.*

“ஸ்ரீலங்கன் கெயார்ஸ்” உலக சிறுவர் தினமான 2017 ஒக்டோபர் 01 ஆம் திகதி கோல்பேஸ் ஹொட்டேல் மற்றும் ஈர்பர்ட் சில்வா ஹொலிடேஸ் நிறுவனத்துடன் இணைந்து விசேட நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. “கிரில்லவெல சௌஹஸ திரிசெவன சிறுவர் அபிவிருத்தி நிலையம்” “செனரத் குணவர்தன சிறுவர் அபிவிருத்தி நிலையம்” மற்றும் “கங்கொடவில சிறுவர் அபிவிருத்தி நிலையம்” ஆகிய நிலையங்களில் 62 சிறுவர்களுக்கு அனுபவ ரீதியான கல்வியைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தத் திட்டத்தின் கீழ் காலை உணவு கொழும்பு கோல்பேஸ் ஹொட்டேலிலும், கொழும்பு நகரைச் சுற்றி வரும் ஒரு பயணத்தை இரட்டைத் தட்டு பஸ் ஒன்றில் மேற்கொள்ளவும், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு சுற்றுலாவை மேற்கொள்ளவும் அதன் போது A-330 விமானம் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளவும், அதன் உட்பகுதி மற்றும் நடவடிக்கைகளை அறிந்து கொள்ளவும் வாய்ப்புக் கிடைத்தது. இந்த நிகழ்ச்சியில் மதிய உணவு, இசை, நடனம் மற்றும் மெஜிக் நிகழ்ச்சி என்பனவும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**நூல் ஒன்றைத் தானம் செய்யுங்கள் - ஒரு சிறுவருக்கு கல்வி கற்றிட உதவுங்கள்**

திட்டத்தின் நோக்கம்: *SOS கிராமத்திலுள்ள சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு உதவுதல்*

பிலியந்தலை SOS கிராமத்திலுள்ள சிறுவர்களின் கல்வித் தேவைகளுக்கு உதவும் வகையில், 2017 டிசம்பர் 08 ஆம் திகதி “ஸ்ரீலங்கன் கெயார்ஸ்” புத்தகங்களைத் தானம் செய்யும் நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தப் புண்ணிய செயற்பாட்டை வெற்றிகரமாக முன்னெடுக்க ஸ்ரீலங்கன் நிறுவனத்தின் சகல திணைக்களங்களில் இருந்தும் ஊழியர்கள் முன்வந்து, புத்தகங்களை பெற்றுக்கொடுத்தும், திரட்டி வழங்கியும் உதவியுள்ளனர். ஊழியர்களின் பங்களிப்பு மிகவும் வரவேற்கத்தக்கதாக இருந்தது. இதன்போது, 2,000 க்கும் அதிகமான புத்தகங்கள் சேகரிக்கப்பட்டு SOS இன் சிறுவர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன.






வைத்திய முகாம்
தெஹிகஹலந்த
மகா வித்தியாலயம்
அம்பலாந்தோட்டை



### விலேஜ் ஹாட் பீற் நிலையம்

திட்டத்தின் நோக்கம்: *தொழிற் பயிற்சி மூலம் இளைஞர்களை வலுப்படுத்துதல்*

“ஸ்ரீலங்கன் கெயார்ஸ்” பவுன்டே‘ன் ஒப் குட்னஸ் நிறுவனத்துடன் இணைந்து, வட மாகாணத்தின் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 8வது விலேஜ் ஹாட் பீற் நிலையம் திறந்து வைக்கப்பட்டது. முழுமையான பயிற்சி வசதிகளைக் கொண்ட இந்த நிலையம், கீழ் மட்ட இளைஞர் மற்றும் சிறுவர்களுக்கு தொழில்சார் கல்வியைப் பெற்றுக்கொடுத்து, திறமைகளை அபிவிருத்தி செய்யக்கூடிய பயிற்சித் திட்டங்களை வழங்கி வருகிறது.

இந்த நிலையத்தில் சுமார் 600 தொடக்கம் 700 வரையான பங்குபற்றுநர்கள் பயிற்சிகளில் கலந்துகொள்ள முடியும். தற்போது, சுமார் 400 இளைஞர், யுவதி பங்குபற்றுநர்கள் இங்கு பயிற்சிகளைப் பெற்று வருகின்றனர்.

### சுகாதாரம்

சுகாதாரம் சார்ந்த எமது செயற்பாடுகள் சிறுவர்களின் உடல் மற்றும் உள ரீதியான ஆரோக்கியத்தை, விசேடமாக, பின்தங்கிய பகுதிகளில் உள்ள சிறுவர்களுக்கு இந்தச் சேவையைப் பெற்றுக்கொடுப்பதில் முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது.

### வைத்திய முகாம்

திட்டத்தின் நோக்கம்: *பின்தங்கிய பாடசாலை ஒன்றின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்துதல்*

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு, ஸ்ரீலங்கன் கெயார்ஸ் நிறுவனத்தினால் 2017 ஒக்டோபர் 05 ஆம் திகதி அம்பலாந்தோட்டை தெஹிகஹலந்த மகா வித்தியாலயத்தில் வைத்திய முகாம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த வைத்திய முகாமில் வைத்தியர்கள், கண் சிகிச்சை நிபுணர்கள் மற்றும் தாதியர்களும் கலந்து கொண்டனர். இதன்போது, இலவச வைத்திய ஆலோசனை மற்றும் மருந்து வகைகள் என்பன ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன. இந்தத் திட்டமானது, ‘ன்கிரி-லா ஹொட்டலின் இணை அனுசரணை மற்றும் மத்தள சர்வதேச விமான நிலைய ஊழியர்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

### நகரில் நத்தார் பண்டிகை

திட்டத்தின் நோக்கம்: *புற்றுநோய்க்கு உள்ளான சிறுவர்களுக்கு நத்தார் குதூகலம்*

“ஸ்ரீலங்கன் கெயார்ஸ்” நத்தார் குதூகலத்தை அனைவருக்கும் பகிரும் நோக்கில், மஹரகம தேசிய புற்றுநோய் வைத்தியசாலையின் இணை நிறுவனம் ஒன்றான ‘CCC ஹோம்’ இல் 30 சிறுவர்களுக்கும் அவர்களின் பெற்றோருக்கும் மகிழ்ச்சி மிக்கதொரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர். இந்த நிகழ்ச்சியின் போது, இரட்டைத் தட்டு பஸ் ஒன்றில் நத்தார் தாத்தா மற்றும் கெலிப்சோ இசையுடன் நகரை வலம் வரும் வாய்ப்புக் கிடைத்தது. அவர்களுக்கு கோல் பேஸ் ஹொட்டேலில் இரவு உணவும், மஜிக் கண்காட்சி ஒன்றும் காண்பிக்கப்பட்டது. பங்குபற்றிய சகலருக்கும் தனிப்பட்ட பரிசுகள் வழங்கப்பட்டு, அவர்களின் நத்தார் பிரார்த்தனை நிறைவேற்றப்பட்டது. இந்த நிகழ்ச்சி கோல்பெஸ் ஹொட்டேல் மற்றும் ஈபர்ட் சில்வா ஹொலிடேஸுடன் இணைந்து நடத்தப்பட்டது.

## முகாமைத்துவக் கலந்துரையாடல் தொடர்ச்சி.

### லிற்றில் ஹாட்ஸ் திட்டம்

திட்டத்தின் நோக்கம்: *லேடி றிஜ்வே வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு நிதி சேகரித்தல்*

வலன்டைன் பருவகாலத்தைக் கொண்டாடும் வகையில், "ஸ்ரீலங்கன் கெயார்ஸ்" தமது ஊழியர்களிடையே நிதி சேகரிக்கப்பட்டு, லிற்றில் ஹாட்ஸ் திட்டத்திற்கு உதவி செய்ய நடவடிக்கை மேற்கொண்டது. இதன் மூலம், லேடி றிஜ்வே வைத்தியசாலையில் இருதய நோய் சிகிச்சைப் பிரிவு ஒன்றை உருவாக்குவது நோக்கமாக அமைந்திருந்தது. இந்தத் திட்டம் "உண்மையிலேயே அன்பு தேவைப்படும் இதயம் ஒன்றுக்கு உங்கள் ஆதரவைப் பெற்றுக்கொடுங்கள்" என்ற தொனிப்பொருளில் அமைந்திருந்தது. நிறுவனத்தன் சகல ஊழியர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள முன்வந்தனர். வலன்டைன் தினத்தில் ரூபா 374,583 இதன் மூலம் திரட்டப்பட்டது.

### சிறுவர் பாதுகாப்பு மற்றும் அரவணைப்பு

திட்டத்தின் நோக்கம்: *சிறுவர்களின் உரிமைகளைப் பாதகாத்து அவர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுத்தல்.*

சிறுவர்களின் நன்மையையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் நோக்கில், "ஸ்ரீலங்கன் கெயார்ஸ்" கொழும்பு மெற்றோ பொலிட்டன் ரொட்டரி கழகத்துடன் இணைந்து, ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் முதன் முதலாக நாகமயில் "சிறுவர்களுக்கு சிநேகபூர்வமான பொலிஸ் நிலையம்" ஒன்றை உருவாக்கியது. இந்தக் காவல் நிலையத்தில், பாதிக்கப்பட்ட சிறுவர்கள் எந்தவித அசௌகரியங்களும் இல்லாமல் தமக்கு இடம்பெற்ற அநீதிகளை பொலிசாரிடம் முறையீடு செய்வதற்கான வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பொலிஸ் நிலையத்தின் ஊழியர்களுக்கு பாதிக்கப்பட்ட சிறுவர்களுடன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன. சட்டமும் ஒழுங்கும் தொடர்பான அமைச்சு மற்றும் நாகம பொலிஸ் நிலையம் என்பன இந்தத் திட்டத்திற்கு உதவிகளை வழங்கியிருந்தன.

### ஏனைய குழும சமூகப் பொறுப்பு நடவடிக்கை

*வெள்ள நிவாரணம்*

திட்டத்தின் நோக்கம்: *வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் மற்றும் நிவாரணங்களை பெற்றுக்கொடுத்தல்.*

தென் மேற்கு பருவப் பெயர்ச்சி மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு "ஸ்ரீலங்கன் கெயார்ஸ்" நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. தெற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதன் போது நிவாரணங்கள் வழங்கப்பட்டன. இதன் போது, ஸ்ரீலங்கன் குழு, சுமார் ரூபா 1.6 மில்லியன் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள், லினென், மருந்து வகைகள், சுத்திகரிப்பு பொருட்கள், ஆடைகள் மற்றும் ஏனைய பொருட்களைத் திரட்டி இரத்மலானையில் உள்ள விமானப்படையின் வெள்ள நிவாரணப் பிரிவுக்குப் பெற்றுக்கொடுத்தது. "ஸ்ரீலங்கன் கெயார்ஸ்" ரூபா 133,000 பெறுமதியான மருந்துப் பொருட்களையும் விமானப்படை வைத்தியசாலைக்கு வழங்கியிருந்தது.

### அல்ஸீமர் வோக்

திட்டத்தின் நோக்கம்: டிமென்சியா மற்றும் அல்ஸீமர் நோய்கள் தொடர்பாக மக்களிடையே விழிப்பூட்டி அதற்காக நிதி சேகரித்தல்

உலக அல்ஸீமர் தினத்தை முன்னிட்டு, லங்கா அல்ஸீமர் பவுண்டேʻன் நிறுவனத்துடன் இணைந்து "ஸ்ரீலங்கன் கெயார்ஸ்" "றிமெம்பர் மீ" என்ற பெயரில் 2017 செப்டம்பர் 30 ஆம் திகதி வரை வருடாந்த நடைபவனி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. டிமென்ஸ ியா மற்றும் சுயநினைவு தொடர்பான சிக்கல் உள்ளவர்கள் பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களுக்காக நிதி சேகரிப்பது இதன் நோக்கமாகும். பெருந்தொகையான ஸ்ரீலங்கன் ஊழியர்கள் இதில் கலந்து கொண்டு நடைபவனியை வெற்றிகரமாக நடைபெற உதவினார்கள்.

### கெயார் கிவிங்க் டேஸ்

திட்டத்தின் நோக்கம்: *விமான ஊழியர்களுக்கு மக்களோடு அரவணைப்புடன் நடந்து கொள்வதற்கான பயிற்சி*

"கெயார் கிவிங்க் டேஸ்" விசேட நிகழ்ச்சி மூலம், விமானத்தில், விமான ஊழியர்கள் சிறுவர்கள் முதியோர் மற்றும் ஊனமுற்றோருடன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதனடிப்படையில் "ஸ்ரீலங்கன் கெயார்ஸ்" மொறட்டுவ ஜனாதர முதியோர் இல்லம், தெவுசிறி செவன முதியோர் இல்லம், சலனி சிறுவர் இல்லம் மற்றும் சரண செவன சிறுவர் இல்லம் என்பனவற்றில் 8 கெயார் கிவிங்க் டேஸ் நிகழ்ச்சிகளை நடத்தியது. இந்தப் பயிற்சிகளின் முக்கிய அம்சமாக இந்த இல்லங்களைச் சுத்தம் செய்யவும், அங்குள்ள சிறுவர்கள் முதியோருடன் இணைந்து செயற்படவும் விமான ஊழியர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது..

## சூழல் முகாமைத்துவம்




யுவ ளுசுடுயுமெயஇெ றந யசந உழஅஅவைவநன வை ழூரச நககழசவள வழ வைெநபசயவந ஸ்ரீலங்கன் ஆகிய நாம், எமது அன்றாட நடவடிக்கைகளில் சூழலுக்கு மிகவும் சிறந்த செயற்பாடுகளை முன்னெடுப்பதிலும், விமான சேவை மூலம் அதற்கு ஏற்படும் பாதிப்புக்களைக் குறைக்கவும் எப்போதும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம். “பூமிக்கு சிநேகமான ஸ்ரீலங்கன்” என்ற தொனிப்பொருளில் 2009 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது சூழல் கொள்கை மூலம், சொத்துக்களை மிகவும் செயற்திறன்மிக்க முறைகளில் பயன்படுத்துவதில் நாம் ஈடுபாடு காட்டி வருகின்றோம். கடின கழிவுகளையும், பசுமை வாயுக்களையும் முகாமைத்துவம் செய்வதில் மிகவும் கவனமாகச் செயற்பட்டு வருகின்றோம். இதற்கு மேலதிகமாக, சூழல் தொடர்பான தீவிர சிக்கல்களுக்கு எதிராக எமது குரலையும் எழுப்பி விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றோம். இதன் மூலம், பூமி வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கு எதிராக எமது பங்களிப்பை நாம் பெற்றுக்கொடுத்து வருகின்றோம்.

ஸ்ரீலங்கன் ஆகிய நாம், எமது அன்றாட நடவடிக்கைகளில் சூழலுக்கு மிகவும் சிறந்த செயற்பாடுகளை முன்னெடுப்பதிலும், விமான சேவை மூலம் அதற்கு ஏற்படும் பாதிப்புக்களைக் குறைக்கவும் எப்போதும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம். “பூமிக்கு சிநேகமான ஸ்ரீலங்கன்” என்ற தொனிப்பொருளில் 2009 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது சூழல் கொள்கை மூலம், சொத்துக்களை மிகவும் செயற்திறன்மிக்க முறைகளில் பயன்படுத்துவதில் நாம் ஈடுபாடு காட்டி வருகின்றோம். கடின கழிவுகளையும், பசுமை வாயுக்களையும் முகாமைத்துவம் செய்வதில் மிகவும் கவனமாகச் செயற்பட்டு வருகின்றோம். இதற்கு மேலதிகமாக, சூழல் தொடர்பான தீவிர சிக்கல்களுக்கு எதிராக எமது குரலையும் எழுப்பி விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றோம். இதன் மூலம், பூமி வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கு எதிராக எமது பங்களிப்பை நாம் பெற்றுக்கொடுத்து வருகின்றோம்.

இதற்கென எம்மிடம் குழு ஒன்றுள்ளது. அது, சூழல் உபாயகர நடவடிக்கைகள் மற்றும் ஆளுமைக் குழுவாகும். இது, எமது சூழல் சார்ந்த செயற்பாடுகளுடன், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களை ஒன்றிணைத்து, சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கத்தினதும் வயோடைவசிட்டி ஸ்ரீலங்கா நிறுவனத்தின் ஒத்துழைப்புக்களையும் பெற்றுக் கொள்கிறது. சர்வதேச மற்றும் உள்நாட்டு என்ற இரு பாகங்களிலும் சூழல் தொடர்பான சட்டதிட்டங்களை முழுமையாகப் பேணுவதற்கும், இணங்கி நடப்பதற்கும் நாம் முழுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

### சக்திவலு முகாமைத்துவம்

விமான சேவைகள் துறையில் சக்திவலு முகாமைத்துவம் ஒரு முக்கிய அம்சமாகும். செயற்பாட்டு செயற்திறன் மற்றும் சூழல் ஸ்திரத்தன்மை ஆகியவற்றில் இது முக்கியத்துவம் பெறுகின்றது. எனவே, சக்தி வலுவை செயற்திறனுடன் பயன்படுத்துவதில் எவ்வாறு செயற்படுவது என்பதை அறிந்து கொள்வதில் நாம் பெருமளவில் ஆர்வம் காட்டி வருகின்றோம். எமது சக்திவலு முகாமைத்துவ உபாகர நடவடிக்கைகள் இரண்டு பிரிவுகளாக செயற்படுகின்றன.

1. வெப்ப சக்தி முகாமைத்துவம்

தரைச் செயற்பாடுகள் மற்றும் விமானப் பயணங்களில் குறைந்தளவு எரிபொருளை சிக்கனமாகச் செலவிடுதல் என்பன முக்கியமாகும். மொத்த சக்திவலு பயன்பாட்டில் 99% ஐ வெப்ப சக்தி பயன்படுத்துகிறது. எமது எரிபொருள் முகாமைத்துவக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட, விமான நடவடிக்கைகள், எரிபொருள் முகாமைத்துவப் பிரிவானது, நன்கு வரையப்பட்ட சக்தி உபாய முறையொன்றை அமுல்படுத்தி, சக்தி செலவினத்தைக் கணக்கிட்டு, உள்ளக ரீதியாக உருவாக்கப்பட்ட எரிபொருள் முகாமைத்துவத் தகவல் மத்திய நிலையம் ஒன்றை ஈடுபடுத்தி வருகின்றது. இதன் மூலம், விமான நடவடிக்கைகள் பிரிவுக்கு எரிபொருள் பாவனையை மேற்பார்வை செய்யவும், புகை வெளியேற்றம் மற்றும் செயற்திறனுடன் எரிபொருள் பாவனை என்பன தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள முடியும். அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரக்கு பயணங்களை ஆரம்பித்தது முதல், அதாவது 2017 இன் இறுதிப் பகுதியில் எரிபொருள் பாவனை அதிகரித்தது. பாவனை அதிகரித்தாலும் கூட எமது எரிபொருள் செயற்திறன் தொழிற்துறையின் ஏனைய

**விமான எரிபொருள் பயன்பாடு**



## முகாமைத்துவக் கலந்துரையாடல் தொடர்ச்சி.

**விமான எரிபொருள் செயற்திறன்**




**மின்சாரப் பயன்பாடு**




QAS காபன் நியூட்றல் சான்றிதழ்

சராசரிகளைவிடக் ஓரளவு குறைவாகவே காணப்படுகிறது. இதற்கு நாம் மேற்கொண்டுள்ள கட்டுப்பாடுகள் மற்றும் விமான நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்திறன் மிக்க தீர்மானங்கள் என்பன காரணமாகும்.

2. மின்சார முகாமைத்துவம்

மின்சார முகாமைத்துவம், “பிலெனட் பிரென்லி ஸ்ரீலங்கன்” திட்டத்தின் கீழ், சொத்துக்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் உள்ளது. மின்சாரப் பாவனையைக் குறைப்பதற்கும், சோலார் விளக்குகளைப் பயன்படுத்தவும், LED மின் விளக்குகளை உபயோகிக்கவும், சோலார் டியூப்களை பாவிக்கவும் இவை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஊழியர்களுக்கு ஏற்பாடு செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### கழிவு முகாமைத்துவம்

விமானப் பயன்பாட்டுத் துறையில் பெருமளவு கழிவு உருவாகின்றன. அவற்றை வெளியேற்றுவதற்கு செயற்திறன்மிக்க வழிமுறை ஒன்றை உருவாக்குவது மிகவும் முக்கியமாகும். கழிவுகளை முகாமைத்துவப்படுத்த பல்வேறு வளங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில், நாம் குறைத்தல், மீள் பாவனை, மீள் சுழற்சி என்ற மூன்று அம்சங்கள் கொண்ட கழிவு முகாமைத்துவத் திட்டம் ஒன்றை அமுல்படுத்தி வருகின்றோம்.

எமது கடின கழிவுகள் உணவுக் கழிவு, பேப்பர், இரும்பு, பிளாஸ்டிக் மற்றும் இலத்திரனியல் கழிவுகள் என தரம் பிரிக்கப்பட்ட பின்னரே வெளியேற்றப்படுகின்றன. எம்மிடம் உயிரியல் வாயு உற்பத்தி கருவிகள் இருப்பதனால், எமது பிரதான உணவகத்தின் உணவுக் கழிவுகள் சக்திவலு உருவாக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

### காபன் வெளியேற்றம்




### காபன் வெளியேற்றம்

எமது காபன் வெளியேற்றத்தைக் குறைக்கும் செயற்பாடுகள் மிகவும் வரவேற்பைப் பெற்றவையாகும். இந்த அடிப்படையில் மிகவும் கடினமான மேற்பார்வை முறைகள், சக்திவலு செயற்திறன் நடவடிக்கைகள், பயணப் பாதை சிறப்பாக்கல் செயற்பாடுகள், எடை குறைந்த விமானப் பயன்பாட்டுப் பொருட்கள் என்பனவற்றுடன் ஈடுபாட்டுடன் கூடிய எரிபொருள் சிக்கனத் தேவைகளை முதன்மையாகக் கொண்ட குழுவையும் நாம் கொண்டுள்ளோம்.

எமது தொண்டர் காபன் செயலிழக்கச் செய்தல் திட்டமான “பிளைகிறீன்” ஊடாக நிகர காபன் வெளியேற்றத்தை இல்லாதொழிக்க நாம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம். சர்வதேச விமானப் போக்குவரத்துச் சங்கத்துடன் இணைந்து, இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ள நாம், அதன் மூலம் எமது ஊழியர்கள், பயணிகள் ஆகிய அனைவருக்கும் காபன் அற்ற செயற்றிட்டம் ஒன்றில் முதலீடு செய்ய வாய்ப்புக்களை வழங்கியுள்ளோம். இந்தத் திட்டம், சர்வதேச நிகர காபன் வெளியேற்றக் கட்டுப்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு, தரக் கட்டுப்பாட்டு உறுதிப்படுத்தல்கள் (QAS) அங்கீகாரங்களையும் பெற்று 40 இடங்களில் சுயாதீன QAS கணக்காய்வுகளை மேற்கொள்கிறது.

காபன் வெளியேற்றத்தைக் கண்காணிக்கும் எமது திட்டமான OASIS அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. அது, ஸ்ரீலங்கன் நிறுவனத்தின் காபன் வெளியீட்டை முழுமையாகக் கண்காணித்து, தகவல்களை சேகரித்து வருகிறது. இதன் இரண்டாம் கட்ட நடவடிக்கையாக, இந்தத் தரவுகளை முகாமைத்துவ அறிக்கைகளில் பதிவு செய்து, தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் 2017/18 வருடாந்த அறிக்கையில் காபன் வெளியீடு 1.4m tCO2 ஆக இருப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது.

நாம் தொழில்நுட்பத்தை சிறந்த முறையில் பயன்படுத்தி, விசேடமாக தொடர்புகளின் போது இலத்திரனியல் ஆவணங்களை பயன்படுத்தி, காகிதப் பாவனையைக் குறைத்து வருகின்றோம். பிரசித்தி பெற்ற மீள் சுழற்சி நிறுவனம் ஒன்றின் மூலம் கடதாசி மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை நாம் மீள் சுழற்சி செய்து வருகின்றோம். இலத்திரனியல் கழிவுகளும், அங்கீகரிக்கப்பட்ட நிறுவன நடவடிக்கைகளுக்கு அமைய வெளியேற்றப்படுகின்றன.

### நீர் முகாமைத்துவம்

நிறுவனத்தின் பிரதான நீர் தேவைப்பாடுகள் உள்ளக நீர் ஆதாரம் ஒன்றின் மூலம் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. இந்த நீர், தினசரி சுத்திகரிக்கப்பட்டு, குறித்த இடைவெளிகளுக்கு அமைய பரிசோதனை செய்யப்படுகின்றன. எமது தொழிற்சாலைகளினால் வெளியேற்றப்படும் கழிவு நீரை வெளிச் சூழலுக்கு அனுப்ப முன்னர், எமது கழிவு நீர் சுத்திகரிப்புப் பிரிவு அவற்றை சுத்திகரிக்கிறது. இதன் பின், எஞ்சிய கழிவுகள் அனுமதிப்பத்திரம் பெற்ற நிறுவனம் ஊடாக கட்டுப்பாட்டு சூழல்களில் முறையான வழிமுறைகளுக்கு அமைய வெளியேற்றப்படுகின்றன. புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட A320 ஹங்கர் மற்றும் அதன் தொழிற்சாலைக்கும் இவ்வாறானதொரு கழிவு நீர் முகாமைத்துவத் திட்டத்தைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### சூழல் தொடர்பான நிகழ்ச்சிகள்

“பிலனெட் பிரன்ட்லி ஸ்ரீலங்கன்” என்ற எமது செயற்பாட்டிற்கு அமைய, பசுமையான சமூகப் பொறுப்பு நடவடிக்கைகளை விழிப்புணர்வுத் திட்டங்கள் மற்றும் பசுமை செயற்பாட்டுத் திட்டங்கள் மூலம் நாம் முன்னெடுத்து வருகின்றோம். எமது ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் சமூகம் ஆகிய அனைவரையும் ஈடுபடுத்தி, அறிவுறுத்தி, இந்த நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். இதன் பிரதான அம்சங்கள் பின்வருமாறு:

# முகாமைத்துவக் கலந்துரையாடல் தொடர்ச்சி.



ஏர்த் ஹவர் "காட்டரலி" நடுகைத் திட்டம்



பாடசாலை பசுமை கழகம்

### புளு பிரின்ட் திட்டம்

வேல் அன்ட் டொல்பின் கென்சர்வேசன் யூகே என்ற ஒரு முன்னணி கடல் விலங்குகள் பாதுகாப்பு நிறுவனத்துடன் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் இணைந்து புளு பிரின்ட் திட்டத்தை செயற்படுத்துகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் திமிங்கிலங்களைப் பார்வையிடலுக்காக படகு மூலம் செல்லும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் பற்றி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

### பாடசாலை பசுமை கழகம்

சூழலின் முக்கியத்துவம் மற்றும் எமது பொறுப்பு என்பன பற்றி பாடசாலை மாணவர்களுக்கு விழிப்பூட்டும் எமது சூழல் பிரிவு மற்றும் குழும சமூக பொறுப்புப் பிரிவு "ஸ்ரீலங்கன் கெயார்ஸ்" உடன் இணைந்து, பாடசாலை பசுமைக் கழகத்தை உலக சூழல் தினத்தில் ஆண்டியம்பல மகா வித்தியாலயத்தில் உருவாக்கியது.

இந்தக் கழகத்தில் 50 பேர் அங்கத்துவம் பெற்றுள்ளனர். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம், சூழலைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம், பசுமை செயற்பாடுகள் மற்றும் புதிய செயன்முறைகள் பற்றி மாணவர்களுக்கு அறிவுறுத்தியது. இந்தக் கழகத்தின் ஊடாக சிறுவர்களுக்கு சூழலை பாதுகாப்பது தொடர்பான அவர்களது கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள வாய்ப்பு வழங்கப்படுகின்றது. ஸ்ரீலங்கன் குழு கழகத்தின் செயற்பாடுகளுக்கு வழிகாட்டுவதோடு, பாடசாலைக்கும் சமூகத்திற்கும் பயனிக்கக்கூடிய நீண்டகால திட்டங்களில் அவர்களை ஈடுபடுத்தவும் செயற்பட்டு வருகின்றது. இதனடிப்படையில், ஸ்ரீலங்கன் குழு அங்கத்தவர்களுக்கு கடதாசியை மீள் சுழற்சி செய்வது தொடர்பான அறிவைப் பெற்றுக்கொடுத்ததோடு, இலங்கையின் மிகப்பெரிய கடதாசி ஆலைகளில் ஒன்றான ஹொரணையில் அமைந்துள்ள நித்ய பேப்பர்ஸ் அன்ட் பொட் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்திற்கு சுற்றுலா ஒன்றுக்கும் அழைத்துச் சென்றது.

### வனஜீவி சஞ்சிகை

வன விலங்குகள் தொடர்பான சுற்றுலாவைப் பிரபல்யப்படுத்தும் வகையில், வன விலங்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும் வனஜீவி சஞ்சிகையை ஸ்ரீலங்கன் டிஜிட்டல் மயப்படுத்தியது. இதன் மூலம், நாட்டின் அருகி வரும் தாவரங்கள் மற்றும் விலங்குகள் பற்றி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

### ஏர்த் ஹவர்

உலக வன விலங்குகள் நிதியத்தினால் (WWF) ஏற்பாடு செய்யப்பட்ட ஏர்த் ஹவர் திட்டமானது, காலநிலை மாற்றத்திற்கு எதிராக செயற்படும் ஒன்றாகும். இந்தத் தினத்தைக் கொண்டாடும் வகையிலும், குறித்த மணித்தியாலத்தை தாண்டிச் சென்ற செயற்பாடுகளிலும், எமது சூழல் குழு ஊழியர்களையும் இணைத்துக் கொண்டு மர நடுகை இயக்கம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இதனடிப்படையில், நாம் எமது ஊழியர்களுக்கு 300 காட்டரலி தாவரங்களைப் பெற்றுக்கொடுத்து நடுகை செய்ய ஏற்பாடு செய்ததோடு, அவற்றை இரண்டு மாதங்களுக்கு பராமரிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதில் அனைவரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். 15 ஊழியர்கள் தொண்டர் அடிப்படையில் நீர்கொழும்பு கடற்கரையில் பிரதேசத்தின் கடற்கரை பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகளுடன் இணைந்து தாவரங்களை நடுகை செய்தனர்.

### வன விலங்குகளுக்கான ஒன்றுகூடல்

வன விலங்குகளுக்கு எதிரான வர்த்தகத்தைத் தடுக்கும் முகமாக, ஸ்ரீலங்கன் நிறுவனம் சர்வதேச நிறுவனம் ஒன்றான யுனைட்டெட் போர் வோர்ள்ட் வைற் என்ற நிறுவனத்துடன் இணைந்துள்ளது. ஐக்கிய இராச்சியத்தின் அரச மையத்துடன் இணைந்து ஸ்ரீலங்கன் நிறுவனம் வன விலங்குகளைப் பாதுகாக்க ஏனைய நிறுவனங்களுடனும் ஒன்றுசேர்ந்து பக்கிங் ஹாம் மாளிகையின் ஒப்பந்தத்தின் 11 அம்சங்களை பின்பற்றத் தீர்மானித்தது.

### இணக்கம்

சூழல் மீதான பொறுப்புக்கு முன்னுரிமை வழங்கி, நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தேவைப்பாடுகளுக்கு இணங்கி, விமானப் பயணத்துறையின் சூழல் மீதான கட்டுப்பாடுகளுடன் இணைந்து நாம் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம், இந்த இணக்கத்தை மீறியமைக்காக எந்தவிதமான தண்டப் பணங்களுக்கோ, தண்டனைச் செயற்பாடுகளுக்கோ குறித்த ஆண்டில் உள்ளாக்கப்படவில்லை.

# நிதியியல் அறிக்கைகள்


| | |
|---|---|
| பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை | 45 |
| சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 50 |
| பணிப்பாளர்களின் பொறுப்பாண்மைக் கூற்றுக்கள் | 51 |
| சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை | 52 |
| நிதி நிலைமை அறிக்கை | 54 |
| இலாபம் அல்லது நட்ட அறிக்கை | 55 |
| விரிவான வருமான அறிக்கை | 56 |
| பங்கு மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய அறிக்கை | 57 |
| காசுப் பாய்ச்சல் அறிக்கை | 58 |
| நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் | 59 |

# பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை

சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை 2018 மாச்சு 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கையினைச் சமர்ப்பிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றது.

### பிரதான நடவடிக்கைகளும் வர்த்தக மீளாய்வும்

இலங்கையின் குறித்துரைக்கப்பட்ட விமானப் போக்குவரத்துத் துறை என்ற முறையில் பன்னாட்டுத் தொழிற்பாடுகள், பயணிகள், சரக்கு மற்றும் அஞ்சல் என்பனவற்றைக் கொண்டு செல்வதற்காக அட்டவணையிடப்பட்ட / அட்டவணையிடப்படாத விமானப் பணிகளை நடத்துவதே கம்பனியின் முக்கியமான வர்த்தக நடவடிக்கையாகும். கம்பனியின் ஏனைய முக்கிய நடவடிக்கைகளில் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலும், மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திலும் விமான முனைக்கோடிப் பணிகளை வழங்குதல், விமானங்களில் தீர்வையற்ற பொருட்களை விற்பனை செய்தல், நாட்டிற்கு உள்ளேயும், வெளியேயுமான விடுமுறைப் பொதிகளைச் சந்தைப்படுத்தல் என்பனவும் உள்ளடங்கியிருந்தன. மூன்றாந்தரப்பு பேணலை வழங்குதல், பறப்புத் தொழிற்பாட்டுப் பணிகளின் ஏற்பாடு மற்றும் வான் போக்குவரத்து தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் என்பனவும் கம்பனியின் துணை நடவடிக்கைகளில் அடங்கியிருந்தன.

இந்நிதியியல் ஆண்டுப் பகுதியில் கம்பனியின் நடவடிக்கைத் தன்மைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களெதுவும் காணப்படவில்லை.

குழுமமானது, கம்பனியினையும் அதற்கு முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனமான வரையறுக்கப்பட்ட சிறிலங்கன் கேட்டறிங் நிறுவனத்தையும் உள்ளடக்கியிருந்தது. இதன் முக்கிய நடவடிக்கையாக இலங்கை கட்டுநாயக்காவிலுள்ள பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தினூடாகவும், மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தினூடாகவும் தொழிற்படுகின்ற விமான நிறுவனங்களுக்கு பறப்புக்களில் உணவுப் பரிமாறல் வசதிகளை வழங்குவதும் காணப்படுகின்றது. ஏனைய துணை நடவடிக்கைகள், பொதுமக்கள் மற்றும் மாறிச் செல்லும் பயணிகளுக்காக உணவகங்களை தொழிற்படுத்தல், சலவைப் பணிகளுக்கான ஏற்பாடுகள் மற்றும் மாறிச் செல்லும் பயணிகளுக்கான சுற்றுலா விடுதிகளை முகாமைப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

### நிதியியல் கூற்றுக்களும் கணக்காய்வாளர் அறிக்கையும்

2018 மாச்சு 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான குழுமத்தின் முதன்மை நிதி மற்றும் நிருவாக அலுவலரினாலும், இரண்டு பணிப்பாளர்களினாலும் சரியான முறையில் கையொப்பமிடப்பட்ட முழுமையான நிதியியல் கூற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் சுயாதீனமான கணக்காய்வாளர் அறிக்கையும் இவ்வறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளன.

### கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதியியல் கூற்றுக்களைக் தயாரிக்கையில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் 59 இலிருந்து 69 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

### குழுமத்தின் மொத்தப் புரள்வு

குழுமத்தின் மொத்தப் புரள்வு இ.ரூ. 164,859 மில்லியனாகக் (2016/17இல் இ.ரூ. 138,591 மில்லியன்) காணப்பட்டது.குழுமத்தின் மொத்தப் புரள்வு தொடர்பான விபரமானதொரு பகுப்பாய்வு, நிதியியல் கூற்றின் குறிப்பு 20இல் தரப்பட்டுள்ளது. கம்பனிக்கும் அதற்கு முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனமான சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்டிற்கும் இடையிலான கொடுக்கல் வாங்கல்கள் நியாயமான சந்தை விலைகளிலேயே மேற்கொள்ளப்பட்டன.

### பெறுபேறுகள்

வரி விதிப்பிற்குப் பின்னர் ஆண்டிற்கான குழுமத்தின் தேறிய இழப்பு இ.ரூ.18,585 மில்லியனாகக் (2016/17: இ.ரூ. 28,340 மில்லியன்) காணப்பட்டது. (2016/17 இ.ரூ 25 மில்லியன்) குழுமம் மொத்தமாக இ.ரூ 6 மில்லியன் வரிச் செலவை எதிர்கொண்டது.

இவ்வாண்டிற்கான இலாபம் அல்லது இழப்பிற்கான ஒன்று திரட்டப்பட்ட கூற்று 55 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

### குழுமத்தின் முதலீடு

சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் மீதான இவ்வாண்டிற்குரிய குழுமத்தின் மூலதனச் செலவினம் இவ்வாண்டுப் பகுதியில் இ.ரூ. 1,676 மில்லியனாகக் (2016/17: இ.ரூ. 1,094 மில்லியன்) காணப்பட்டது.

### சொத்து, பொறி மற்றும் சாதனம்

அறிக்கையிடும் திகதியிலுள்ளவாறு குழுமத்தின் சொத்து, பொறி மற்றும் சாதனத்தின் தேறிய ஏட்டுப் பெறுமதி இ.ரூ. 10,348 மில்லியனாகக் (2016/17: இ.ரூ.9,834 மில்லியன்) காணப்பட்டது. சொத்து, பொறி மற்றும் சாதனம் மற்றும் அவற்றின் அசைவுகளின் விபரங்கள் நிதியியல் கூற்றுக்களின் குறிப்பு 4இல் தரப்பட்டுள்ளது.

### கூறப்பட்ட மூலதனம்

கம்பனியின் கூறப்பட்ட மூலதனம் இ.ரூ. 51,617 மில்லியனாக (2016/17: இ.ரூ. 51,617 மில்லியன்) காணப்பட்டது.

### ஒதுக்குகள்

2018 மாச்சு 31ஆம் திகதியிலுள்ளவாறான குழுமத்தின் மொத்த ஒதுக்குகள் எதிர்க்கணியமான இ.ரூ. 177,201 மில்லியனாக (2016/17: எதிர்க்கணியமான இ.ரூ. 159,411 மில்லியன்) காணப்பட்டது. இது, இ.ரூ. 181,821 மில்லியன் கொண்ட ஒன்றுசேர்ந்த இழப்புக்கள், (2016/17: இ.ரூ. 163,620 மில்லியன்) இ.ரூ. 4,620 மில்லியன் (2016/17: இ.ரூ. 4,209 மில்லியன்) கொண்ட மூலதன ஒதுக்கங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. இவ்வொதுக்கங்களின் அசைவுகள் நிதியியல் கூற்றுக்களிலுள்ள பங்குரிமை மூலதனங்களில் காணப்படும் மாற்றங்களினது கூற்றில் காட்டப்பட்டுள்ளது.

### கம்பனி நன்கொடைகள்

குழுமம் இவ்வாண்டில் இ.ரூ. 2.48 மில்லியன் (2016/17 - 2.14 மில்லியன்) கொண்ட நன்கொடையினை வழங்கியுள்ளது.

## பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை தொடர்ச்சி.

### வரி விதிப்பு

இலங்கை முதலீட்டுச் சபையுடனான உடன்படிக்கையின் நியதிகளின்படி, கம்பனி 2013 மாச்சு 31ஆம் திகதி வரை வரி விடுப்பினை அனுபவித்தது. 2011ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்நாட்டரசிறை (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2021 மாச்சு 31ஆம் திகதி வரை கம்பனி அதன் வியாபார நடவடிக்கைகள் தொடர்பான சகல வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்பட்டிருக்கிறது. எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்திற்கு அமைய, நிறுவனம், அதன் சகல வர்த்தக நடவடிக்கைகளுக்கும் 2018 ஏப்ரல் 01 ஆம் திகதி தொடக்கம் வரி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

தற்பொழுது இரட்டை வரி விதிப்பு உடன்படிக்கைகள் இல்லாத நாடுகளில் மேற்கொள்ளும் கடல் கடந்த தொழிற்பாடுகளின் மீது வரி செலுத்துவதற்கு கம்பனி பொறுப்புடையதாகும்.

துணை நிறுவனமான வரையறுக்கப்பட்ட சிறிலங்கன் கேட்டறிங், 2021 மே 30 ஆம் திகதி வரை இலங்கை முதலீட்டுச் சபையுடனான உடன்படிக்கைக்கு அமைய வரிச் சலுகை காலப்பகுதி ஒன்றைக் கொண்டுள்ளது. தற்போது விமானங்களின் சமையலறை மற்றும் மாறிச் செல்லும் பயணிகளுக்கான உணவகம், விமான சேவை லொன்றி, நுமு லோஞ்ச் ஆகியன 2021 மே 30 வரை முழுமையான வரிச் சலுகை பெற்றுள்ளன. அதன் பின், முழுமையான நிகர இலாபம் 2029 மே 30 ஆம் திகதி வரையான 08 வருடங்களுக்கு 15மூ குறைந்த வரி வீதத்தில் வரி செலுத்த வேண்டும். பொது உணவகம், வெனிலா பொட் உணவகம், சேமொண்டு உணவகம் மற்றும் உள்நாட்டு லொன்றி என்பனவற்றினால் பெற்றுக்கொள்ளப்படும் வருமானம் தற்போது காணப்படும் 28மூ வரி வீதத்தில் வரி செலுத்த வேண்டும்.

### பங்குத் தகவல்கள்

2018 மாச்சு 31இல் உள்ளவாறான பங்குத் தகவல்கள் வருமாறு:

| பங்குடமைகள் | பங்குகளின் எண்ணிக்கை | உடமைகளின் வீதம் % |
|---|---|---|
| இலங்கை அரசு | 511,574,169 | 99.11% |
| ஊழியர் சேமலாப நிதியம் | 1,863,676 | 0.36% |
| ஏனையவை | 2,736,510 | 0.53% |

### சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி ஒழுகும் தன்மை

கம்பனியானது ஏற்புடைத்தான சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் எல்லா நேரங்களிலும் இணங்கிச் செல்வதனை உறுதிப்படுத்தியிருக்கிறது. கணக்காய்வுக் குழுவின் தொடர்பான சபைகளின் காலாண்டுக் கூட்டங்களில் முறைப்பாடுகளையும், முறைப்பாடுகள் தொடர்பான அறிக்கைகளையும் சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவ அலுவலர்கள் பொறுப்பாக இருந்தனர்.

### தொடர்பான தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள்

தொடர்பான தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் நிதியியல் கூற்றுக்களின் குறிப்பு 28இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### எதிர்பாராத பொறுப்புக்கள் மற்றும் மூலதனக் கடப்பாடுகள்

2018 மாச்சு 31 இல் உள்ளவாறான எதிர்பாராத பொறுப்புக்களும், அந்த நாளன்று உள்ளவாறான மூலதனச் செலவினத்தில் செய்யப்பட்ட கடப்பாடுகளும் நிதியியல் கூற்றுக்களின் குறிப்பு 25இல் தரப்பட்டுள்ளன.

### அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் ஏற்படுகின்ற நிகழ்வுகள்

நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்பு 27 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் தவிர, சீராக்கத்தினை அல்லது வெளிப்படுத்துகையினைத் தேவைப்படுத்துகின்ற எந்தவொரு நிகழ்வும் அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் ஏற்படவில்லை.

### மனித வளங்கள் / தொழில்நிலைக் கொள்கைகள்

கம்பனியானது, தனது எதிர்கால வெற்றிகளுக்குத் தேவையான தேர்ச்சியையும், அறிவையும் ஊழியர்கள் அபிவிருத்தி செய்திருக்கின்றனர் என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில், மனித வளங்களில் தொடர்ந்தும் முதலீடுகளை மேற்கொண்டது. அது, புதிய வியாபார முன்னுரிமைகளுடன் இணைந்து செல்லும் விதத்தில் காத்திரமான தொழிற்பாட்டினையும் நடைமுறைப்படுத்தியது.

தனிப்பட்டவர்களைப் பொறுத்தவரையில், குழுமத்தின் தொழில்நிலைக் கொள்கையானது, பால், இனம் அல்லது சமயம் என்பனவற்றைக் கருத்திற்கொள்ளாது, சமமான தொழில் வாய்ப்புக்களை வழங்குவதேயாகும். தொழில் ரீதியான சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நியமங்கள் கணிசமான அளவு கவனத்தினைப் பெற்றுள்ளன.

ஆண்டின் இறுதியில் கம்பனியினால் தொழில் வழங்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை 7,019 (2016/17: 7,021) ஆகவும் துணை நிறுவனத்தின் தொழில் வழங்கல் 1,071 (2016/17: 1,022) ஆகவும் காணப்பட்டது.

### சட்ட ரீதியான கொடுப்பனவுகள்

பணிப்பாளர்களின் சிறந்த அறிவு மற்றும் நம்பிக்கை என்பனவற்றின்படி, ஊழியர்கள் மற்றும் இலங்கை அரசாங்கம் தொடர்பான அனைத்துச் சட்ட ரீதியான கொடுப்பனவுகளும், நாளது வரை சரியான முறையில் செலுத்தப்பட்டிருக்கின்றன என திருப்திபடுகின்றனர்.

### சுற்றாடல் பாதுகாப்பு

குழுமத்தின் வர்த்தக நடவடிக்கைகள், சுற்றாடலின் மீது நேரடியானதும், மறைமுகமானதுமான தாக்கங்களை கொண்டிருக்க முடியும். சுற்றாடலின் மீதான மோசமான தாக்கத்தினை இயன்றவரை குறைப்பதும், தொடர்பான அதிகார சபைகளுடனான ஒத்துழைப்பினை ஊக்குவித்து ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி நடப்பதுமே குழுமத்தின் கொள்கையாகவுள்ளது.

### கம்பனி ஆளுகை / உள்ளகக் கட்டுப்பாடு

இன்றைய கம்பனி உலகில் சிறந்த ஆளுகை நடைமுறைகளைப் பின்பற்றுவது மிக இன்றியமையாததொரு தேவைப்பாடாக மாறியிருக்கிறது.

பணிப்பாளர்கள், குழும முறைமையின் உள்ளகக் கட்டுப்பாடுகளுக்கான அவர்களின் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். முறைமையானது, உத்தரவாதங்களை வழங்குதல், ஏனைய விடயங்கள், சொத்துக்களின் மீதான பாதுகாப்பு, சரியான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் தயாரிக்கப்பட்ட நிதியியல் தகவல்களின் நம்பகத்தன்மை என்பனவற்றை வழங்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. எனினும், எந்தவொரு முறைமையும் நியாயமான அளவிற்கு மாத்திரமே உத்தரவாதத்தினைக் கொண்டிருக்க முடியுமேயன்றி, முழுமையான உத்தரவாதத்தினைக் கொண்டிருக்க முடியாது. தவறுகளும், ஒழுங்கீனங்களும் நியாயமானதொரு காலப்பகுதிக்குள் தடுக்கப்படுகின்றன அல்லது கண்டுபிடிக்கப்படுகின்றன. சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை இவ்வாண்டறிக்கையின் ஒரு பகுதியாகத் தரப்பட்டுள்ளது.

நிதியியல் கூற்றுக்கள் கையொப்பமிடப்பட்ட நாளது வரையான காலப்பகுதியில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை காத்திரமான முறையில் தொழிற்பட்டமையையிட்டு சபை திருப்தியடைந்திருக்கிறது.

### தொடர்ந்து செல்லும் கரிசனைகள்

பணிப்பாளர்களின் பொறுப்பாண்மைக் கூற்றில் தெரிவிக்கப்பட்டவாறு, நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது பணிப்பாளர்கள் தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு அடிப்படையினைப் பின்பற்றியிருக்கின்றனர்.

### பணிப்பாளர்கள் சபை

கம்பனியின் அமைப்பு அகவிதிகளின் 79ஆவது உறுப்புரைக்கிணங்க, பணிப்பாளர்கள் இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பற்றிய விபரமான குறிப்புக்கள் ஆண்டறிக்கையில் பக்கங்கள் 7 இலிருந்து 10 வரை தரப்பட்டுள்ளன. திரு. ஜீ.எஸ். விதானகே முழுநேர தலைவராகவும் ஏனைய சகல பணிப்பாளர்களும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள் ஆவார்கள்.

| | |
|---|---|
| திரு. ஜீ.எஸ்.விதானகே (தலைவர்) | 2018 நவம்பர் 13 ஆம் திகதியிலிருந்து நியமனம் |
| எயார் மார்ஷல் கபில ஜயம்பதி | 2018 மார்ச் 29 ஆம் திகதியிலிருந்து நியமனம் |
| டொக்டர் திருமதி ரோஷன் பெரேரா | 2018 மார்ச் 29 ஆம் திகதியிலிருந்து நியமனம் |
| திரு. சுசந்த கட்டுகம்பல | 2018 மார்ச் 29 ஆம் திகதியிலிருந்து நியமனம் |
| திரு. ஜொஹான் விஜேசிங்க | 2018 மே 08 ஆம் திகதியிலிருந்து நியமனம் |
| திரு. எஸ்.ஜீ.சேனாரத்ன (திறைசேரியின் பிரதிநிதி) | 2018 மே 21 ஆம் திகதியிலிருந்து நியமனம் |
| பேராசிரியர் அர்ஜுன பி டி சில்வா | 2018 மே 21 ஆம் திகதியிலிருந்து நியமனம் |
| திரு. ரஞ்ஜித் பெர்னாண்டோ | 2018 மார்ச் 29 ஆம் திகதி நியமிக்கப்பட்டு 2018 நவம்பர் 12 ஆம் திகதி பதவி விலகல்) |
| திரு. மனோபிரிய தித்தவெல்ல | 2018 மார்ச் 29 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டு 2018 ஒக்டோபர் 30 ஆம் திகதி பதவி விலகல்) |

### முன்னாள் பணிப்பாளர்கள்

2017 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் கீழே குறிப்பிடப்படும் திகதிகள் வரை பின்வரும் பணிப்பாளர்கள் கடமையாற்றி வந்துள்ளனர்.

| | |
|---|---|
| திரு. அஜித் என் டயஸ் (தலைவர்) | - 2018 மார்ச் 29 ஆம் திகதி பதவி விலகல் |
| திரு. ஜே. எம். எஸ். பிறிட்டோ | - 2018 மார்ச் 31 ஆம் திகதி பதவி விலகல் |
| திரு. ஆர். சான்க டி. டி சில்வா | - 2018 மார்ச் 30 ஆம் திகதி பதவி விலகல் |
| திரு. மகிந்த பி. ஹேரதாச | - 2018 மார்ச் 30 ஆம் திகதி பதவி விலகல் |
| திரு. ரக்கித்த எஸ். ஜெயவர்த்தன | - 2018 மார்ச் 29 ஆம் திகதி பதவி விலகல் |
| லெப்டினன் கேர்ணல் சுனில் டி. பீரிஸ் | - 2017 ஆகஸ்ட் 15 ஆம் திகதி பதவி விலகல் |
| திரு. ஹரீந்திரா கே. பாலபட்டபெந்தி | - 2018 ஏப்ரல் 02 ஆம் திகதி பதவி விலகல் |
| திரு. என். ஜே. டி சில்வா தேவ ஆதித்ய | - 2018 மார்ச் 29 ஆம் திகதி பதவி விலகல் |

### மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு

தெளிவான ஊதியக் கொள்கை ஒன்றை ஏற்படுத்தி, முறையான ஊதியக் கட்டமைப்பை உருவாக்குவதே மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழுவின் முதன்மைக் குறிக்கோளாகும்.

சந்தை நிலவரங்கள் மற்றும் ஒவ்வொரு துணை நிறுவனங்களினது நடவடிக்கைகளையும் கருத்திற் கொண்டு ஊதியக் கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

கம்பனியின் மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு ஒவ்வொரு காலாண்டிற்கு ஒரு முறையும் சந்திக்கிறது.

பின்வரும் அங்கத்தவர்கள் கம்பனியின் மனித வள மற்றும் ஊதியக் குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

எயார் மார்ஷல் கபில ஜயம்பதி (HR & RC யின் தலைவர்)
திரு. சுசந்த கட்டுகம்பல
டொக்டர் ரொஷான் பெரேரா
பேராசிரியர் அர்ஜுன டி சில்வா

2017 ஏப்ரல் 01 முதல் கீழ்வரும் திகதிகளில் பதவி விலகும் வரை பின்வரும் பணிப்பாளர்கள் மனித வள மற்றும் ஊதியங்கள் குழுவில் அங்கத்துவம் வகித்தனர்.

| | |
|---|---|
| லெப்டினன்ட் கேர்னல் சுனில் டி பீரிஸ் (HR & RC யின் தலைவர்) | 2017 ஆகஸ்ட் 15 ஆம் திகதி பதவி விலகல் |
| திரு. ஜே. எம். எஸ். பிறிட்டோ | 2018 மார்ச் 31 ஆம் திகதி பதவி விலகல் |
| திரு. ஆர். சான்க டி. டி சில்வா | 2018 மார்ச் 30 ஆம் திகதி பதவி விலகல் |

## பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை தொடர்ச்சி.

| | |
|---|---|
| திரு. மகிந்த பி. ஹரதாச | 2018 மார்ச் 30 ஆம் திகதி பதவி விலகல் |
| திரு. ரக்கித்த எஸ். ஜெயவர்த்தன | 2018 மார்ச் 29 ஆம் திகதி பதவி விலகல் |

### கணக்காய்வுக் குழு உறுப்பினர்கள்

2018 ஏப்ரல் 24 ஆம் திகதி முதல் பின்வரும் அங்கத்தவர்கள் கணக்காய்வுக் குழுவிற்கு நியமிக்கப்பட்டனர்.

திரு. மனோபிரிய தித்தவெல்ல (கணக்காய்வுக் குழுவின் தலைவர் - 2018 ஒக்டோபர் 30 வரை)
திரு. ஜீ.எஸ்.சேனாரத்ன (தலைவர் - 2019 ஜனவரை 24 முதல்)
டொக்டர் ரொஷான் பெரேரா
எயார் மார்ஷல் கபில ஜயம்பதி
பேராசிரியர் அர்ஜுன டி சில்வா (2019 ஜனவரி 02 முதல்)
திரு. சுசந்த கட்டுகம்பள (2019 ஜனவரி 24 முதல்)

திரு. எஸ்.ஜீ.சேனாரத்ன பணிப்பாளர் - திறைசேரியின் பிரதிநிதி மற்றும் 2018 மே 28 ஆம் திகதி கணக்காய்வுச் சபைக்கு நியமிக்கப்பட்டார். பின்னர் 2019 ஜனவரி 24 ஆம் திகதி முதல் கணக்காய்வுக் குழுவின் தலைவராகவும் அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பின்வரும் திகதிகளில் பதவி விலகும் வரை கீழ் குறிப்பிடப்படும் அங்கத்தவர்கள் 2017 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் கணக்காய்வுக் குழுவில் அங்கத்தவராக இருந்தனர்.

| | |
|---|---|
| திரு. ஜே. எம். எஸ். பிறிட்டோ (தலைவர்) | 2018 மார்ச் 31 ஆம் திகதி பதவி விலகல் |
| திரு. ஆர். சான்க டி. டி சில்வா | 2018 மார்ச் 30 ஆம் திகதி பதவி விலகல் |
| திரு. மகிந்த பி. ஹரதாச | 2018 மார்ச் 30 ஆம் திகதி பதவி விலகல் |
| திரு. ரக்கித்த எஸ். ஜெயவர்தன | 2018 மார்ச் 29 ஆம் திகதி பதவி விலகல் |
| லெப்டினன் கேர்ணல் சுனில் டி. பீரிஸ் | 2017 ஆகஸ்ட் 15 ஆம் திகதி பதவி விலகல் |

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை இவ்வாண்டறிக்கையின் .......... ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

### கூட்டங்களுக்கு பணிப்பாளர்களின் வருகை

இந்நிதியியல் ஆண்டில் 12 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் இடம்பெற்றுள்ளதுடன், அதில் கலந்து கொண்ட பணிப்பாளர்களின் வருகை பின்வருமாறு:

| பணிப்பாளர்கள் | கலந்து கொண்ட கூட்டங்கள் (12இல்) |
|---|---|
| திரு. அஜித் என் டயஸ் | 12 |
| திரு. ஜே. எம். எஸ். பிறிட்டோ | 12 |
| திரு. மகிந்த பி. ஹரதாச | 10 |
| திரு. ஆர். சான்க டி. டி சில்வா | 09 |
| திரு. ரக்கித்த எஸ். ஜெயவர்த்தன | 12 |
| லெப்டினன் கேர்ணல் சுனில் டி. பீரிஸ் (2017 ஆகஸ்ட் 15 இல் பதவிவிலகல்) | 02 |
| திரு. என். ஜே. டி சில்வா தேவா ஆதித்யா | 07 |
| திரு. ஹரீந்திரா கே. பாலபட்டபெந்தி | 12 |

### பணிப்பாளர் சபை - வரையறுக்கப்பட்ட சிறிலங்கன் கேட்டறிங்

சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்டின் தற்போதைய பணிப்பாளர் சபை வருமாறு:

| | |
|---|---|
| திரு. ஜீ.எஸ்.விதானகே (தலைவர்) | 2018 நவம்பர் 26 ஆம் திகதியிலிருந்து நியமனம் |
| திரு. சுசந்த கட்டுகம்பல | 2018 மார்ச் 30 ஆம் திகதியிலிருந்து நியமனம் |
| கலாநிதி திருமதி ரொஷான் பெரேரா | 2018 மார்ச் 30 ஆம் திகதியிலிருந்து நியமனம் |
| எயார் மார்ஷல் கபில ஜயம்பதி | 2018 மார்ச் 30 ஆம் திகதியிலிருந்து நியமனம் |
| திரு. எஸ்.ஜீ. சேனாரத்ன | 2018 மே 30 ஆம் திகதியிலிருந்து நியமனம் |
| பேராசிரியர் ஏ. டி சில்வா | 2019 ஜனவரி 24 ஆம் திகதி முதல் பணிப்பாளராக நியமனம் |
| திரு. ஜொஹான் விஜேசிங்க | 2018 மே 30 ஆம் திகதியிலிருந்து நியமனம் |
| திரு. ரஞ்ஜித் பெர்னாண்டோ (தலைவர்) | 2018 மார்ச் 30 இல் நியமனம். 2018 நவம்பர் 13 லிருந்து பதவி விலகல் |
| திரு. மனோபிரிய தித்தவெல்ல | 2018 மார்ச் 30 இல் நியமனம். 2018 ஒக்டோபர் 30 லிருந்து பதவி விலகல் |

திரு. ரஞ்ஜித் பெர்னாண்டோ, திரு. மனோபிரிய தித்தவெல்ல, திரு. சுசந்த கட்டுகம்பொல, கலாநிதி ரோஷன் பெரேரா மற்றும் எயார் மார்ஷல் கபில ஜயம்பதி ஆகியோர் 2018 மார்ச் 30 ஆம் திகதி முதல் வரையறுக்கப்பட்ட சிறிலங்கன் கேட்டறிங் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டனர்.

திரு. ஜொஹான் விஜேசிங்க மற்றும் திரு. எஸ்.ஜீ.சேனாரத்ன ஆகியோர் 2018 மே 30 ஆம் திகதி வரையறுக்கப்பட்ட சிறிலங்கன் கேட்டறிங் சபைக்கு நியமிக்கப்பட்டார்கள்.

பின்வரும் பணிப்பாளர்கள் குறித்த திகதியில் பதவி விலகும் வரை 2017 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் வரையறுக்கப்பட்ட சிறிலங்கன் கேட்டறிங் பணிப்பாளர் சபையில் பணியாற்றியுள்ளனர்.

| | |
|---|---|
| திரு. அஜித் என் டயஸ் (தலைவர்) | 2018 மார்ச் 29 ஆம் திகதி பதவி விலகல் |
| திரு. ஜே. எம். எஸ். பிறிட்டோ | 2018 மார்ச் 31 ஆம் திகதி பதவி விலகல் |
| திரு. ஆர். சான்க டி. டி சில்வா | 2018 மார்ச் 30 ஆம் திகதி பதவி விலகல் |
| திரு. மகிந்த பி. ஹரதாச | 2018 மார்ச் 30 ஆம் திகதி பதவி விலகல் |
| திரு. றக்கித்த எஸ். ஜெயவர்த்தன | 2018 மார்ச் 29 ஆம் திகதி பதவி விலகல் |
| லெப்டினன் கோர்ணல் சுனில் டி. பீரிஸ் | 2017 ஆகஸ்ட் 15 ஆம் திகதி பதவி விலகல் |
| திரு. ஹரீந்திரா கே. பாலபட்டபென்தி | 2018 ஏப்ரல் 02 ஆம் திகதி பதவி விலகல் |

### பணிப்பாளர்களின் ஊதியம்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் 168ஆம் பிரிவின் (1) (க)இன் தேவைப்பாடுகளுக்கு இணங்க கம்பனியின் நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்களுக்குச் செலுத்தப்பட்ட மொத்த ஊதியம் நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்பு 28இல் பக்கம் 92 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

2018 மார்ச் மற்றும் 2018 மே இல் இணைந்து கொண்ட பணிப்பாளர்கள் சுயமாகவே தீர்மானித்து நிறுவனம் இலாபகரமாகும் வரை கொடுப்பனவுகள் எதுவும் பெற்றுக்கொள்வதில்லை எனத் தீர்மானித்துள்ளனர்.

### பணிப்பாளர்களின் பங்குடமைகள்

அலுவலக அதிகாரங்களின்படி இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட திரு. ஜீ.எஸ்.விதானகே மற்றும் எயார் மார்ஷல் கபில ஜயம்பதி ஆகிய இரண்டு பணிப்பாளர்கள் கம்பனியின் 03 சாதாரண பங்குகளைக் கொண்டுள்ளனர்.

### நலவுரித்துக்களின் பதிவேடு

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளை உறுதிப்படுத்தும் விதத்தில் கம்பனி, நலவுரித்துக்களின் பதிவேட்டினைப் பேணி வந்துள்ளது. கம்பனியின் சகல பணிப்பாளர்களும் ஏனைய கம்பனிகளில் அவர்களுக்குள்ள நலவுரித்துக்களை பணிப்பாளர் சபைக்கு வெளிப்படுத்தியதுடன் அத்தகைய நலவுரித்துக்கள் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவுகள் 192(1) மற்றும் 192(2) என்பனவற்றை உறுதிப்படுத்தும் விதத்தில் பணிப்பாளர்களின் நலவுரித்துக்களின் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டன.

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு நலவுரித்துப் பதிவேடு பரிசோதனைக்குக் கிடைக்கத்தக்கதாக இருக்கும்.

### ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் நலவுரித்துக்கள்

பணிப்பாளர்கள் கம்பனியுடனான வேறு ஏதேனும் ஒப்பந்தங்களிலோ அல்லது முன்மொழியப்பட்டுள்ள ஒப்பந்தங்களிலோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எவ்வித நலவுரித்துக்களையும் கொண்டிருக்கவில்லை.

### ஆண்டுப் பொதுக்கூட்டம்

கம்பனியின் 40ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம், பட்டயக் கணக்காளர் நிறுவக கேட்போர் கூடம், மலலசேகர மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரியில் 2019 ஏப்ரல் 30ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.

ஆண்டுப் பொதுக்கூட்டத்தின் அறிவித்தல் ஆண்டறிக்கையின் 109 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

### கணக்காய்வாளர்கள்

அரசியல் யாப்பிற்குச் செய்யப்பட்ட பத்தொன்பதாவது திருத்தத்தின் 36ஆவது அமைப்பு அகவிதிக்கு இணங்க கணக்காய்வாளர் நாயகம் இத்தால் கம்பனியின் கணக்காய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கணக்காய்வுக் கட்டணம் பற்றிய விபரங்கள் நிதியியல் கூற்றுக்கான குறிப்பு 22இல் தரப்பட்டுள்ளது. கணக்காய்வாளர்கள் (ஒரு கணக்காய்வாளர் தவிர) கம்பனியுடனோ அல்லது துணைக் கம்பனியுடனோ எவ்வித தொடர்புகளையும் கொண்டிருக்கவில்லை.

சபையின் சார்பில் கையொப்பமிடப்பட்டது

**ஜீ.எஸ்.விதானகே**
*தலைவர்*

**எஸ்.ஜீ.சேனாரத்ன**
*பணிப்பாளர்*

**தல்றின் திருக்குமார்**
*கம்பனி செயலாளர் / கம்பனி செயலாளர் சேவைகளின் தலைவர்*

2019 பெப்ரவரி 28
கொழும்பு.

# சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

### வகிபாகமும் பொறுப்புக்களும்

சிறிலங்கன் எயார்லையின்ஸின் சபைக் கணக்காய்வுக் குழு செயற்பரப்பும், பொறுப்புக்களும் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட சபைக் கணக்காய்வுப் பட்டயத்தின் மூலம் ஆளப்படுகின்றது. சபைக் கணக்காய்வுக் குழுவின் நோக்கம், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர்களுக்கு உள்ளக கட்டுப்பாட்டு முறைகள், நிதி அறிக்கையிடல் செயற்பாடு, இடர் முகாமைத்துவச் செயற்பாடு, ஆளுமைச் செயற்பாடு, கணக்காய்வுச் செயற்பாடு மற்றும் நிறுவனத்தின் சட்டதிட்டங்களுடனான இணக்கமும் செயன்முறைகளும் என்பனவற்றின் நியாயமான தன்மை ஆகிய பொறுப்புக்களைச் சரிவர நிறைவேற்ற உதவுவதாகும்.

### குழு உறுப்பினர்கள்

பணிப்பாளர் சபையின் 2018 மார்ச் 31ஆம் திகதி வரையிலான கணக்காய்வுக் குழு அங்கத்தவர்கள் - ஜே.எம்.எஸ். பிறிட்டோ (தலைவர், 2018 மார்ச் 31 ஆம் திகதி பதவி விலகல்), திரு. ஆர்.சி.டி த சில்வா (உறுப்பினர், 2018 மார்ச் 30 ஆம் திகதி பதவி விலகல்), திரு. எம்.ஹாரதாச (உறுப்பினர், 2018 மார்ச் 30 ஆம் திகதி பதவி விலகல்), திரு. ஆர். ஜெயவர்த்தன (உறுப்பினர், 2018 மார்ச் 29 ஆம் திகதி பதவி விலகல்), லெப்டினன் கோ்ணல் சுனில் பீரிஸ் (உறுப்பினர், 2017 ஒகஸ்ட் 15 ஆம் திகதி பதவி விலகல்).

திரு. எஸ்.ஜீ.சேனாரத்ன 2019 ஜனவரி 24 ஆம் திகதி முதல் சபையின் கணக்காய்வுக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். சபை கணக்காய்வுக் குழுவில் பேராசிரியர் அர்ஜுன டி சில்வா (2019 ஜனவரி 02 ஆம் திகதி முதல் உறுப்பினர்) மற்றும் திரு. சுசந்த கட்டுகம்பள (2019 ஜனவரி 24 முதல் உறுப்பினர்) ஆகியோர் புதிதாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்களாவர்.

பணிப்பாளர் சபையில் கணக்காய்வுக் குழுவின் புதிய உறுப்பினர்களாக திரு. எம்.தித்தவெல்ல (தலைவர்), (2018 ஒக்டோபர் 30 ஆம் திகதி பதவி விலகல்) திரு. எஸ்.ஜீ.சேனாரத்ன (உறுப்பினர்), டொக்டர் ஆர்.பெரேரா (உறுப்பினர்) மற்றும் எயார் மார்'ல் கே.ஜயம்பதி (உறுப்பினர்) ஆகியோர் 2018 ஏப்ரல் 24 ஆம் திகதி இணைத்துக் கொள்ளப்பட்டனர். திருமதி ஏ.டி. டில்ருக்ஷி, கணக்காய்வுப் பணிப்பாளர், கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம் (பதவியேற்பு, 2017 டிசம்பர் 05 ஆம் திகதி), திரு. கே.ஏ.சி. சாமந்த (பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பொது வர்த்தகப் பிரிவு அமைச்சு (பதவியேற்பு, 2018 மார்ச் 14 ஆம் திகதி) ஆகியோர் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களில் சுயாதீன மேற்பார்வையாளர்களாக இணைந்து கொண்டனர்.

### கூட்டங்கள்

பணிப்பாளர் சபை கணக்காய்வுக் குழு 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்தில் நான்கு (4) அமர்வுகளைக் கூட்டியுள்ளது. முகாமைத்துவ அங்கத்தவர்கள் அழைப்பின் பேரில் சபைக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களில் தங்களின் விசேட பிரிவு கலந்துரையாடப்படும் சந்தர்ப்பங்களில் கலந்து கொண்டனர்.

### குழும உத்தரவாதம் மற்றும் மதியுரைப் பணிகள் பிரிவு

சிறிலங்கன் எயார்லையின்ஸின் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள், குழும உத்தரவாதம் மற்றும் மதியுரைப் பணிகள் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு, சபைக் கணக்காய்வுக் குழுவிற்கு நேரடியாக அறிக்கையளிக்கப்படுகிறது. குழும உத்தரவாதம் மற்றும் மதியுரைப் பணிகள் பிரிவு, தகவல் முறைமை / தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாடுகள் உட்பட உள்ளகக் கட்டுப்பாடுகளின் போதுமானதன்மை, வினைத்திறன் மற்றும் காத்திரமான தன்மை என்பன பற்றி சுயாதீனமானதும், குறிக்கோள் கொண்டதுமான மதிப்பீடுகளை வழங்கியதுடன், நிதியியல் அறிக்கையிடல் செயன்முறை மற்றும் தொழில்முயற்சி இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்துவதற்கும் வசதியளித்தது. குழும உத்தரவாதம் மற்றும் மதியுரைப் பணிகள், தடங்கலற்ற வியாபார முகாமைத்துவ முறைமை, ஆளுமை மற்றும் இணக்கச் செயற்பாடுகள் என்பன தொடர்பிலும் முகாமைத்துவத்திற்கு மதியுரைப் பணிகளை வழங்கியது.

### நிதியியல் ஆண்டில் சபைக் கணக்காய்வுக் குழுவின் முக்கிய நடவடிக்கைகள்

- வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தியதுடன் தகவல் முறைமை / தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாடுகள் உள்ளிட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது கண்டறியப்பட்ட முக்கிய கணக்காய்வு மற்றும் கணக்காய்வு விதந்துரைப்புக்களின் நிலையினை மீளாய்வு செய்தது.
- அத்தகைய இடர்நேர்வுகளின் தாக்கத்தினைத் தணிப்பதற்காக, முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட வியாபார இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறைகளையும் நடைமுறைகளையும் மீளாய்வு செய்தது.
- தொடர்புடைய சகல சட்டங்களும் விதிகளும் ஒழுங்குவிதிகளும் இணங்கியொழுகப்பட்டன என்பது பற்றி நியாயமான உத்தரவாதமொன்று வழங்கப்படுவதனைத் தீர்மானிப்பதற்காகக் கம்பனியின் இணங்குவிப்புக் கட்டமைப்பினை மீளாய்வு செய்தது.
- சரக்கு விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் கைநூல், ஸ்ரீலங்கன் சொத்து முகாமைத்துவப்படுத்தல் கைந்நூல், மூன்றாம் தரப்பினர் பொறியியல் செயற்பாடு பராமரிப்புக் கைந்நூல், கடன் கட்டுப்பாட்டுத் திருத்தங்கள், நிதிச் சேவைகள், குழும தகவல் பாதுகாப்புக் கைந்நூல், குழும செயற்பாட்டுக் கைந்நூல் என்பனவற்றின் ஒப்புதலுக்காக அவற்றை மீளாய்வு செய்து விதந்துரைத்தது.
- வியாபாரத் தடங்கல்கள் / அனர்த்தங்களை ஏற்படுத்தும் இடர்நேர்வுகளின் தாக்கத்தினைத் தணிக்கும் பொருட்டு தடங்கலற்ற வியாபாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதனை மீளாய்வு செய்தது.
- வெளிவாரிக் கணக்காய்வின் தன்மை, செயற்பரப்பு மற்றும் அணுகுமுறையினைக் கண்டறிவதற்காக வெளிவாரிக் கணக்காய்வு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக வெளிவாரிக் கணக்காய்வாளர்களை இது சந்தித்ததோடு, கணக்காய்வுசெய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் முகாமைத்துவக் கடிதத்தை மீள்பார்வை செய்தது.
- ஆண்டு இறுதி வரைபு நிதியியல் கூற்றுக்களை மீளாய்வு செய்ததுடன் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய அவர்களின் விடயங்களையும் சபைக்கு விதந்துரைத்தது.
- உள்ளகக் கணக்காய்வின் சுயாதீனம் மற்றும் அறிக்கையிடுகின்ற அதன் கடப்பாடுகளின் அதிகாரம் உட்பட அதன் தொழிற்பாடுகளை மீளாய்வு செய்தது.

**எஸ்.ஜீ. சேனாரத்ன**
*தலைவர்*
சபைக் கணக்காய்வுக் குழு

2019 பெப்ரவரி 28

# பணிப்பாளர்களின் பொறுப்பாண்மைக் கூற்றுக்கள்

கம்பனியினதும் குழுமத்தினதும் நிதியியல் கூற்றுக்கள் தொடர்பான பணிப்பாளர்களின் பொறுப்பாண்மைகள், பக்கம் ........ இல் காணப்படும் கணக்காய்வாளர்களின் பொறுப்புக்களிலிருந்தும் வேறுபடுகின்றன.

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் நிதியியல் ஆண்டின் முடிவிலுள்ளவாறு கம்பனியினதும் குழுமத்தினதும் விவகாரங்கள் தொடர்பான நோக்கில் உண்மையானதும் நியாயமானதுமான அம்சங்களை ஒவ்வொரு நிதியாண்டும் வழங்குகின்ற விதத்தில் நிதியியல் கூற்றுக்களையும் நிதியாண்டிற்கான கம்பனியினதும் குழுமத்தினதும் இலாப அல்லது நட்டக் கணக்கினைத் தயாரிக்க வேண்டும் என தேவைப்படுத்துகின்றது. நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் தெரிவு செய்யப்பட்டு தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்படுவதுடன் நியாயமானதும் முன்மதியுடையதுமான தீர்ப்புக்களும் மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்படுவதுடன் ஏற்புடைத்தான கணக்கீட்டு நியமங்களும் பின்பற்றப்பட்டிருக்கின்றன.

நிதியியல் கூற்றுக்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்கவும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் தகவல்களை வழங்கும் விதத்திலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்துவதற்காக கம்பனியினதும் குழுமத்தினதும் நிதியியல் நிலைமையினை நியாயமான துல்லியத்துடன் வெளிப்படுத்தக்கூடிய விதத்தில் கம்பனியும் அதன் துணை நிறுவனமும் போதுமான கணக்கீட்டு பதிவேடுகளைப் பேணுகின்றமையை உறுதிப்படுத்துவது பணிப்பாளர்களின் பொறுப்பாக இருக்கின்றது. குழுமத்தின் சொத்துக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நியாயமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அத்தகைய கருத்திற்கிணங்க மோசடி மற்றும் ஏனைய ஒழுங்கீனங்களை தடைசெய்தல் மற்றும் கண்டுபிடிக்கும் நோக்குடன் உள்ளகக் கட்டுப்பாடுகளில் பொருத்தமான முறைமைகளை நிறுவுவது தொடர்பாக பொருத்தமான தன்மைகளைப் பேணுவதற்கும் அவர்கள் பொறுப்பாக இருக்கின்றனர்.

நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது பணிப்பாளர்கள் “தொடர்ந்து செல்லும் கரிசனை“ அடிப்படையினைத் தொடர்ந்தும் பின்பற்றி வருகின்றனர். வங்கி வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வசதிக் கடிதத்தினை வழங்கியதன் மூலம் கம்பனிக்குத் தொடர்ந்து கிடைக்கும் இலங்கை அரசாங்கத்தின் ஆதரவையும் கம்பனியின் தொழிற்பாடு மற்றும் நிதியியல் நிலைமையினை வலுப்படுத்தும் நோக்குடன் அரசாங்கத்தின் முயற்சிகளையும் பரிசீலனையில் கொண்டதன் பின்னர் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொள்வதற்குப் போதுமான மூலவளங்களை குழுமம் கொண்டிருப்பதாகப் பணிப்பாளர் சபை கருதியது. மேலும், இலங்கை அரசாங்கம் 2019 பெப்ரவரி 05 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைப் ஒப்புதலின் மூலம், “தொடர்ந்து செல்லும் கரிசனை” அடிப்படையில் கம்பனி அதன் தொழிற்பாடுகளைத் தொடங்குவதற்கு நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்பு 3இன் கீழ் குறித்துரைக்கப்பட்டவாறு உத்தேச மீளமைத்தல் செயன்முறை முடியும் வரை மற்றும் 2018/19 ஆம் ஆண்டிலிருந்து அடுத்த மூன்று வருடங்களுக்குள் கம்பனி இலாபகரமானதாக மாறும் வரை தேவையான நிதியியல் ஆதரவு வழங்கப்படுமென்பதனை உறுதிப்படுத்தியிருக்கிறது.

கணக்காய்வாளர்கள் நிதியியல் கூற்றுக்கள் பற்றிய அவர்களது கருத்தினை உருவாக்குவதற்கு இயலச்செய்வதற்கு எவை பொருத்தமானது என அவர்கள் கருதினார்களோ அவை எதுவாக இருப்பினும் அவற்றைப் பரிசோதனை செய்வதற்கு அனைத்து வாய்ப்புக்களும் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பணிப்பாளர்கள் மேற்கொண்டிருந்தனர்.

பணிப்பாளர்கள் அவர்களது சிறந்த அறிவுக்கெட்டிய வரையில், அறிக்கையிடும் திகதியிலுள்ளவாறு கம்பனியினதும் அதன் துணை நிறுவனத்தினதும் அனைத்து வரிகள், தீர்வைகள் மற்றும் நிதியியல் கடப்பாடுகள் அனைத்தும் நிதியியல் கூற்றுக்களின் பொருட்டு போதுமான விதத்தில் செலுத்தப்பட்டிருக்கின்றன என்பதனை உறுதிப்படுத்துகின்றனர்.

சபையின் கட்டளைப்படி,

**தல்றின் திருக்குமார்**
*கம்பனி செயலாளர்*

2019 பெப்ரவரி 28

# சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. AVA/C/SLAL/06/18/80 ඔබේ අංකය / உமது இல. / Your No. දිනය / திகதி / Date 12 March 2019

**வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் கம்பனியின் பங்குதாரர்களிற்கு**

**வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

**நிதிக்கூற்றுக்கள்**

**அபிப்பிராயம்**

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் கம்பனியின் ("கம்பனி") நிதிக்கூற்றுக்கள் மற்றும் கம்பனியினதும் மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் (தொகுதி) ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் 2018 மார்ச் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுகஇணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பொதுத்துறையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் மூலம் இந்த கணக்காய்வினை மேற்கொள்வதற்கு நான் உதவியைப் பெற்றிருந்தேன்.

2018 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனி மற்றும் தொகுதியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனி மற்றும் தொகுதியின் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள ஒழுக்கக்கோட்பாடுகளுக்கமைய (ஒழுக்கக் கோட்பாடுகள்) நான் கம்பனியிலிருந்து சுயாதீனமாக இருப்பதுடன், ஒழுக்கக்கோட்பாடுகளுக்கமைவான எனது தார்மீக பொறுப்புகளை நான் பூர்த்தி செய்துள்ளேன். எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**தொடர்ந்தியங்கும் நிலையுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்றதன்மை**

2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் தொகுதி மற்றும் கம்பனி ஆகியவை முறையே ரூபா 18,585.15 மில்லியன் மற்றும் ரூபா 17,213.57 மில்லியன் தேறிய நட்டத்தை பெற்றிருந்தன என்பதை சுட்டிக்காண்பிக்கும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 03 தொடர்பில் உங்கள் கவனத்திற்கு கொண்டு வருவதுடன், அத்திகதியில் உள்ளபடியாக தொகுதி மற்றும் கம்பனியின் நடைமுறை பொறுப்புகள் அவற்றின் நடைமுறைச் சொத்துக்களை ரூபா 94,205.97 மில்லியனால் மற்றும் ரூபா 100,268.11 மில்லியனால் விஞ்சியிருந்ததுடன், அவற்றின் மொத்த பொறுப்புகள் அவற்றின் மொத்த சொத்துக்களை முறையே ரூபா 125,582.89 மில்லியன் மற்றும் ரூபா 132,196.34 மில்லியனால் விஞ்சியிருந்தன. குறிப்பு 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களுடனான இந்த நிகழ்வுகள் மற்றும் நிலைமைகள் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலை தொடர்பில் பாரதூரமான சந்தேகத்தினை உருவாக்கக்கூடிய பொருண்மையான நிச்சயமற்றதன்மையை குறிப்பு 3 இல் குறிப்பிடப்பட்டவாறு சுட்டிக்காண்பிக்கின்றது. 2019 பெப்ரவரி 13 ஆந் திகதிய சனாதிபதி செயலகத்தின் கடிதத்தில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த 2019 பெப்ரவரி 05 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் குறிப்பு 3 இல் வெளிப்படுத்தப்பட்ட மட்டுப்படுத்தும் காரணிகளை கருத்திற்கொண்டும், "தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு" அடிப்படையில் அதன் செயற்பாடுகளை தொடர்வதற்கு இலங்கை அரசாங்கத்தின் (ஜீஓஎஸ்எல்) ஒத்துழைப்பினை உறுதிப்படுத்தும் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி திறைசேரியின் செயலாளரால் வெளியிடப்பட்ட கடிதத்திற்கமையவும் இந்த நிதிக்கூற்றுகளானவை தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மாற்றப்படவில்லை.

**நிதிக்கூற்றுக்களிற்கான சபையினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

கம்பனியானது, ஏதேனும் சொத்தின் பெறுமதி இழக்கக்கூடிய தன்மையினைக் காட்டுகின்றதா என்பது பற்றி ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலிருந்தும் மதிப்பிட்டுக் கொள்கிறது. அத்தகைய அடையாளங்கள் ஏதும் காணப்படுமிடத்து அல்லது அத்தகைய சொத்திற்கு வருடாந்த பெறுமதி இழப்புத்தன்மை பற்றிய பரீட்சிப்புத் தேவைப்படுமிடத்து, கம்பனியானது சொத்தின் அறவிடக்கூடிய தொகை பற்றி மதிப்பீடு செய்கிறது. சொத்தொன்றின் ஏட்டுப் பெறுமதி அறவிடத்தக்க தொகையினை விஞ்சுமிடத்து அச்சொத்து பெறுமதி இழந்ததாகக் கருதப்பட்டு அறவிடத்தக்க தொகை பதிவழிக்கப்படுகின்றது. விமானங்கள் சார்ந்த சொத்துக்கள் சம்பந்தமாக அதாவது, ரொட்டபிள்கள் மற்றும் விமானங்களின் தரத்தை உயர்த்தக்கூடிய கருவிகள், ஆதனங்கள் மற்றும் பொறி மற்றும் சாதனங்கள் ஆகியனவற்றில் அடங்கும். இவற்றுக்கு பெறுமதி குறைவு ஒன்று தேவைப்படுமா என்பதை வெளிப்படுத்தக்கூடிய சுட்டிகளான பௌதீக பாதிப்புக்கள், வழக்கொழிந்து போதல் போன்றன காரணமாக விமானங்களை மீளப் பயன்படுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்படுமா என பொறியியலாளர்களின் தீர்மானத்தைப் பொறுத்து முகாமைத்துவம் சொத்துக்கள் மீது தீர்மானம் மேற்கொள்ளும்.

2.4.8 சந்தைப் பெறுமதியினை அளவிடுதல்
குழுமமானது அதன் காணி, கட்டடங்கள் மற்றும் விமானங்களுக்குள்ளேயான சமையலறைச் சாதனங்கள் என்பனவற்றைச் சந்தைப் பெறுமதியில் அளவிடுகின்றது. சந்தைப் பெறுமதி தொடர்பான வெளிப்படுத்தல்கள் குறிப்பு 4இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

சந்தைப் பெறுமதி என்பது சொத்தொன்றை விற்பதற்காக அல்லது சந்தைப் பங்கேற்பாளர்களிடையே ஒழுங்கான முறையில் பொறுப்பொன்றினை மாற்றல் செய்வதற்காக அளவிடப்படுகின்ற நாளன்று பெறப்படுகின்ற அல்லது கொடுப்பனவு செய்யப்படுகின்ற விலையாகும். சந்தைப் பெறுமதி அளவீடு, ஒன்றில், சொத்துக்களினை விற்றல் அல்லது பொறுப்புக்களை மாற்றல் செய்தல் பற்றிய கொடுக்கல்வாங்கல்களின் கணிப்பினை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்கான முதன்மைச் சந்தையில்/ அல்லது
- முதன்மைச் சந்தை இல்லாதவிடத்து, சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்கான மிக அநுகூலமான
- சந்தையில்

முதன்மை அல்லது மிக அநுகூலமான சந்தைக் குழுமத்தினால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களை விலையிடும் பொழுது சந்தைப் பங்கேற்பாளர்கள் தமது பொருளாதார நலன்களை மிகக் கவனத்தில் கொண்டே தொழிற்படுவர் என்ற அனுமானத்தின் அடிப்படையில் சந்தைப் பங்கேற்பாளர்களின் அனுமானத்தினைப் பயன்படுத்தி அத்தகைய சொத்துக்களின் சந்தைப் பெறுமதி அளவிடப்படுகிறது.

நிதியல்லாச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி அளவீடானது அத்தகைய சொத்துக்களை உயர்ந்த மற்றும் சிறந்த முறையில் பயன்படுத்துவதன் மூலம் பொருளாதார நன்மைகளை உருவாக்கிக் கொள்ளக்கூடிய சந்தைப்பங்கேற்பாளரின் இயலாற்றலை அல்லது இன்னொரு சந்தைப் பங்கேற்பாளர்களுக்கு விற்பதன் மூலம் அது உயர்ந்த மற்றும் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளப்படுவதனைக் கணக்கில் எடுத்துக் கொள்கிறது.

குழுமமானது குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான மதிப்பீட்டு நுணுக்கங்களைப் பயன்படுத்துவதுடன் சந்தைப் பெறுமதியினை மதிப்பிடுவதற்குப் போதுமான தரவுகளைக் கொண்டிருப்பதன் மூலம் தொடர்பான அவதானிக்கத்தக்க உள்ளீடுகளை உயர்ந்தளவில் பயன்படுத்திக் கொள்வதுடன் அவதானிக்க முடியாத உள்ளீடுகளை பயன்படுத்துவதனை மிகக் குறைத்துக் கொள்கிறது.

சந்தைப் பெறுமதியில் அளவீடு செய்யப்பட்ட அனைத்துச் சொத்துக்களும் சந்தைப் பெறுமதி அளவுகளில் வகைப்படுத்தப்பட்டு, பொதுவாக சந்தைப் பெறுமதி அளவீட்டில் குறிப்பிடத்தக்களவானதாகக் காணப்பட்ட குறைந்தமட்ட உள்ளீடுகளின் அடிப்படையில் பின்வருமாறு விபரிக்கப்படுகிறது.

- மட்டம் 1 - ஒரேவிதமான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்கான தீவிரமான சந்தைகளில் குறிப்பீடு செய்யப்பட்ட (சீராக்கப்படாத) சந்தை விலைகள்
- மட்டம் 2 - சந்தைப் பெறுமதி அளவீட்டில் குறிப்பிடத்தக்களவிலானதாகக் காணப்பட்ட குறைந்த மட்ட உள்ளீடுகளுக்கான மதிப்பீட்டு நுணுக்கம் நேரடியாக அல்லது மறைமுகமாக அவதானிக்கப்படத்தக்கவை
- மட்டம் 3 - சந்தைப் பெறுமதி அளவீட்டில் குறிப்பிடத்தக்களவினதாகக் காணப்பட்ட குறைந்த மட்ட உள்ளீடுகளுக்கான மதிப்பீட்டு நுணுக்கம் அவதானிக்கப்படத்தக்கதாக இருக்கவில்லை.

மீண்டெழும் அடிப்படையில், நிதியியல் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைப் பொறுத்தவரை, குழுமமானது ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் முழுவதிலும் மாற்றல்களினது மீள்மதிப்பீட்டு வகைப்படுத்தலின்படி (பொதுவாக சந்தைப் பெறுமதி மதிப்பீட்டில் குறிப்பிடத்தக்களவினதாகக் காணப்பட்ட குறைந்த மட்ட உள்ளீடுகளின் அடிப்படையில்) படிமுறை மட்டங்களுக்கிடையில் இடம்பெறுகின்றதா என்பதனை தீர்மானிக்கிறது.

வெளிவாரி மதிப்பீட்டாளர்கள் சொத்து, பொறி மற்றும் சாதனங்கள் போன்ற குறிப்பிடத்தக்க சொத்துக்களின் மதிப்பீட்டில் ஈடுபடுகின்றனர். வெளிவாரி மதிப்பீட்டாளர்களுக்கான தேர்வுப் பிரமாணங்கள் சந்தை அறிவு, கீர்த்தி, சுயாதீனம் மற்றும் தொழில்சார் நியமங்கள் பேணப்படுகின்றனவா என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது. வெளிவாரி மதிப்பீட்டாளர்களுக்கான கலந்துரையாடல்களின் பின்னர், குழுமமானது ஒவ்வொரு விடயங்களுக்கும் பயன்படுத்துவதற்கான மதிப்பீட்டு நுணுக்கங்கள் மற்றும் உள்ளீடுகள் பற்றி தீர்மானிக்கிறது.

சந்தைப் பெறுமதி வெளிப்படுத்தல்களுக்காக, குழுமமானது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் தன்மை, பண்புகள் மற்றும் இடர்நேர்வு மற்றும் மேலே விபரிக்கப்பட்டவாறான சந்தைப் பெறுமதி படிமுறையின் மட்டம் என்பனவற்றின் அடிப்படையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வகுப்புக்களைத் தீர்மானிக்கின்றது.

2.4.9 நிதியியல் சாதனங்கள் - ஆரம்ப அங்கீகரித்தல் மற்றும் பின்னரான அளவீடு

2.4.9.1 நிதியியல் சொத்துக்கள்
நிதியியல் சாதனங்களின் ஒப்பந்த ரீதியான ஏற்பாடுகளுக்கான ஒரு தரப்பினராக குழுமம் மாறுகின்ற பொழுது நிதியியல் சொத்துக்கள், நிதியியல் நிலைமைகளின் கூற்றுக்களின் மீது அங்கீகரிக்கப்படுகின்றன.

நிதியியல் சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டமூடான சந்தைப் பெறுமதி, கடன்கள் மற்றும் பெறத்தக்கவை, முதிர்ச்சி முதலீடுகளுக்காக வைத்திருக்கப்படுபவை அல்லது விற்பனைக்காக கிடைக்கத்தக்கவை என பொருத்தமான விதத்தில் வகைப்படுத்தப்படுகின்றன. முகாமைத்துவமானது ஆரம்ப அங்கீகரிப்பில் அதன் நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தலை தீர்மானிப்பதுடன் வகைப்படுத்தல் சொத்துக்களின் தன்மை மற்றும் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டதன் நோக்கம் என்பனவற்றில் தங்கியிருக்கிறது.

அனைத்து நிதியியல் சொத்துக்களும் ஆரம்பத்தில் சந்தைப் பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்டன.

கடன்களும், கிடைக்கப்பெற வேண்டியவையும் குழுமத்தின் நிதிச் சொத்துக்களில் அடங்கும். அவற்றின் பெறுமதி மதிப்பீடு, பெறுமதி குறைப்பு மற்றும் பெறுமதி சேர்க்கப்படாமை சம்பந்தமான குழுமத்தின் கொள்கைகள் பின்வருமாறு:

*(அ) கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள்*

கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் என்பது தீவிர சந்தையில் விலைக்குறிப்பீடு செய்யப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கத்தக்க கொடுப்பனவுகளுடன் கூடிய பெறுமதிகளல்லாத நிதியியல் சொத்துக்களாகும். ஆரம்ப அளவிடல்களின் பின்னர் அத்தகைய நிதிச் சொத்துக்கள் குறைந்தளவில் பழுதுறக்கூடிய பயனுறு வட்டி வீதங்களைப் பயன்படுத்தி தேய்மானச் செலவில் அளவிடப்படுகின்றன.

*(ஆ) அங்கீகரிக்கப்படாதவை*

பின்வரும் நேரங்களில் நிதியியல் சொத்தொன்று அங்கீகரிக்கப்படுவதில்லை:

- சொத்திலிருந்து காசுப்பாய்ச்சல்களைப் பெறுவதற்கான உரிமைகள் காலாவதியாகியிருக்கும் பொழுது
- சொத்துக்களிலிருந்து காசுப்பாய்ச்சலைப் பெறுவதற்கான அதன் உரிமைகளை உரிமமானது மாற்றல் செய்திருக்கும் பொழுது அல்லது "மாற்றங்கள் மீது சுமத்தும்" ஒழுங்குகளின் கீழ் பெறப்பட்ட காசுப்பாய்ச்சல்களை பெருமளவு தாமதங்கள் இல்லாமல் மூன்றாம் தரப்பினருக்குச் செலுத்துவதற்கான கடப்பாடொன்றினை அனுமானித்தல் மற்றும் ஒன்றில் (அ) குழுமம் கணிசமான அனைத்து இடர்நேர்வுகளையும் சொத்துக்களின் விருதுகளையும் மாற்றல் செய்திருத்தல் அல்லது (ஆ) குழுமம் ஒன்றில் கணிசமான அனைத்து இடர்நேர்வுகளையும் சொத்துக்களின் விருதுகளையும் மாற்றல் செய்யாமல் அல்லது பிடித்துவைத்திருக்காமல் இருக்கின்ற போதும் சொத்துக்கள் மீதான கட்டுப்பாடுகளை மாற்றல் செய்திருத்தல்.

*(இ) நிதிச் சொத்துக்களின் பெறுமதி இழப்பு*

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் நிதியியல் சொத்துக்கள் அல்லது நிதியியல் சொத்துக்களின் தொகுதியின் பெறுமதி இழக்கப்பட்டிருக்கின்றதா என்பதற்கு ஏதேனும் குறிப்பிடத்தக்க சான்றுகள் காணப்படுகின்றதாக என்பதனைக் கண்டறிவதற்காக குழுமம் மதிப்பீடுகளை மேற்கொள்கின்றது. நிதியியல் சொத்தொன்றில் அல்லது நிதியியல் சொத்துத் தொகுதியொன்றில், சொத்துக்களின் ஆரம்ப அங்கீகரிப்பொன்று (ஏற்பட்ட இழப்பு நிகழ்வு) ஏற்பட்டதன் பின்னர் நிகழ்ந்த ஒன்று அல்லது அதற்கும் கூடுதலான நிகழ்வுகளின் விளைவாக பெறுமதி இழப்பு ஏற்படுவதற்கான சான்றுகள் காணப்படுமிடத்தும், அந்த இழப்புச் சம்பவம் நிதிச் சொத்துக்கள் அல்லது நிதிச் சொத்துக்களின் தொகுதியின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் மீது தாக்கத்தினைக் கொண்டிருப்பின் அதனை நம்பகமான முறையில் மதிப்பீடு செய்யலாம்.

பெறுமதி இழப்புத் தொடர்பான சான்றுகள் கடன்பட்டவர்கள் அல்லது கடன்பட்ட குழுவினர் குறிப்பிடத்தக்க நிதியியல் இடர்ப்பாடுகளை, கொடுப்பனவுகளைச் செலுத்தத் தவறியமை, அவர்கள் வங்குரோத்து நிலையொன்றினை அடைந்துள்ளமைக்கான சாத்தியமான தன்மை அல்லது மற்றைய நிதியியல் நிறுவனத்தில் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சலில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டமையினை அவதானிக்கத்தக்க தரவுகள் எடுத்துக்காட்டுகின்றமையினை உள்ளடக்கியிருக்கும்.

*(ஈ) தேய்மானச் செலவில் கொண்டு செல்லப்பட்ட நிதிச் சொத்துக்கள்*

பெறுமதி இழப்புத் தொடர்பான இழப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதற்குத் தெளிவான சான்றுகள் காணப்படுமிடத்து, இழப்புத் தொகையானது கொண்டு செல்லப்பட்ட சொத்தின் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதிக்குமிடையிலான வேறுபாடொன்றாக அளவிடப்படுகின்றது. மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சலின் தற்போதைய பெறுமதி, நிதியியல் சொத்துக்களின் மூல பயனுறு வட்டி வீதத்தில் கழிவிடப்படுகின்றது.

சொத்தின் கொண்டு செல்லப்படும் தொகையானது படிக்கணக்கினை பயன்படுத்துவதனூடாக குறைக்கப்படுவதுடன் இழப்புத் தொகை வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

அடுத்துவரும் ஆண்டில், பெறுமதி இழப்பு நிகழ்ந்தமைக்குப் பின்னர் ஏற்படுகின்ற நிகழ்வொன்றின் காரணமாக ஏற்படுகின்ற அதிகரிப்புக்கள் அல்லது இழப்புக்களினால் ஏற்படும் மதிப்பிடப்பட்ட பழுதுறும் இழப்புக்களின் தொகை அங்கீகரிக்கப்படுமிடத்து, முன்னர் அங்கீகரிக்கப்பட்ட பழுதுறும் தன்மை தொடர்பான இழப்பு படிக்கணக்கினை சீராக்குவதன் மூலம் அதிகரிக்கப்படுகிறது அல்லது குறைக்கப்படுகிறது. பதிவழிப்பொன்று பின்னர் அறவிடப்படுமிடத்து, அறவிடப்பட்ட தொகை, வருமானக் கூற்றில் நிதிச் செலவாக வரவு வைக்கப்படுகின்றது.

2.4.9.2 நிதியியல் பொறுப்புக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 39இன் செயற்பரப்பிற்குள் காணப்படும் நிதியியல் பொறுப்புக்கள் இலாபம் அல்லது நட்டம் அல்லது கடன்கள் மற்றும் கடன்பாடுகள் எனப் பொருத்தமான ஒன்றினூடாக சந்தைப் பெறுமதியில் நிதியியல் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. குழுமம் அதன் நிதியியல் பொறுப்புக்களின் வகைப்படுத்தலை ஆரம்ப அங்கீகரித்தலின் போது தீர்மானிக்கிறது.

அனைத்து நிதியியல் பொறுப்புக்களும் ஆரம்பத்தில் சந்தைப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுவதுடன் கடன்கள் மற்றும் கடன்பாடுகளைப் பொறுத்தவரை கொடுக்கல்வாங்கல் செலவில் நேரடியாகச் சேர்க்கப்படுகின்றது.

குழுமத்தின் நிதியியல் பொறுப்புக்கள் வர்த்தகம் மற்றும் ஏனைய கொடுபடத்தக்கவை, வங்கி மேலதிகப் பற்றுக்கள், கடன்கள் மற்றும் கடன்பாடுகள் மற்றும் நிதியியல் உத்தரவாத உடன்படிக்கைகள் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

நிதியியல் பொறுப்புக்களின் பின்னைய அளவீடுகள் கீழே விபரிக்கப்பட்டவாறான அவற்றின் வகைப்படுத்தலின் மீது தங்கியிருக்கிறது.

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

*(அ) பின்னரான அளவுமுறை*

ஆரம்ப அங்கீகரித்தலின் பின்னர், வட்டி உழைக்கும் கடன்கள் மற்றும் கடன்பாடுகள் பின்னர் பயனுறு வட்டி வீத முறைகளைப் பயன்படுத்தி தேய்மானச் செலவில் அளவிடப்படுகின்றன.

*(ஆ) அங்கீகரிக்கப்படாதவை*

பொறுப்பு மீதான கடப்பாடுகள் நீக்கப்படும் போது அல்லது இரத்துச் செய்யப்படும் பொழுது அல்லது காலாவதியாகும் பொழுது நிதியியல் பொறுப்புக்கள் அங்கீகரிக்காமல் விடப்படுகின்றன.

ஏற்கனவேயுள்ள நிதியியல் பொறுப்பொன்று, கணிசமாக வேறுபட்ட நியதிகள் அல்லது கணிசமானளவில் மாற்றியமைக்கப்பட்ட ஏற்கனவேயுள்ள பொறுப்பொன்றில் நியதிகளின் மீதான அதே கடன்பாட்டாளரிடமிருந்தான இன்னொன்றின் மூலம் நீக்கப்படும் வேளையில் அத்தகைய பரிமாற்றங்கள் அல்லது மாற்றியமைப்பு ஆரம்பப் பொறுப்புக்களின் அங்கீகரியாமையாகவும் புதிய பொறுப்பின் அங்கீகரியாமையாகவும் கருதப்படுகின்றன. தொடர்பான கொண்டு செல்லும் தொகையில் காணப்படும் வேறுபாடுகள் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

*(இ) நிதியியல் சாதனங்களின் எதிரீடு*

நிதியியல் சொத்துக்களும் நிதியியல் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படுவதுடன் தேறிய தொகை பின்வரும் விதத்தில் இருக்குமிடத்து, நிதியியல் நிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்படுகின்றன.

- அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை எதிரீடு செய்வதற்கான சட்ட ரீதியான உரிமைகளை தற்பொழுது நடைமுறைப்படுத்தத்தக்கதாக இருத்தல்.
- தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கான உண்மையான எண்ணம் இருத்தல் அல்லது சொத்துக்களை விடுவித்தல் மற்றும் சமகாலத்தில் பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்தல்

### 2.4.9.3 காசுப்பாய்ச்சல் பாதுகாப்பு ஒதுக்கு

கம்பனியானது அதன் அடையாளம் காணப்பட்ட வெளிநாட்டு நாணய கடன்களை அதன் அதிகளவிற்கு நிகழத்தக்க, விசேடமாக, வெளிநாட்டு நாணயத்தில் எதிர்கால வருமானமாக குறித்துரைத்திருக்கிறது. இதனூடாக கம்பனி, வெளிநாட்டுச் செலாவணி வீதங்களில் ஏற்பட்ட தளம்பல்களின் காரணமாக அடையாளம் காணப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களின் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றங்களின் இடர்நேர்வுகளைப் பாதுகாத்துக் கொள்கிறது.

பாதுகாக்கப்படுகின்ற சாதனத்தின் மீதான இலாபம் அல்லது இழப்பின் கணிசமான விகிதம், காசுப்பாய்ச்சல் பாதுகாப்பு ஒதுக்கிலுள்ள ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள வேளையில் ஏதேனும் குறைந்தளவு விகிதம் இலாபம் அல்லது நட்டக்கூற்றில் ஏனைய தொழிற்பாட்டு செலவினங்களாக உடனடியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானமாக அங்கீகரிக்கப்பட்ட தொகைகள், பாதுகாக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் நிகழும் பொழுது இலாப அல்லது நட்டக் கணக்கிற்கு மாற்றல் செய்யப்படுகின்றன. (எதிர்வுகூறப்பட்ட வருமானம் தேறல் செய்யப்படும் பொழுது). எதிர்வுகூறப்பட்ட கொடுக்கல்வாங்கல் இனிமேலும் நிகழுமென எதிர்பார்க்கப்படாதவிடத்து, ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றுசேர்ந்த நன்மை அல்லது இழப்பு இலாபம் அல்லது நட்டக்கூற்றிற்கு மாற்றல் செய்யப்படுகின்றன. பாதுகாக்கப்படுகின்ற சாதனம் காலாவதியாகுமிடத்து அல்லது விற்பனை செய்யப்படுகின்றவிடத்து, முடிவுறுத்தப்படுமிடத்து அல்லது பதிலீடின்றி நடைமுறைப்படுத்தப்படுமிடத்து அல்லது மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படுமிடத்து அல்லது பாதுகாப்பானதொன்றாக இது குறித்துரைக்கப்படுமிடத்து, அது மாற்றப்படுமிடத்து பாதுகாப்பு உடன்படிக்கையொன்றாக எதிர்வுகூறப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் நிகழும் வரை முன்னர் அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றுசேர்ந்த நன்மை அல்லது இழப்பு பங்குரிமை மூலதனமாகத் தொடர்ந்தும் காணப்படும்.

### 2.4.10 விமானப் பராமரிப்பு ஒதுக்கு

விமானப் பராமரிப்பு ஒதுக்கு, தொழிற்படுகின்ற குத்தகை உடன்படிக்கையின் நியதிகளில் எந்திரங்கள், விமானக் கலங்கள் மற்றும் விமானக் கூறுகள் என்பனவற்றின் எதிர்கால பழுதுபார்த்தலுக்காக மாதாந்த அடிப்படையில் குத்தகைக்கு விடுபவருக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளை உள்ளடக்கியுள்ளது. கம்பனியானது எந்திரங்கள், விமானக் கலம்கள், விமானக் கலக்கூறுகள் (ஒதுக்கிற்கு ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகை வரையில்) என்பனவற்றின் பழுதுபார்ப்பு மீது ஏற்பட்ட செலவுகளை, பராமரிப்பு வேலைகள் முடிவடைந்ததும் அத்தகைய ஒதுக்குகளுக்கெதிராக குத்தகைக்கு விடுபவரிடமிருந்து அறவிட்டுக் கொள்கிறது.

தன்மைகளின் அடிப்படையில் விமானப் பேணல் ஒதுக்கு கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் நிதியியல் சொத்துக்களின் இவ்வகைக்கான தொடர்பான கணக்கீட்டுக் கொள்கைகள் மேலேயுள்ள 2.4.9.1 (அ) குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 2.4.11 வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவைகள்

வைப்புக்கள் மற்றும் ஏனைய கடன்பாட்டாளர்களை (வைப்புக்களின் மீது வகைப்படுத்தப்பட்ட நிதியல்லாச் சொத்துக்கள் மற்றும் கிரயத்தில் அளவிடப்பட்ட ஏனைய பெறத்தக்கவைகள் நீங்கலாக) உள்ளடக்கிய வர்த்தகக் கடன்பாடுகள் வகைப்படுத்தப்பட்டு கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளாகக் கணக்கிடப்படுகின்றன. இத்தன்மையினை அடிப்படையாகக் கொண்டு நிதியியல் சொத்துக்களின் இவ்வகை தொடர்பான கணக்கீட்டுக் கொள்கை மேலேயுள்ள குறிப்பு 2.4.9.1 (அ)இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2.4.12 முதலீடுகள்

#### துணை நிறுவன முதலீடு

கம்பனியின் நிதியியல் கூற்றுக்களில், துணை நிறுவனத்தில் காணப்படும் முதலீடு, பெறுமதியில் ஏற்படக்கூடிய தற்காலிக குறைவு தவிர்ந்த வேறு ஏதேனும் ஒதுக்கங்கள் நீங்கலாக கிரயத்தில் கணக்கிடப்பட்டது.

### 2.4.13 குறுக்கால முதலீடுகள்

குறுங்கால முதலீடுகளாக வங்கிகளில் வைக்கப்பட்டுள்ள 03 மாதங்களுக்கும் அதிக காலம் முதிர்ச்சி கொண்ட நிலையான வைப்புக்கள் கருதப்படுகின்றன. குறுங்கால முதலீடுகள் திரட்டிய செலவின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன.

### 2.4.14 காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்

காசு மற்றும் காசிற்குச் சமமானவையும் வங்கியிலும் கையிலுமுள்ள காசு, அழைப்பு வைப்புக்கள் மற்றும் பெறுமதியில் மாற்றுவதில் குறிப்பிடத்தக்களவிற்கு இடர்நேர்வற்றவை என்ற நிபந்தனைக்குட்பட்டு தெரிந்த காசுத் தொகைக்கு மாற்றுவதற்கு ஆயத்தமாகவுள்ள உயர்ந்த திரவத்தன்மை கொண்ட குறுங்கால முதலீடுகள் என வரைவிலக்கணம் செய்யப்படுகின்றன.

காசுப்பாய்ச்சல் கூற்றின் நோக்கங்களுக்காக, காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் வங்கியிலுள்ள காசு, கையிலுள்ள காசு மற்றும் வெளிநின்ற வங்கி மேலதிகப் பற்றுக்கள் நீங்கலான வங்கியிலுள்ள

அழைப்பு வைப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. குறுங்கால முதிர்ச்சிகளைக் கொண்ட முதலீடுகளும் (அதாவது கொள்வனவு செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைவானவை) காசிற்குச் சமமானவைகள் எனக் கருதப்படுகின்றன. வங்கி மேலதிகப் பற்றுக்கள் நிதியியல் நிலைமைக் கூற்றில், வட்டி உழைக்கும் பொறுப்புக்களின் கீழ் வெளிப்படுத்தப்படுகின்றன.

### 2.4.15 ஏற்பாடுகள்

(i) பொது

கடந்த கால நிகழ்வுகளின் பெறுபேறாக, கம்பனி தற்பொழுது கடப்பாடுகளை (சட்ட ரீதியான அல்லது அதன் அர்த்தம்) கொண்டிருக்கும் பொழுது அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கங்கள் வெளிப்பாய்கின்ற மூலவளங்கள் பொருளாதார நன்மைகளை ஏற்படுத்துவதற்கான சாத்தியங்கள் காணப்படுமிடத்து கடப்பாடுகளை தீர்ப்பனவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன் கடப்பாட்டுத் தொகையினையும் நம்பகமாக மதிப்பீடு செய்து கொள்ள முடியும். ஓரளவு ஏற்பாடு அல்லது முழு ஏற்பாடும் மீளளிக்கப்பட வேண்டுமென கம்பனி எதிர்பார்க்கும் பொழுது, மீளளிப்பு உறுதிப்படுத்தப்படும் வேளையில் மாத்திரம் இம்மீளாய்வு தனியானதொரு சொத்தாக அங்கீகரிக்கப்படுகிறது. ஏதேனும் ஏற்பாட்டு செலவு தொடர்பாக மீளச்செலுத்தல்கள் இருப்பின் அதனைக் கழித்து வருமானக் கூற்றில் காட்டப்படுகின்றன. ஏதேனும் ஏற்பாடுகள் தொடர்பிலான செலவுகள் ஏதேனும் மீள்வழங்கல்களைக் கழித்த வருமானக் கூற்றில் காட்டப்படுகின்றன.

(ii) விமானப் பேணல் மற்றும் பழுதுபார்த்தல் செலவுகள்

உறப்பட்ட அடிப்படையொன்றின் மீது, குழுமமானது, விமானப் பேணல் மற்றும் பழுதுபார்த்தல் செலவுகளை (விமானங்களின் பாரிய பேணல் நீங்கலாக எந்திர பழுதுபார்த்தல் மற்றும் தரையிறக்கல் சாதனத்தின் குறிப்புக்கள் பழுதுபார்த்தல் செலவுகள்) அங்கீகரிக்கின்றது. விமானங்களின் பாரிய பேணல் எந்திரங்களின் பழுதுபார்த்தல், தரையிறக்கப் பழுதுபார்த்தல் செலவுகள் குறிப்பு 2.3(ஆ) (ஊ) இல் தரப்பட்டுள்ளன. எந்திரங்களின் பழுதுபார்த்தல் செலவுகள் மூன்றாந்தரப்புப் பேணல் உடன்படிக்கைகளின் “மணித்தியாலங்களின் படியான வலு” இனால் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் செலவுகள் உடன்படிக்கை காலப்பகுதியில் மணித்தியாலமொன்றிற்காக இணங்கப்பட்ட நிலையான வீதமொன்றில் எதிரீடு செய்யப்படுகின்றன.

### 2.4.16 ஓய்வுகால நன்மைகள் தொடர்பான கடப்பாடுகள்

(அ) வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நன்மைகள் திட்டம் - பணிக்கொடை

பணிக்கொடை ஒரு கட்டாய நன்மைகள் திட்டமாகும். இதனைக் கம்பனியும் அதன் துணை நிறுவனமும் தொடர்பான சட்டத்தின் நியதிகளின்படி செலுத்துவதற்கு பொறுப்பானவையாகும். எறிவு செய்யப்பட்ட அலகு வரவு முறையொன்றினைப் பயன்படுத்தி ஒவ்வொரு ஆண்டிற்குமான கணிப்பின் மதியுரைப்படி கம்பனியானது கட்டாய நன்மைகள் திட்டத்தின் தற்போதைய பெறுமதியினை அளவிடுகின்றது. எவ்வாறாயினும், வெளிநாட்டு வர்த்தக தலங்களில் குறித்த நன்மையானது, அங்கு செயற்படும் சட்டதிட்டங்களுக்கு அமைய கணக்கிடப்படுகின்றது.

குழுமமானது கட்டாய நன்மைகள் திட்டங்களுடன் தொடர்பான ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் மற்றும் செலவினத்தில் கட்டாய நன்மைத் திட்டத்திலிருந்து உருவாகின்ற ஒன்றுசேர்ந்த இலாப/ நட்டங்களை இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கின்றது.

பணிக்கொடை பொறுப்புக்களுக்கு வெளியிலிருந்து நிதியிடப்படமாட்டாது. இவ்விடயம், ஐந்தொகையில் “ஏனைய பிற்போடப்பட்ட பொறுப்புக்கள்” என்ற தொகுதியின் கீழ் காட்டப்படுகின்றன. வெளிநாடுகளைத் தளமாகக் கொண்ட ஊழியர்கள் அவர்களது சொந்த நாடுகளுக்குப் பொருந்தத்தக்க சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் உள்ளடக்கப்படுகின்றனர்.

(ஆ) வரைவிலக்கணம் செய்யப்பட்ட உதவுதொகைத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்

இலங்கையிலுள்ள ஊழியர்கள், தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கிணங்க ஊழியர் சேமலா நிதிய உதவு தொகைகளுக்கும் ஊழியர் நம்பிக்கை நிதிய உதவு தொகைகளுக்கும் உரித்துடையவராவர். ஊழியர்களின் மொத்த ஊதியத்தில் கம்பனி, ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் 15 சதவீதத்தினையும் 3 சதவீதத்தினையும் பங்களித்த வேளையில் துணை நிறுவனம் 12 சதவீதத்தினையும் 3 சதவீதத்தினையும் பங்களித்தது.

### 2.4.17 அடிக்கடி பறப்பவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம்

ஒன்றுசேர்ந்த மைல்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நிகழ்ச்சித்திட்டத்திலுள்ள உறுப்பினர்களுக்குப் பயண வெகுமதிகளை வழங்குகின்ற “பிளை ஸ்மைல்” என்ற அடிக்கடி பறப்பவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டமொன்றினைக் கம்பனி தொழிற்படுத்துகின்றது. அடிக்கடி பறப்பவர்களுக்கான நன்மைகளுக்குப் பயணிகள் வருமானத்தில் ஒரு பங்கு வழங்கப்படுவதுடன் அவை பயன்படுத்தப்படும் வரை பிற்போடப்படுகின்றன. வருமானத்தின் அளவு மீட்டுக்கொள்ளும் வரலாற்று ரீதியான போக்கின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுவதுடன் அதன் பின்னர் இது இந்நன்மைகளின் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டினை எறிவு செய்யப் பயன்படுத்தப்பட்டது. வழங்கப்பட்ட வெகுமதியின் சந்தைப் பெறுமதி பணிகளின் நிறையேற்றப்பட்ட சராசரிப் பெறுமதியின் தொடர்பான அளவினால் மதிப்பிடப்பட்டதுடன் இதன் மூலம் வெகுமதித் தொகை மீட்கப்பட முடியும். இம்மதிப்பீடுகள் ஒவ்வொரு அறிக்கையிடும் நாளன்றும் மீளாய்வு செய்யப்பட்டதுடன் பொறுப்பும் அதற்கேற்ப சீராக்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டப் பங்குடமையாளர்களின் பணிகளைப் பயன்படுத்தியதனூடாக ஒன்றுசேர்ந்த மைல்களும் பங்கேற்கின்ற பங்குடமையாளர்களினால் செலுத்தப்பட்டவையும் கூட அவை பயன்படுத்தப்படும் வரை பிற்போடப்பட்ட வருமானமாக கணக்கிடப்படுகின்றன. காலாவதியாகும் என எதிர்பார்க்கப்படும் மைல்களுக்கான பொறுப்பு அங்கீகரிக்கப்படமாட்டாது.

### 2.4.18 வருமானத்தினை அங்கீகரித்தல்

வருமானமானது குழுமத்திற்குப் பாயக்கூடிய பொருளாதார நன்மைகளின் சாத்தியமானளவிற்கு அங்கீகரிக்கப்படுவதுடன், வருமானமானது அது எப்பொழுது கொடுப்பனவு செய்யப்பட்டது என்பதனைக் கருத்திற்கொள்ளாது நம்பகமாக அளவிடப்படுகிறது. வருமானமானது பெறப்பட்ட பரிசீலனையின் சந்தைப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன. குழுமத்திற்கான வருமானம் கம்பனிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களை நீக்குகிறது.

(அ) எயார்லையின்ஸ்சின் வருமானம்

வருமானம் முக்கியமாக, பயணிகளைக் கொண்டு செல்லுதல், சரக்கு, மிகைப் பொதி மற்றும் அஞ்சல்,விமானங்களுக்கு முனைக்கோடிப் பணிகளை வழங்குதல், பொறியியல் பணிகள், வான் ஒப்பந்தப் பறப்புக்கள் மற்றும் அவற்றுடன் தொடர்பான நடவடிக்கைகள் என்பனவற்றிலிருந்து உருவாக்கப்படுகின்றது.

(i) போக்குவரத்து/வசதிகள் வழங்கப்படும் பொழுது பயணிகள், சரக்கு, மிகைப் பொதிகளின் விற்பனை மற்றும் ஏனைய தொடர்பான கட்டணங்கள் தொழிற்பாட்டு வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றன.

(ii) பயன்படுத்தப்படாத பயணச்சீட்டுக்களினதும் வான்வழி பற்றுச்சீட்டுக்களினதும் பெறுமதி, முன்கூட்டிய பயணச்சீட்டு

## நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

விற்பனைகளாக நடப்புப் பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பயன்படுத்தப்படாத பயணச்சீட்டுக்களினதும் வான்வழி பற்றுச்சீட்டுக்களினதும் பெறுமதி ஓராண்டிற்குப் பின்னும் பயன்படுத்தப்படாது செல்லுபடியற்றதாக இருக்குமாயின் வருமானமாக அங்கீகரிக்கப்படும்.

(iii) விமான நிலைய முனைக்கோடிப் பணிகளின் வழங்கல்களிலிருந்தான வருமானம், பணிகள் வழங்கப்பட்டதும் அங்கீகரிக்கப்படுகின்றன.

(iv) மூன்றாந்தரப்பினருக்கான பராமரிப்புப் பணிகளை வழங்குவதிலிருந்து கிடைக்கும் வருமானம் அத்தகைய அம்சங்கள் பூர்த்தி செய்யப்பட்டதும் அங்கீகரிக்கப்படுகின்றன.

(v) பறப்பு தொழிற்பாட்டுப் பணிகளை வழங்குவதிலிருந்தான வருமானம் அப்பணிகள் வழங்கப்பட்டதும் அங்கீகரிக்கப்படுகின்றன.

### (ஆ) எயார்லையின் கேட்டறிங் சேர்விஸஸிலிருந்தான வருமானம்

**பொருட்களின் விற்பனை**

சொத்துடமையின் குறிப்பிடத்தக்க இடர்நேர்வுகளும் நன்மைகளும் வாங்குநருக்கு மாற்றல் செய்யப்படும் வேளையில் வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது. வருமானம் பெறுமதிசேர் விற்பனை வரியினை நீக்குவதுடன் வர்த்தகக் கழிவுகளைக் கழித்ததன் பின்னர் இது பெறப்படுகின்றது. வரவேண்டிய அறவிடல்கள், அவற்றுடன் இணைந்த செலவுகள் அல்லது பொருட்கள் திரும்பக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றமை மற்றும் பொருட்களுடன் முகாமைத்துவ தலையீடுகள் காணப்படுகின்றமை என்பன தொடர்பாக குறிப்பிடத்தக்களவு நிச்சயமற்ற தன்மைகள் காணப்படுகின்றவிடத்து வருமானம் அங்கீகரிக்கப்படமாட்டாது.

### (இ) பங்குலாப வருமானம்

பங்குடமையாளர் உரிமைகள் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு அங்கீகரிக்கப்படும் பொழுது பங்குலாபங்கள் கணக்கிடப்படுகின்றன.

### (ஈ) வாடகை வருமானம்

வாடகை வருமானம் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகிறது.

### (உ) வட்டி வருமானம்

அனைத்து நிதிச் சாதனங்களும் தேய்மானச் செலவில் அளவிடப்பட்டதுடன் வட்டி உழைக்கும் நிதிச் சொத்துக்கள் விற்பனைக்கு கிடைக்கத்தக்கவை என வரைவிலக்கணம் செய்யப்பட்டதுடன் பயனுறு வட்டி வீதங்களைப் பயன்படுத்தி வட்டி வருமானம் அல்லது செலவினம் பதிவு செய்யப்படுகிறது.

### (ஊ) ஏனைய வருமானம்

ஏனைய வருமானம் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 2.4.19 செலவினை அங்கீகரித்தல்

உறப்பட்ட செலவு மற்றும் குறிப்பிட்ட சில விடயங்களின் வருமான உழைப்பு என்பனவற்றிற்கிடையிலான நேரடித் தொடர்புகளின் அடிப்படையில் செலவுகள் வருமானக்கூற்றில் காட்டப்பட்டுள்ளன. வியாபரத்தினை தொழிற்படுத்தியமை மற்றும் வினைத்திறன் பொருட்டு சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் பேணல் என்பனவற்றின் பொருட்டு உறப்பட்ட அனைத்துச் செலவினங்களும் வருமானக்கூற்றில் காட்டப்பட்டுள்ளன. வருமானக் கூற்றினைக் காட்டுகின்ற நோக்கங்களுக்காக, கம்பனியின் மூலங்களையும் குழுமத்தின் செயலாற்றத்தினையும் நியாயமான முறையில் காட்டும் அடிப்படையில் “தொழிற்பாட்டுச் செலவினங்கள்” என்ற முறை பின்பற்றப்பட்டிருக்கிறது.

### 2.4.20 கடன்பாட்டுச் செலவுகள்

கடன்பாட்டுச் செலவுகள் பயன்படுத்தும் அல்லது விற்பனை செய்யும் நோக்குடன் கணிசமான காலப்பகுதிக்கு தயாராக வைத்திருக்கப்படும் சொத்துக்களின் கையேற்பு, கட்டுமானம் அல்லது உற்பத்திக்கு நேரடியாக சேர்க்கப்படுகின்ற காலப்பகுதி நீங்கலாக அவை உறப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட செலவினங்களாக அங்கீகரிக்கப்பட்டு சொத்துக்களின் ஒரு பகுதியாக மூலதனமயப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.4.21 பிரிவு அறிக்கையிடல்

ஒரு பிரிவு என்பது, மற்றைய பிரிவுகளிலிருந்து வேறுபட்டு, இடர்நேர்வுகளுக்கும் நன்மைகளுக்கும் உட்பட்டு குறிப்பிட்டதொரு பொருளாதார சூழலில் பணிகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள குழுமமொன்றின் தனித்தன்மை வாய்ந்ததொரு கூறு எனக் கருதப்படுகிறது.

கம்பனி பல்வேறுபட்ட நாடுகளில் தொழிற்படுகின்றமையின் காரணமாக அதன் இடர்நேர்வுகளும் வருமான வீதங்களும் பாதிக்கப்படுவதால் புவியியல் ரீதியாக பரந்திருக்கும் அதன் தொழிற்பாடுகளின் அடிப்படையில் முக்கியமான பிரிவுகள், நிர்ணயிக்கப்படுகின்றன. ஆரம்ப விற்பனைகளின் மூலமான மொத்தப் புரள்வின் பகுப்பாய்வுகள் விற்பனை மேற்கொள்ளப்பட்ட பிரதேசத்திற்கான வருமானத்தினை ஒதுக்குவதன் மூலம் பெறப்படுகின்றது. குறிப்பிட்ட பிரிவிற்கான நேரடியாக அடையாளம் காணப்படாத செலவுகள் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு வெளிப்படுத்தப்படவில்லை.

புவியியல் ரீதியான பிரிவுகளுக்கு சொத்துக்களையும் தொடர்பான பொறுப்புக்களையும் ஒதுக்குவதற்கு பொருத்தமானதொரு அடிப்படை காணப்படவில்லையென முகாமைத்துவம் கருதுகிறது. இதற்கமைய பிரிவிற்கான சொத்துக்கள், பிரிவிற்கான பொறுப்புக்கள் ஏனைய பிரிவிற்கான தகவல்கள் புவியியல்சார்ந்த பிரிவுகளின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படவில்லை.

வியாபாரப் பிரிவின் அடிப்படையிலான இரண்டாவது அறிக்கையிடல் குழுமத்தினால் வழங்கப்பட்ட பணிகளின் தன்மையினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. குழுமமானது இரண்டு முக்கிய வியாபாரப் பிரிவுகளான வான் போக்குவரத்திலும் அதன் துணை நிறுவனத்தினூடாக பறப்புக்களில் உணவு வழங்கும் பணியிலும் ஈடுபட்டிருக்கிறது.

### *2.5 நியமங்கள் விடுக்கப்பட்டு இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாதவை*

ஏற்கனவேயுள்ள நியமங்களுக்குப் பதிலாக வெளியிடப்பட்டிருக்கின்ற குறிப்பிட்ட சில கணக்கீட்டு நியமங்களும் திருத்தங்களும்/ மேம்பாடுகளும் 2018 மாச்சு 31ஆம் திகதி காலப்பகுதிக்குள் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டியனவல்ல. அவற்றுள் ஒன்றையேனும் குழுமம்/கம்பனி நேரகாலத்துடன் பின்பற்றவில்லை.

இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இன் நிதியியல் சாதனங்கள்

இ.நி.அ. நியமம் 9, இ.க. நியமம் 39இன் நிதியியல் சாதனங்கள்: அங்கீகரிப்பும் அளவீடுகளும் இ.நி.அ. நியமம் 9, நிதியியல் சாதனங்களின் பகுப்பாய்வு மற்றும் அளவீடுகள் மீதான திருத்தப்பட்ட வழிகாட்டல்கள், நிதியியல் சொத்துக்கள் மீதான பெறுமதி இழப்புக்களைக் கணிப்பதற்காக புதிதாக எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் இழப்பு மாதிரி மற்றும் புதிய பொதுப் பாதுகாப்பு கணக்கீட்டுத் தேவைப்பாடுகள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன. முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்டவை, கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் மற்றும் விற்பனைக்காக கிடைக்கத்தக்கவை ஆகியவைகளுக்கான தற்போதுள்ள இ.க. நியமம் 39 நீக்கப்பட்டுள்ளது.

இ.க. நியமம் 9இனை நேரகாலத்துடன் பின்பற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டதுடன் 2018 சனவரி 1 அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதிக்கு நடைமுறைக்குவரும்.

இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 15
வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்

இ.நி.அ. நியமம் 15 எவ்வளவு வருமானத்தினை எப்பொழுது அங்கீகரிப்பது என்று தீர்மானிப்பதற்காக அனைத்தையுமுள்ளடக்கிய கட்டமைப்பொன்றினை அங்கீகரிக்கின்றது. இ.க. நியமம் 18 வருமானம், இ.க.நியமம் 11 கட்டுமான உடன்படிக்கைகள் மற்றும் சர்வதேச நிதியியல் அறிக்கையிடல் விளக்கமளித்தல் குழு 13இன் வாடிக்கையாளர் நம்பகத்தன்மை நிகழ்ச்சித்திட்டம் என்பன உட்பட ஏற்கனவேயுள்ள வருமான அங்கீரிப்பு வழிகாட்டலுக்குப் பதிலானதாகும்.

இ.நி.அ. நியமம் 15 நேரகாலத்துடன் பின்பற்றும் நடவடிக்கை அனுமதிக்கப்பட்டதும் 2018 சனவரி 1ஆம் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதிக்கு நடைமுறைப்படுத்தப்படும்.

இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 16 குத்தகை

இ.நி.அ. நியமம் 16, குத்தகைகளுக்கான தனியொரு, ஐந்தொகைக் குத்தகைக் கணக்கீட்டு மாதிரியொன்றினை அறிமுகப்படுத்துகிறது. குத்தகையொன்று குறிப்பிட்டுச் சொல்லப்படுகின்ற சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான அதன் உரிமைகளைக் காட்டுகின்ற உரிமைகளைப் பயன்படுத்துவதனை அங்கீகரிப்பதுடன் குத்தகையின் பொறுப்பு குத்தகைக் கொடுப்பனவுகளைச் செய்ய வேண்டிய கடப்பாட்டினையும் காட்டுகின்றது. குறுங்காலக் குத்தகைகள் மற்றும் குறைந்த பெறுமதியைக் கொண்ட குத்தகைகளுக்காக தேர்வு விலக்கல்களும் காணப்படுகின்றன. குத்தகைக்கு விடுபவரின் கணக்கீடுகள் தற்போதைய நியமங்களுக்கு - அதாவது குத்தகைக்கு விடுபவர் நிதி அல்லது தொழிற்படுத்துகின்ற குத்தகைகள் எனக் குத்தகைகளைத் தொடர்ந்தும் வகைப்படுத்துகின்ற ஒத்த தன்மைகளைக் கொண்டிருக்கும்.

இ.நி.அ. நியமம் 16 ஆனது இ.க. நியமம் 17 - குத்தகைகள், சர்வதேச நிதியியல் அறிக்கையிடல் விளக்கமளித்தல் குழு - 4 ஏதாவது ஒழுங்கொன்று குத்தகை உள்ளடக்கியிருக்கின்றதா என்பதைத் தீர்மானித்தல், நியமங்களின் விளக்கமளித்தல் குழு - 15 தொழிற்பாட்டுக் குத்தகை - ஊக்குவிப்புக்கள் மற்றும் குத்தகையொன்றின் சட்ட வடிவத்துடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களின் முக்கியத்துவத்தினை மதிப்பிடுதல் என்பனவற்றை உள்ளடக்கிய ஏற்கனவேயுள்ள குத்தகை வழிகாட்டல்களுக்குப் பதிலீடானதாகும். நியமமானது 2019 சனவரி 1 இற்குப் பின்னர் தொடருகின்ற ஆண்டு காலப்பகுதிக்கு நடைமுறைக்குவரும் வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம் இ.நி.அ.நியமம் 15 இனைப் பிரயோகிக்கும் நிறுவனங்கள் இ.நி.அ.நியமம் 16 ஆரம்பப் பிரயோகத் திகதியன்று அன்று அல்லது அதற்கு முன்னரோ அவற்றைப் பின்பற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டன.

விபரப்படுத்தப்பட்ட தாக்கல் பகுப்பாய்வு மற்றும் இ.நி.அ. நியமம் 9, இ.நி.அ.நியமம் 15 மற்றும் இ.நி.அ.நியமம் 16 என்பனவற்றிலிருந்து ஏற்படக்கூடிய சாத்தியமான தாக்கங்களை நிறைவுசெய்வது இன்னமும் பூர்த்தியடையாமல் இருப்பது அறிக்கையிடுகின்ற நாளன்று உள்ள நியாயமான மதிப்பீடுகளைத் தராது.

### 3. தொடர்ந்து செல்லும் கரிசனைகள்

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில், கம்பனியானது இ.ரூ. 17,213.57 மில்லியன் (2017 - இ.ரூ.28,929.99 மில்லியன்) கொண்ட ஒன்று சேர்ந்த இழப்புக்களுடன் இ.ரூ.186,596.50 மில்லியன் (2017 - இ.ரூ.169,755.46 மில்லியன்) கொண்ட இழப்பொன்றினைப் பதிவுசெய்தது. மேலும், கம்பனியின் நடைமுறைப் பொறுப்புக்கள் அதன் நடைமுறைச் சொத்துக்கள் இ.ரூ.100,268.11 மில்லியனால் (2017 - இ.ரூ.99,329.48 மில்லியன்) விஞ்சிக் காணப்பட்டதுடன், அறிக்கையிடுகின்ற நாளன்று உள்ளவாறு கம்பனியின் மொத்தப் பங்குரிமை மூலதனம் எதிர்மறையாக இ.ரூ. 132,196.34 மில்லியனுக்கு (2017 - எதிர்மறையாக இ.ரூ.115,766.64 மில்லியன்) வீழ்ச்சியடைந்தது. நிறுவனத்தின் நிகர சொத்துக்கள் அதன் மொத்த பிரசுரிக்கப்பட்ட மூலதனத்தின் அரைவாசியை விடவும் குறைவாக இருந்ததோட, பாரியதொரு மூலதன நட்டம் ஒன்றை கம்பனி எதிர்நோக்கியுள்ளது. இதனால் 2015 ஜுன் 16 ஆம் திகதி நிறுவனம் அதிவிசேட பொதுக் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 220 ஆம் பிரிவின் கீழ் மீளமைப்புத் திட்டம் ஒன்று பற்றிக் கலந்துரையாடியது.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் மீளமைத்தல் செயன்முறையானது வழித்தட வலையமைப்பு, விமானங்களின் தொகுதி, மேலதிகச் செலவினங்கள், படுகடன் (மீள் மூலதனமயப்படுத்தல்) மற்றும் நிறுவன ரீதியான தன்மையின் அமைப்பு ஆகிய முக்கிய துறைகளை உள்ளடக்கியிருந்தது. நிதியமைச்சின் அரச மற்றும் தனியார் பங்காளித்துவ வர்த்தகங்களுக்கான தேசிய முகவர் நிறுவனம் (NAPPP) பணிப்பாளர் சபையுடன் இணைந்து மீளமைப்பு நடவடிக்கைகளுக்காக செயற்பட்டு வருகின்றது. 2017 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் இதற்காக சர்வதேச ஆலோசகர் ஒருவரை நியமித்துள்ளது. அந்த நிறுவனம் முகாமைத்துவ மற்றும் பணிப்பாளர் சபையுடன் இணைந்து மீளமைப்புத் திட்டங்களை இறுதிக்கட்டத்திற்குக் கொண்டு வந்துள்ளது. ஆலோசகர்களால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய பரிந்துரைகளை பணிப்பாளர் அமுல்படுத்தியுள்ளதோடு, பரந்தளவிலான ஒரு மீளமைப்பு வர்த்தக திட்டமிடல் செயற்பாட்டினை அடுத்த ஐந்தாண்டு காலத்திற்குத் தயாரிப்பதில் முகாமைத்துவத்துடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது. இதில் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு யு350-900 விமானங்களுக்காக எயார்பஸ் நிறுவனத்திற்கு மேற்கொள்ளப்பட இருக்கும் விநியோகத்திற்கு முன்னரான கொடுப்பனவுகள் தொடர்பாகவும் மீள் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது. அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் நிறுவனம் இலாபம் அடையும் நோக்கில் குறித்த மீளமைப்புத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருவதுடன், முக்கிய பங்காளிகளுடன் இணைந்து அரசாங்கத்தின் பின்னணியுடன் இந்த செயற்பாட்டிற்காக முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இலங்கை அரசாங்கம் கம்பனிக்குத் தொடர்ந்தும் ஆதரவளித்து வந்ததுடன் ஆய்விற்குரிய காலப்பகுதியில் குறுங்காலக் கடன் வசதிகளைப் பெறும் நோக்குடன் அரச வங்கிகளுக்கு ஐ.அ.டொலர் 50 மில்லியன் பெறுமதி கொண்ட புதிய வசதிக் கடிதங்களை வழங்குவதற்கு ஒப்புதலளித்தது. மேலும், இலங்கை அரசாங்கம் 2019 பெப்ரவரி 05 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை ஒப்புதலின் வாயிலாக, கம்பனி அதன் தொழிற்பாடுகளை “தொடர்ந்து செல்லும் கரிசனையாக” தொடர்வதற்கு, உத்தேச மீளமைத்தல் செயன்முறை நிறைவடையும் வரை, கம்பனிக்குத் தேவையான நிதியியல் ஆதரவினைத் தொடர்ந்து வழங்குவதனை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்தியது.

அதிமேதகு ஜனாதிபதியினால் 2019 ஜனவரி மாதம் நியமிக்கப்பட்ட விசேட நிபுணர்கள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளுக்கு அமைய நிறுவனம் தற்போது ஈடுபட்டுள்ள ஏனைய இலாபகரமான வர்த்தகங்களை வெளிப் பிரிவுகளுக்கு விற்பனை செய்து பணம் பெற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது. மேலும், நிறுவனத்தின் மறை மூலதனத்தை மாற்றியமைப்பதற்காக மூலதனத்தை உட்செலுத்தும் நோக்குடன் அரச தனியார் பங்காளித்துவ நடவடிக்கைகளுக்காக முதலீட்டாளர்களை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கையில் இலங்கை அரசாங்கம் தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

## 4. ஆதனங்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள்

### *4.1 குழுமம்*

| | காணியும் கட்டடங்களும் இ.ரூ மில். | பொறி மற்றும் உபகரணங்கள் இ.ரூ மில். | தொழிற்படு குத்தகைகள் மீதான விமானங்களுக்கு செய்யப்பட்ட திருத்தங்கள் இ.ரூ மில். | விமானத்துடன் தொடர்புடைய சாதனங்கள் இ.ரூ மில். | நிதிக் குத்தகை மீதான பொறி மற்றும் சாதனங்கள் இ.ரூ மில். | முற்பணங்கள்/ செயற்பாட்டிலுள்ளி மூலதனம் இ.ரூ மில். | மொத்தம் இ.ரூ மில். |
|---|---|---|---|---|---|---|---|
| **கிரயம்/மீள் மதிப்பீடு** | | | | | | | |
| **2017 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி** | 3,999.24 | 7,690.90 | 2,296.24 | 8,596.35 | 3,183.31 | 27.35 | 25,793.39 |
| கொள்வனவு/மாற்றியமைத்தல்/ மேம்படுத்தல் | 19.17 | 912.74 | - | 413.24 | - | 330.60 | 1,675.75 |
| மீள் மதிப்பீடு | 311.60 | - | - | - | - | - | 311.60 |
| செயற்பாட்டிலுள்ள வேலைகளிலிருந்தான மாற்றல்கள் | 126.10 | 19.52 | - | - | - | (145.62) | - |
| மாற்றல்கள் | (11.68) | 1.85 | (4.32) | (3.15) | 0.70 | (0.53) | (17.13) |
| மீள் வகைப்படுத்தல்கள் | 0.32 | 85.47 | - | - | (85.79) | - | - |
| விற்பனைகள்/அகற்றல்கள் | - | (83.38) | - | (34.34) | - | - | (117.72) |
| **2018 மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 4,444.75 | 8,627.10 | 2,291.92 | 8,972.10 | 3,098.22 | 211.80 | 27,645.89 |
| **ஒன்றுசேர்ந்த தேய்மானம்** | | | | | | | |
| **2017 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி** | 379.70 | 5,631.24 | 1,811.53 | 6,571.94 | 1,564.91 | - | 15,959.32 |
| ஆண்டிற்கான கட்டணம் | 138.77 | 588.80 | 161.53 | 493.05 | 396.50 | - | 1,778.65 |
| மீள் மதிப்பீடு | (305.21) | - | - | - | - | - | (305.21) |
| மீள் வகைப்படுத்தல்கள் | - | 85.41 | - | - | (85.41) | - | - |
| சீராக்கல்கள் | - | (19.70) | - | - | - | - | (19.70) |
| விற்பனைகள்/அகற்றல்கள் | - | (81.48) | - | (33.91) | - | - | (115.39) |
| **2018 மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 213.26 | 6,204.27 | 1,973.06 | 7,031.08 | 1,876.00 | - | 17,297.67 |
| **2018 மார்ச் 31 இல் தேறிய புத்தகப் பெறுமதி** | 4,231.49 | 2,422.83 | 318.86 | 1,941.02 | 1,222.22 | 211.80 | 10,348.22 |
| **2017 மார்ச் 31 இல் தேறிய புத்தகப் பெறுமதி** | 3,619.54 | 2,059.66 | 484.71 | 2,024.41 | 1,618.40 | 27.35 | 9,834.07 |

*4.2 (ய)* நிறுவனத்தின் கட்டடங்கள் மற்றும் காணிகளின் நியாயமான பெறுமதி மதிப்பீடானது, ரஞ்ஜன் ஜே சமரக்கோன் (ஏ.ஐ.வி ஸ்ரீலங்கா - குழும மதிப்பீட்டாளர்) அவர்களால் 2018 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டு காணிகள், கட்டடங்கள் மற்றும் இணை நிறுவனத்தின் விமான சமையலறை உபகரணங்கள் ஆகியவற்றின் பெறுமதி திரு. டி.பி.கலுகல்கெதர (பட்டய மதிப்பீட்டாளர்) 2015 மார்ச் 31 ஆம் திகதி முடிவுற்ற நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டது.

பெறுமதி குறிப்பிடப்பட்ட குழுமத்தின் காணி, கட்டடம், ஏனைய பொறிகள் மற்றும் சாதனங்களின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன:

| சொத்து | மதிப்பீட்டு முறை | மதிப்பீட்டு முறை நடைமுறைக்கு வந்த திகதி | அவதானிக்கப்பட முடியாத குறிப்பிடத்தக்க உள்ளீடுகள் | அவதானிக்கப்பட முடியாத உள்ளீடுகளுக்கான மாற்றத்தக்க சந்தைப் பெறுமதி | மதிப்பிடப்பட்ட சந்தைப் பெறுமதி மட்டம் |
|---|---|---|---|---|---|
| காணி - கொழும்பு | திறந்த சந்தை முறை மதிப்பீடுகள் | 2018 மார்ச் 31 | பேர்ச் ஒன்றுக்கான மதிப்பிடப்பட்ட விலை இ.ரூ 18 மில்லியன் | சாத்தியமான மாறத்தக்க தன்மை | மட்டம் 3 |
| கட்டடங்கள் - கொழும்பு / கட்டுநாயக்க | தேய்வடைந்தவற்றின் பதிலீட்டுச் செலவு | 2018 மார்ச் 31 | சதுர அடி ஒன்றுக்கான மதிப்பிடப்பட்ட விலை இ.ரூ 643.47 - இ.ரூ. 11,000 | | |
| பொறி மற்றும் சாதனங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள விமான சமையலறைச் சாதனங்கள் - கட்டுநாயக்க | திறந்த சந்தை முறை மதிப்பீடுகள் | 2015 மார்ச் 31 | ஒவ்வொரு சாதனங்களுக்குமான திறந்த சந்தைப் பெறுமதிகள் மூலம் நியாயப் பெறுமதிகள் பெறப்பட்டன. | | |

நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்படக்கூடிய மீள்மதிப்பிடப்பட்ட சொத்துக்களின் ஏட்டுப் பெறுமதி தேய்மானம் கழித்த செலவில் கீழே காட்டப்பட்டவாறு கொண்டு செல்லப்படுகிறது:

| சொத்துக்களின் வகுப்பு | கிரயம் இ.ரூ. மில். | சொத்துக்கள் கிரயத்தில் கொண்டு செல்லப்பட்டிருக்குமாயின் ஒன்று சேர்த்த தேய்மானம் இ.ரூ. மில். | கொண்டு செல்லப்படும் தேறிய தொகை 2018 இ.ரூ. மில். | கொண்டு செல்லப்படும் தேறிய தொகை 2017 இ.ரூ. மில். |
|---|---|---|---|---|
| சொத்துக்களின் வகுப்பு | 2,916.19 | 1,461.33 | 1,454.86 | 1,689.65 |
| காணி மற்றும் கட்டடங்கள் | 2,210.35 | 1,945.92 | 264.43 | 215.99 |

*(b)* இவ்வாண்டில், குழுமம் கொள்வனவு செய்த சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் ஒன்றுசேர்ந்த பெறுமதி இ.ரூ. 1,675.75 மில்லியனாகும் (2017 - இ.ரூ. 1,093.98 மில்லியன்). சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் கொள்வனவிற்காக இவ்வாண்டில் செய்யப்பட்ட காசுக் கொடுப்பனவுகள் இ.ரூ. 1,566.90 மில்லியன் (2017 - இ.ரூ. 1,131.77 மில்லியன்).

*(c)* குழுமத்தின் சொத்துக்கள், பொறிகள் மற்றும் கருவிகள் முழுமையாக தேய்மானமடைந்த சொத்துக்களை உள்ளடக்கி மொத்தமாக இ.ரூ. 10,588 .66 மில்லியனைக் (2017 - இ.ரூ. 9,356.27 மில்லியன்) கொண்டிருந்தது.

## 4. ஆதனங்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் (தொடர்ச்சி)

### *4.3 கம்பனி*

| | காணியும் கட்டடங்களும் இ.ரூ மில். | பொறி மற்றும் உபகரணங்கள் இ.ரூ மில். | தொழிற்படு குத்தகைகள் மீதான விமானங்களுக்கு செய்யப்பட்ட திருத்தங்கள் இ.ரூ மில். | விமானத்துடன் தொடர்புடைய சாதனங்கள் இ.ரூ மில். | நிதிக் குத்தகை மீதான பொறி மற்றும் சாதனங்கள் இ.ரூ மில். | முற்பணங்கள்/ செயற்பாட்டிலுள்ள மூலதனம் இ.ரூ மில். | மொத்தம் இ.ரூ மில். |
|---|---|---|---|---|---|---|---|
| **கிரயம்/மீள் மதிப்பீடு** | | | | | | | |
| 2017 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 2,471.19 | 6,487.86 | 2,296.24 | 8,596.35 | 3,183.31 | 15.46 | 23,050.41 |
| கொள்வனவு/மாற்றியமைத்தல்/ மேம்படுத்தல் | 11.75 | 794.78 | - | 413.24 | - | 184.19 | 1,403.96 |
| மீள் மதிப்பீடு | 311.60 | - | - | - | - | - | 311.60 |
| செயற்பாட்டிலுள்ள வேலைகளிலிருந்தான மாற்றல்கள் | 39.72 | 19.52 | - | - | - | (59.24) | - |
| சீராக்கல்கள் | (11.68) | 21.04 | (4.32) | (3.15) | 0.70 | (0.53) | 2.06 |
| மீள் வகைப்படுத்தல்கள் | - | 85.79 | - | - | (85.79) | - | - |
| விற்பனைகள்/அகற்றல்கள் | - | (81.70) | - | (34.34) | - | - | (116.04) |
| 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | 2,822.58 | 7,327.29 | 2,291.92 | 8,972.10 | 3,098.22 | 139.88 | 24,651.99 |
| **ஒன்றுசேர்ந்த தேய்மானம்** | | | | | | | |
| 2017 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 301.16 | 5,088.68 | 1,811.53 | 6,571.94 | 1,564.91 | - | 15,338.22 |
| ஆண்டிற்கான கட்டணம் | 97.70 | 430.61 | 161.53 | 493.05 | 396.50 | - | 1,579.39 |
| மீள் மதிப்பீடு | (305.21) | - | - | - | - | - | (305.21) |
| மீள் வகைப்படுத்தல்கள் | - | 85.41 | - | - | (85.41) | - | - |
| விற்பனைகள்/அகற்றல்கள் | - | (81.48) | - | (33.91) | - | - | (115.39) |
| **2018 மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 93.65 | 5,523.22 | 1,973.06 | 7,031.08 | 1,876.00 | - | 16,497.01 |
| **2018 மார்ச் 31 இல் தேறிய புத்தகப் பெறுமதி** | 2,728.93 | 1,804.07 | 318.86 | 1,941.02 | 1,222.22 | 139.88 | 8,154.98 |
| **2017 மார்ச் 31 இல் தேறிய புத்தகப் பெறுமதி** | 2,170.03 | 1,399.18 | 484.71 | 2,024.41 | 1,618.40 | 15.46 | 7,712.19 |

### 4. ஆதனங்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் (தொடர்ச்சி)

*4.4 a)* நிறுவனத்தின் காணிகள், கட்டடங்கள் ஆகியவற்றின் நியாயமான பெறுமதி மதிப்பீடானது, திரு.ரஞ்ஜன் ஜே சமரக்கோன் (ஏ.ஐ.வி ஸ்ரீலங்கா - குழும மதிப்பீட்டாளர்) அவர்களால் சுயேச்சையாக 2018 மார்ச் 31 ஆம் திகதி முடிவுற்ற நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டது. இந்த மீள் மதிப்பீடுகளின் விபரங்கள் 2018 மார்ச் 31 ஆம் திகதிய நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

பெறுமதி குறிப்பிடப்பட்ட குழுமத்தின் காணி, கட்டடம், ஏனைய பொறிகள் மற்றும் சாதனங்களின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன:

| சொத்து | மதிப்பீட்டு முறை | மதிப்பீட்டு முறை நடைமுறைக்கு | அவதானிக்கப்பட முடியாத குறிப்பிடத்தக்க உள்ளீடுகள் | அவதானிக்கப்பட முடியாத உள்ளீடுகளுக்கான மாற்றத்தக்க சந்தைப் பெறுமதி | மதிப்பிடப்பட்ட சந்தைப் பெறுமதி மட்டம் |
|---|---|---|---|---|---|
| காணி - கொழும்பு | திறந்த சந்தை | 2018 மார்ச் 31 | பேர்ச் ஒன்றுக்கான மதிப்பிடப்பட்ட விலை இ.ரூ 18 மில்லியன் | சாத்தியமான மாறத்தக்க தன்மை | மட்டம் 3 |
| கட்டடங்கள் - கொழும்பு / கட்டுநாயக்க | தேய்மானம் கழித்தவற்றின் பதிலீட்டுச் செலவு | 2018 மார்ச் 31 | சதுர அடி ஒன்றுக்கான மதிப்பிடப்பட்ட விலை இ.ரூ 643.47 - இ.ரூ. 8,092.50 | | |

*b)* நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்படக்கூடிய மீள்மதிப்பிடப்பட்ட சொத்துக்களின் ஏட்டுப் பெறுமதி தேய்மானம் கழித்த செலவில் கீழே காட்டப்பட்டவாறு கொண்டு செல்லப்படுகிறது:

| சொத்துக்களின் வகுப்பு | கிரயம் | சொத்துக்கள் கிரயத்தில் கொண்டு ஒன்று சேர்த்த தேய்மானம் | கொண்டு செல்லப்படும் தேறிய தொகை 2018 | கொண்டு செல்லப்படும் தேறிய தொகை 2017 |
|---|---|---|---|---|
| | இ.ரூ. மில். | இ.ரூ. மில். | இ.ரூ. மில். | இ.ரூ. மில். |
| காணி மற்றும் கட்டடங்கள் | 1,239.49 | 828.36 | 411.13 | 658.98 |

*c)* இவ்வாண்டில், குழுமம் கொள்வனவு செய்த சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் ஒன்றுசேர்ந்த பெறுமதி இ.ரூ. 1,403.96 மில்லியனாகும் (2017 - இ.ரூ. 885. 02 மில்லியன்). சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் கொள்வனவிற்காக இவ்வாண்டில் செய்யப்பட்ட காசுக் கொடுப்பனவுகள் இ.ரூ. 1,295.98 மில்லியன் (2017 - இ.ரூ. 921.14 மில்லியன்).

*d)* குழுமத்தின் சொத்துக்கள், பொறிகள் மற்றும் கருவிகள் முழுமையாக தேய்மானமடைந்த சொத்துக்களை உள்ளடக்கி மொத்தமாக இ.ரூ. 10,233.31 மில்லியனைக் (2017 - இ.ரூ. 9,043.60 மில்லியன்) கொண்டிருந்தது.

### 5. முன்கூட்டியே விமானத்திற்குக் கொடுப்பனவு மேற்கொள்ளல்

விநியோகத்திற்கு முன்னரான கொடுப்பனவுகளாக நிதி அறிக்கை தயாரிக்கப்படும் நாளில் காணப்படுவதாவன, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் விநியோகிக்கப்படவுள்ள நான்கு எயார்பஸ் A350-900 விமானங்களுக்கான கொடுப்பனவாகும். இதற்கான தொகை இலங்கை 2,528.12 மில்லியன் (அமெரிக்க டொலர் 19.21 மில்லியன்). நிதி அறிக்கை நாளன்றில் செலுத்தப்படாத கொடுப்பனவாக எயார்பஸ் நிறுவனத்திற்கு 19.04 மில்லியன் அமெரிக்க டொலர்கள் காணப்படுவதோடு, நான்கு A350-900 விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கான கொள்வனவு ஒப்பந்தத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என நிறுவனம் எயார்பஸ் நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளது. குறித்த விடயம் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின் பின் எயார்பஸ் நிறுவனம் குறித்த கொள்வனவு ஒப்பந்தத்தை A321neo விமானங்கள் மூலம் மாற்றியமைக்க பரிந்துரை செய்துள்ளது. இது சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. இதனால் விநியோகத்திற்கு முன்னரான கொடுப்பனவில் நட்டங்கள் எதுவும் ஏற்படாது என சபை நம்பிக்கை தெரிவித்துள்ளது.

## 6. விமானப் பராமரிப்பு ஒதுக்கீடு

| குழுமம்/கம்பனி | 2018<br>இ.ரூ மில். | 2017<br>இ.ரூ மில். |
|---|---|---|
| ஏப்பிறல் 1இல் உள்ளவாறு மீதி | 26,432.40 | 21,853.57 |
| கொடுப்பனவுகள் | 10,247.45 | 7,070.67 |
| சீராக்கங்கள் | - | (3,574.27) |
| பதிவழிப்புகள் | (656.17) | - |
| அறவீடுகள் | (2,272.72) | (109.90) |
| செலாவணி இலாபம் | 766.85 | 1,192.33 |
| | 34,517.81 | 26,432.40 |
| கழி: பெறுமதி இழப்பிற்கான ஏற்பாடு (குறிப்பு 6.2) | (7,567.00) | (11,795.10) |
| **மாச்சு 31இல் உள்ளவாறு தேறிய அறவீடுகள் மீதி (குறிப்பு 6.1)** | 26,950.81 | 14,637.30 |

### *6.1 நடைமுறை/நடைமுறையற்ற பகுப்பாய்வு*

| | மொத்தம்<br>இ.ரூ மில். | ஐயக் கடன் ஏற்பாடு<br>இ.ரூ மில். | தேறிய<br>இ.ரூ மில். | ஒரு ஆண்டில் அறவிடக் கூடியவை<br>இ.ரூ மில். | ஒரு வருடத்தின் பின் அறவிடக் கூடியவை<br>இ.ரூ மில். |
|---|---|---|---|---|---|
| 2018 மாச்சு 31இல் உள்ளவாறு மீதி | 34,517.81 | (7,567.00) | 26,950.81 | 6,226.64 | 20,724.17 |
| 2017 மாச்சு 31இல் உள்ளவாறு மீதி | 26,432.40 | (11,795.10) | 14,637.30 | 6,501.62 | 8,135.68 |

### *6.2 பெறுமதி இழப்பிற்கான ஏற்பாட்டின் அசைவுகள்*

| | 2018<br>இ.ரூ மில். | 2017<br>இ.ரூ மில். |
|---|---|---|
| ஏப்பிறல் 1இல் உள்ளவாறு மீதி | 11,795.10 | 11,656.20 |
| ஆண்டுக்கான விதிப்பனவுகள் | 4,459.04 | 2,637.43 |
| பதிவழிப்பு | (656.17) | - |
| சீராக்கங்கள் | (8,336.69)* | (3,006.29) |
| செலாவணி நட்டம் | 305.72 | 507.76 |
| மாச்சு 31இல் உள்ளவாறு மீதி | 7,567.00 | 11,795.10 |

*பழுதுபார்ப்பு ஒதுக்குகளில் இருந்து வலுக்குறைவு காரணமாக ஒதுக்கீடுகள் விமான பழுதுபார்ப்பிற்கு பரிமாற்றம் செய்யப்பட்டது. விமான குத்தகை ஒப்பந்தத்தின் நீடிப்பு காரணமாக ஏற்பட்ட மொத்த நட்டமே இதற்குக் காரணமாக அமைந்திருந்தது.

### 7. அருவச் சொத்துக்கள்

| கணனி மென்பொருள் | மென்பொருள் | குழுமம் செயற்பாட்டில் உள்ள மூலதனம் | மொத்தம் | மென்பொருள் | கம்பனி செயற்பாட்டில் உள்ள மூலதனம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | இ.ரூ. மில். | இ.ரூ. மில். | இ.ரூ. மில். | இ.ரூ. மில். | இ.ரூ. மில். | இ.ரூ. மில். |
| **கிரயம்** | | | | | | |
| **2017 ஏப்பிறல் 01இல் உள்ளவாறு மீதி** | 2,239.63 | 8.25 | 2,247.88 | 2,177.82 | 8.25 | 2,186.07 |
| கொள்வனவுகள்/திருத்தியமைத்தல்கள்/ மேம்பாடுகள் | 90.85 | 15.61 | 106.46 | 67.90 | 15.61 | 83.51 |
| செயற்பாட்டிலுள்ள வேலைகளிலிருந்தான மாற்றல்கள் | 11.77 | (11.77) | - | 11.77 | (11.77) | - |
| அகற்றல்கள் | (970.48) | - | (970.48) | (970.48) | - | (970.48) |
| **2018 மாச்சு 31இல் உள்ளவாறு மீதி** | 1,371.77 | 12.09 | 1,383.86 | 1,287.01 | 12.09 | 1,299.10 |
| **திரட்டிய பதிவழிப்பு** | | | | | | |
| 2017 ஏப்பிறல் 01இல் உள்ளவாறு மீதி | 1,594.52 | - | 1,594.52 | 1,560.42 | - | 1,560.42 |
| ஆண்டுக்கான விதிப்பனவுகள் | 208.62 | - | 208.62 | 200.09 | - | 200.09 |
| அகற்றல்கள் | (667.58) | - | (667.58) | (667.58) | - | (667.58) |
| **2018 மாச்சு 31இல் உள்ளவாறு மீதி** | 1,135.56 | - | 1,135.56 | 1,092.93 | - | 1,092.93 |
| **2018 மார்ச் 31 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி** | 236.21 | 12.09 | 248.30 | 194.08 | 12.09 | 206.17 |
| **2017 மார்ச் 31 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி** | 645.11 | 8.25 | 653.36 | 617.40 | 8.25 | 625.65 |

குழுமத்தின் மற்றும் கம்பனியின் அருவச் சொத்துக்கள் பதிவழிக்கப்பட்ட மொத்தத் தொகை முறையே இ.ரூ. 510.70 மில்லியனையும் இ.ரூ. 479.96 மில்லியனையும் (2017 - இ.ரூ. 446.25 மில்லியன் மற்றும் இ.ரூ. 420.93 மில்லியன்) கொண்ட முழுத்தொகையினை உள்ளடக்கியிருந்தது.

### 8. முதலீடுகள்

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| **நடைமுறையற்ற முதலீடுகள்** | 2018 | 2017 | 2018 | 2017 |
| | இ.ரூ மில். | இ.ரூ மில். | இ.ரூ மில். | இ.ரூ மில். |
| **இலங்கையிலுள்ள துணை நிறுவனங்களின் முதலீடுகள்** | | | | |
| - சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட் (940,268,456 பங்குகள், 100%) ஜபணிப்பாளர் பெறுமதி தேறிய சொத்துப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது இ.ரூ. 6.66 பில்லியன் (2017 - இ.ரூ. 8.07 பில்லியன்)ஸ | - | - | 42.24 | 42.24 |
| - எயார் லங்கா (பிறைவேற்) லிமிடெட் (40,000 பங்குகள்) * | 0.40 | 0.40 | 0.20 | 0.20 |
| | 0.40 | 0.40 | 42.44 | 42.44 |

* எயார் லங்கா (பிறைவேற்) லிமிடெட்டின் 50 சதவீதப் பங்குகள் கம்பனி வசமும், எஞ்சிய 50 சதவீதம் துணைக் கம்பனி வசமும் உள்ளன. எயார் லங்கா (பிறைவேற்) லிமிடெட் ஆரம்பத்திலிருந்தே இயங்காத கம்பனியாக இருப்பதுடன், இது பொருண்மியமற்றதாக இருப்பதனால் கூட்டிணைக்கப்படவில்லை.

### *8.1. நடைமுறை முதலீடுகள்*

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2018 | 2017 | 2018 | 2017 |
| | இ.ரூ மில். | இ.ரூ மில். | இ.ரூ மில். | இ.ரூ மில். |
| வங்கியில் நிலையான வைப்புக்கள் | 749.96 | 292.94 | 589.59 | 292.94 |

### 9. இருப்புச் சரக்கு

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2018 | 2017 | 2018 | 2017 |
அறிக்கையிடும் காலப்பகுதியில் வழமையான வியாபாரத்தின் போது முக்கிய முகாமைத்துவ ஆளணியினரால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்படுகின்றன:

| | 2018<br>இ.ரூ. மில். | 2017<br>இ.ரூ. மில். |
|---|---|---|
| குறுங்கால நன்மைகள் | 304.17 | 323.21 |
| தொழிலுக்குப் பின்னைய நன்மைகள் | 46.09 | 39.40 |
| இடைத்தங்கல் நன்மைகள் | 12.43 | - |

மேலேயுள்ளவை இவ்வாண்டில் செலுத்தப்பட்ட இ.ரூ. 6.01 மில்லியன் (2017 இ.ரூ. 9.86 மில்லியன்) கொண்ட பணிப்பாளர்களின் ஊதியத்தினையும், வேறு நன்மைகளையும் மற்றும் விமானப் பயணக் கட்டணமான இ.ரூ. 18.65 (2017 - இ.ரூ. 19.55 மில்லியன்) மில்லியனையும் உள்ளடக்கியுள்ளது. மேலே வெளிப்படுத்தப்பட்ட நன்மைகளுக்குப் புறம்பாக முதன்மை முகாமைத்துவ ஆளணியினர் /

பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், அவர்களது வாழ்க்கைத் துணைவர், தங்கியிருக்கும் பிள்ளைகள் ஆகியோர் அவர்கள் பதவியிலிருக்கும் காலப்பகுதியில் சிறிலங்கன் எயார்லையின்ஸின் வியாபார வகுப்பில் கட்டணமின்றி பயணிக்க உரித்துடையவராவர்.

*28.2 குழுமம்*

இலங்கை அரசாங்கம் கம்பனியில் முக்கிய பங்குடமையாளர்களாக இருப்பதனால் குழுமத்தினைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தினை அது கொண்டிருக்கிறது.

பின்வருவன உள்ளிட்ட கணிசமானளவு கொடுக்கல் வாங்கல்கள் இலங்கை அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் முயற்சிகளுடன் வழமையான வியாபாரக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன:

| கம்பனியின் பெயர் | உறவு முறை | கொடுக்கல் வாங்கல்களின் தன்மை | கொடுக்கல் வாங்கல் தொகை | | பெறத்தக்க /பெறத்தக்க / (கொடுபடத் தக்க) மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2018 இ.ரூ. மில். | 2017 இ.ரூ. மில். | 2018 இ.ரூ. மில். | 2017 இ.ரூ. மில். |
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | அரச உடைமை | எரிபொருள | (25,959.20) | (19,921.07) | (4,907.32) | (10,327.05) |
| | | பிற்போடப்பட்ட வழங்குநர் கொடுப்பனவு | - | - | (7,985.05) | - |
| | | வரவேண்டிய கொடுப்பனவுகள் மீதான நிதிச் செலவு | (490.61) | (368.64) | (83.96) | (445.21) |
| விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் | அரச உடைமை | தரையிறங்கல், தரித்து நிற்றல், விமானப் பாலம், தங்கும் மண்டம், வாடகை அதிகார வணிகக் கட்டணம், கழிவுப்பொருள் அகற்றல் கட்டணம் | (3,489.83) | (3,415.30) | (1,214.16) | (1,210.65) |
| உள்நாட்டு விமானப் போக்குவரத்து அதிகார சபை | அரச கட்டுப்பாட்டில் | உரிமங்கள், அனுமதிப்பத்திரம் மற்றும் தீர்வைகள் | (9,779.95) | (6,484.09) | (0.84) | (0.21) |
| மிஹின் லங்கா (பிறைவேட்) லிமிடெட் | அரச உடைமை | விற்பனை | 74.48 | 6,123.54 | 745.43 | 744.54 |
| | | கொள்வனவு | (20.88) | (5,560.40) | - | - |
| இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | அரச உடைமை | காப்புறுதிச் சேவைகள் | (477.53) | (407.88) | - | - |
| இலங்கை வங்கி | அரச உடைமை | கடன் மீள்கொடுப்பனவு | - | (43.35) | (28,457.50) | (24,281.25) |
| | | பெறப்பட்ட கடன் | 4,107.83 | 11,381.25 | - | - |
| | | குறுங்கால வைப்புக்கள் | - | - | 679.57 | 216.04 |
| | | வட்டி | (2,770.01) | (2,175.33) | - | - |
| | | வங்கி மேலதிகப் பற்று | - | - | (1,757.14) | (6,805.31) |
| மக்கள் வங்கி | அரச உடைமை | பெறப்பட்ட கடன் | 3,889.38 | 11,381.25 | (28,907.50) | (24,731.25) |
| | | வட்டி | (2,343.83) | (2,137.39) | - | - |
| ஊழியர் சேமலாப நிதியம் | துணை நிறுவனப் பங்குடமையாளர் | முன்னுரிமைப் பங்கு பங்குலாபம் | (130.10) | (130.10) | (64.87) | (64.87) |

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

| கம்பனியின் பெயர் | உறவு முறை | கொடுக்கல் வாங்கல்களின் தன்மை | கொடுக்கல் வாங்கல் தொகை | | பெறத்தக்க /பெறத்தக்க / (கொடுபடத் தக்க) மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2018<br>இ.ரூ. மில். | 2017<br>இ.ரூ. மில். | 2018<br>இ.ரூ. மில். | 2017<br>இ.ரூ. மில். |
| | | 13.01%<br>வாக்குரிமையற்ற<br>மீட்கத்தக்க<br>ஒன்றுசேர்ந்தவை<br>(5 ஆண்டுகள்)<br>முன்னுரிமைப் பங்குகள் | - | - | (1,000.00) | (1,000.00) |

## 28. தொடர்பான தரப்பினரின் வெளிப்படுத்தல்கள் (தொடர்ச்சி)

### *28.2 குழுமம் (தொடர்ச்சி)*

அறிக்கையிடும் நாளன்று உள்ளவாறு குழுமம், இலங்கை வங்கியிலிருந்து இ.ரூ. 1,926.42 மில்லியன் (2017 - இ.ரூ. 1,159.94 மில்லியன்) கொண்ட வங்கி உத்தரவாத வசதியைப் பயன்படுத்தியது.

இலங்கை அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களிலிருந்தான மற்றும் நிறுவனங்களுக்கான மீதிகள் நிதியியல் நிலைமைக் கூற்றில் வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவைகள் / கொடுபடத்தக்கவைகளின் கீழும் வட்டி உழைக்கும் பொறுப்புக்களின் கீழும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டுப் பகுதியில் குழுமம் தொடர்பான தரப்பினரிடமிருந்து பெறுமதியிழக்கப்பட்ட பெறத்தக்க வர்த்தகம் இ.ரூ. 56.6 மில்லியனாகக் (2017 - இ.ரூ. 744.54 மில்லியன்) காணப்பட்டது. அறிக்கையிடப்பட்ட நாளன்று உள்ளவாறு தொடர்பான தரப்பினருக்கான பெறுமதியிழப்பிற்கான ஏற்பாடு இ.ரூ. 728.9 மில்லியனாகக் (2017 - இ.ரூ. 872.85 மில்லியன்) காணப்பட்டது.

இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இன்படி மட்டுப்படுத்தப்பட்ட வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன - தொடர்பான தரப்பினர் வெளிப்படுத்துகையானது தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் வாய்ந்த கொடுக்கல் வாங்கல்களுக்காக மேற்கொள்ளப்பட்டமைக்கு அவற்றின் அளவு, நடைமுறைச் சாத்தியமற்ற முறையில் பெற்றுக்கொள்ளப்பட்டமை மற்றும் அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் அனைத்துத் / தொடர்பான நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களே காரணமாகும்.

ஆண்டுப் பகுதியில் குழுமம் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொண்ட அரசின் கட்டுப்பாட்டிலுள்ள / தொடர்பான அத்தகைய நிறுவனங்களில் சில பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| - இலங்கை மின்சார சபை | - | இலங்கை சுற்றுலாச் சபை |
| - உள்நாட்டு அரச இறைகள் திணைக்களம் | - | ஸ்ரீலங்கா அஞ்சல் அதிகார சபை |
| - அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் | - | இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் |
| - வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | - | ஜனாதிபதி செயலகம் |

மேலும், தொழில்நிலை ஓய்வுகால நன்மைகளுக்கான பங்களிப்புடன் தொடர்பான மேலதிகக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கிணங்க ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் வழங்கப்பட்டன.

**கம்பனி**

தொடர்பான தரப்பினருடனான கொடுக்கல்வாங்கல்கள் வர்த்தக நியதிகளில் இடம்பெற்றன.

**துணை நிறுவனம்**

சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டிற்கும் மிஹின் லங்கா (பிறைவேற்) லிமிடெட் என்பனவற்றிற்குச் செய்யப்பட்ட விற்பனைகள் தொகுதிக் கழிவுகள் உட்பட கழிவிடப்பட்ட விலைகளில் மேற்கொள்ளப்பட்டன. மற்றைய தொடர்பான தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் வர்த்தக நியதிகளில் இடம்பெற்றன.

## 28. தொடர்பான தரப்பினரின் வெளிப்படுத்தல்கள் (தொடர்ச்சி)

*28.3 கம்பனி*

பின்வருவன உள்ளிட்ட கணிசமானளவு கொடுக்கல்வாங்கல்கள் இலங்கை அரசாங்கத்தினால் (புமுளுடு) கட்டுப்படுத்தப்படும் துணை நிறுவனம் மற்றும் முயற்சிகளுடன் வழமையான வியாபாரக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன:

| கம்பனியின் பெயர் | உறவு முறை | கொடுக்கல் வாங்கல்களின் தன்மை | கொடுக்கல் வாங்கல் தொகை | | பெறத்தக்க / (கொடுபடத் தக்க) மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2018<br>இ.ரூ. மில். | 2017<br>இ.ரூ. மில். | 2018<br>இ.ரூ. மில். | 2017<br>இ.ரூ. மில். |
| சிறிலங்கன் கேட்டறிங் (பிறைவேற்) லிமிடெட் | துணை நிறுவனம் | சரக்குக் கட்டண சேவைகள் | 13.99 | 20.03 | - | - |
| | | விமான உணவு வழங்கல் மற்றும் ஏனைய பணிகள் | (5,378.46) | (4,096.48) | (5,352.44) | (6,707.47) |
| | | பங்குலாபம் | 5,314.10 | 3,093.48 | - | - |
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | அரச உடைமை | எரிபொருள | (25,852.36) | (19,813.14) | (4,907.32) | (10,327.05) |
| | | பிற்போடப்பட்ட வழங்குநர் கொடுப்பனவு | - | - | (7,985.05) | - |
| | | வரவேண்டிய கொடுப்பனவுகள் மீதான நிதிச் செலவு | (490.61) | (368.64) | (83.96) | (445.21) |
| விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் | அரச உடைமை | தரையிறங்கல், தரித்து நிற்றல், விமானப் பாலம், தங்கும் மண்டம், வாடகை அதிகார வணிகக் கட்டணம், கழிவுப்பொருள் அகற்றல் கட்டணம் | (2,912.51) | (2,940.50) | (1,236.06) | (1,294.15) |
| உள்நாட்டு விமானப் போக்குவரத்து அதிகார சபை | அரச கட்டுப்பாட்டில் | உரிமங்கள், அனுமதிப்பத்திரம் மற்றும் தீர்வைகள் | (9,779.95) | (6,484.09) | (0.84) | (0.21) |
| மிஹின் லங்கா (பிறைவேட்) லிமிடெட் | அரச உடைமை | விற்பனை | 74.48 | 5,869.73 | 745.43 | 692.14 |
| | | கொள்வனவு | (20.88) | (5,560.40) | - | - |
| இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | அரச உடைமை | காப்புறுதிச் சேவைகள் | (477.53) | (407.88) | - | - |
| இலங்கை வங்கி | அரச உடைமை | கடன் மீள்கொடுப்பனவு | - | (43.35) | (28,457.50) | (24,281.25) |
| | | பெறப்பட்ட கடன் | 3,889.38 | 11,381.25 | - | - |
| | | குறுங்கால வைப்புக்கள் | - | - | 679.57 | 216.04 |
| | | தேறிய வட்டி | (2,770.01) | (2,175.33) | - | - |
| | | வங்கி மேலதிகப் பற்று | - | - | (1,757.14) | (6,805.31) |
| மக்கள் வங்கி | அரச உடைமை | பெறப்பட்ட கடன் | 3,889.38 | 11,381.25 | (28,907.50) | (24,731.25) |
| | | வட்டி | (2,343.83) | (2,137.39) | - | - |

### 28. தொடர்பான தரப்பினரின் வெளிப்படுத்தல்கள் (தொடர்ச்சி)

#### *28.3 கம்பனி (தொடர்ச்சி)*

அறிக்கையிடும் நாளன்று உள்ளவாறு குழுமம், இலங்கை வங்கியிலிருந்து இ.ரூ. 1,906.88 மில்லியன் (2017 - இ.ரூ. 1,159.94 மில்லியன்) கொண்ட வங்கி உத்தரவாத வசதியைப் பயன்படுத்தியது.

இலங்கை அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களிலிருந்தான மற்றும் நிறுவனங்களுக்கான மீதிகள் நிதியியல் நிலைமைக் கூற்றில் வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவைகள் / கொடுபடத்தக்கவைகளின் கீழும் வட்டி உழைக்கும் பொறுப்புக்களின் கீழும் உள்ளடக்கப்பட்டுள்ளன.
இவ்வாண்டுப் பகுதியில் குழுமம் தொடர்பான தரப்பினரிடமிருந்து பெறுமதியிழக்கப்பட்ட பெறத்தக்க வர்த்தகம் இ.ரூ. 56.6 மில்லியனாகக் (2017 - 692.14 மில்லியன்) காணப்பட்டது. அறிக்கையிடப்பட்ட நாளன்று உள்ளவாறு தொடர்பான தரப்பினருக்கான பெறுமதியிழப்பிற்கான ஏற்பாடு இ.ரூ. 875.73 மில்லியனாகக் (2017 - இ.ரூ. 820.45 மில்லியன்) காணப்பட்டது.

இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இன்படி மட்டுப்படுத்தப்பட்ட வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன - தொடர்பான தரப்பினர் வெளிப்படுத்துகையானது தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் வாய்ந்த கொடுக்கல் வாங்கல்களுக்காக மேற்கொள்ளப்பட்டமைக்கு அவற்றின் அளவு, நடைமுறைச் சாத்தியமற்ற முறையில் பெற்றுக்கொள்ளப்பட்டமை மற்றும் அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் அனைத்துத் / தொடர்பான நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களே காரணமாகும்.

ஆண்டுப் பகுதியில் குழுமம் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொண்ட அரசின் கட்டுப்பாட்டிலுள்ள / தொடர்பான அத்தகைய நிறுவனங்களில் சில பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| - இலங்கை மின்சார சபை | - | இலங்கை சுற்றுலாச் சபை |
| - உள்நாட்டு அரச இறைகள் திணைக்களம் | - | ஸ்ரீலங்கா அஞ்சல் அதிகார சபை |
| - அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் | - | இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் |
| - வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | - | ஜனாதிபதி செயலகம் |

மேலும், தொழில்நிலை ஓய்வுகால நன்மைகளுக்கான பங்களிப்புடன் தொடர்பான மேலதிகக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கிணங்க ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் வழங்கப்பட்டன.

தொடர்பான தரப்பினருடனான கொடுக்கல்வாங்கல்கள் வர்த்தக நியதிகளில் இடம்பெற்றன.

### 29. நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவக் குறிக்கோள்களும் கொள்கைகளும்

குழுமத்தின் முதன்மையான நிதியியல் பொறுப்புக்கள், கடன்கள் மற்றும் கடன்பாடுகள், வர்த்தகம் மற்றும் செலுத்தத்தக்கவைகள் மற்றும் ஏனைய நிதியியல் பொறுப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. இந்நிதியியல் பொறுப்புக்களின் முக்கிய நோக்கம் யாதெனில், கம்பனியின் தொழிற்பாடுகளுக்கு நிதியிடுவதேயாகும். கம்பனியின் நிதியியல் சொத்துக்கள் வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் தொழிற்பாடுகளிலிருந்து நேரடியாகப் பெறப்பட்ட காசு மற்றும் குறுங்கால வைப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

கம்பனி முகாமைத்துவம் அனைத்தையுமுள்ளடக்கிய இடர்நேர்வு முகாமைத்துவக் கணிப்புக்களை காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்து இற்றைப்படுத்தியதுடன், குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டுள்ள பின்வரும் நிதியியல் இடர்நேர்வுகளையும் அடையாளம் கண்டிருக்கிறது.

(i) சந்தை இடர்
- வட்டி வீத இடர்
- நாணய இடர்

(ii) திரவத்தன்மை இடர்

(iii) கொடுகடன் இடர்

குழுமம் அதன் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகளையும் நடைமுறைகளையும் சந்தைகள் மற்றும் ஏனைய நிதியியல் இடர்நேர்வுகளை எதிர்நோக்கும் நடவடிக்கைகளில் ஏற்படும் மாற்றங்களைப் பிரதிபலிப்பதற்காக கிரமமான அடிப்படையில் மீளாய்வு செய்ததுடன் இவை, இடர்நேர்வுகள் அடையாளம் காணப்பட்டமையினை உறுதிப்படுத்துவதற்காகப் பொருத்தமான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் மூலம் நிருவகிக்கப்பட்டதுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கிணங்க அளவிடப்பட்டு முகாமைப்படுத்தப்பட்டன.

(i) சந்தை இடர்

**வட்டி வீத இடர்**

வட்டி வீத இடர்நேர்வு என்பது, சந்தை வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களின் காரணமாக நிதிச் சாதனங்களின் எதிர்கால காசுப்பாய்ச்சலின் சந்தைப் பெறுமதி தளம்பலுறும் என்பதாகும். சந்தை வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பாக இடர்நேர்வுகளுக்குக் குழுமம் உள்ளாகும் தன்மை முக்கியமாக மிதக்கும் வட்டி வீதங்களுடன் கூடிய குழுமத்தின் நீண்ட காலப் படுகடன் கடப்பாடுகளுடன் தொடர்புபட்டதாக விளங்குகிறது.

குழுமத்தின் கொள்கை யாதெனில், வட்டி வீத தளம்பல்களின் தாக்கத்தினைத் தணிக்கும் பொருட்டு விமானங்களின் குத்தகை உட்பட கடன்பாடுகளின் நிலையான வீதங்களுக்கும், மாறி வீதங்களுக்குமிடையில் பொருத்தமான சமநிலையொன்றினைப் பேணுவதேயாகும்.

கடன்கள், கடன்பாடுகள் மற்றும் வட்டி வீதங்களில் ஏற்படும் நியாயமான சாத்தியமான மாற்றங்களுக்கேற்ப மாறும் தன்மையினை எடுத்துக்காட்டுகின்றது. ஏனைய அனைத்து மாறிகளும் நிலையாக இருக்கும் பொழுது, கம்பனியின் / குழுமத்தின் வரிக்கு முன்னரான இழப்பு, மிதக்கும் வீதக் கடன்பாடுகள் தாக்கத்தினூடாக பாதிக்கப்படுவதனை பின்வரும் அட்டவணை காட்டுகிறது:

| | 2018 | | 2017 | |
|---|---|---|---|---|
| | வரிக்கு முந்திய இழப்பு மீதான தாக்கம் | | வரிக்கு முந்திய இழப்பு மீதான தாக்கம் | |
| | குழுமம் இ.ரூ. மில். | கம்பனி இ.ரூ. மில். | குழுமம் இ.ரூ. மில். | கம்பனி இ.ரூ. மில். |
| **வட்டி வீதத்தின் அதிகரிப்பு/(வீழ்ச்சி)** | | | | |
| +1% | 732.47 | 730.44 | 462.72 | 462.72 |
| -1% | (732.47) | (730.44) | (462.72) | (462.72) |

* வட்டி வீதத்தின் அதிகரிப்பு இழப்புக்களில் அதிகரிப்பினை ஏற்படுத்துகிறது.

**வெளிநாட்டு நாணய இடர்நேர்வு**

வெளிநாட்டு நாணய இடர்நேர்வு என்பது, வெளிநாட்டுச் செலாவணி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களின் காரணமாக நிதியியல் சாதனமொன்றின் எதிர்கால காசுப்பாய்ச்சலின் சந்தைப் பெறுமதி தளம்பலடைவதாகும். குழுமத்தின் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட வருமானம், செலவுகள் மற்றும் ஏனைய நிதியியல் சாதனங்கள் என்பனவற்றின் காரணமாக அது வெளிநாட்டுச் செலாவணி வீத தளம்பல்களின் தாக்கத்திற்கு உட்படுகிறது.

குழுமமானது அதன் வெளிநாட்டுச் செலாவணியின் பாதிப்புக்குள்ளாகும் தன்மையினை, சாத்தியமானளவிற்கு அதன் கொள்கைகளில் பொருத்தப்பாட்டினை ஏற்படுத்திக் கொண்டமை, ஒவ்வொரு முக்கியமான நாணயங்களின் பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் பெருமளவிற்கு நேரிடக்கூடியதென அடையாளம் காணப்பட்ட வெளிநாட்டுக் கடன்களைக் குறிப்பாக, வெளிநாட்டு நாணயத்தில் அடையாளம் காணப்பட்ட எதிர்கால வருமானத்தினை பாதுகாத்துக் கொண்டமை என்பன மூலம் கட்டுப்படுத்திக் கொண்டது.

பின்வரும் அட்டவணையானது கம்பனியின் / குழுமத்தின் வரிக்கு முன்னரான இழப்பு (நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் தினத்தில் நாணயச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களின் காரணமாக) மற்றைய அனைத்து மாறிகளும் மாறாது நிலையாக இருக்கும் பொழுது, ஐக்கிய அமெரிக்க டொலரின் செலாவணி வீதத்தில் ஏற்படும் நியாயமான சாத்தியமான மாற்றங்களின் காரணமாக எவ்வாறு மாற்றமடைகின்றது என்பதனை எடுத்துக்காட்டுகிறது. மற்றைய அனைத்து நாணயங்கள் தொடர்பிலும் வெளிநாட்டு நாணய மாற்றங்களுக்கு குழுமம் உள்ளாகும் தன்மை பெரியளவில் காணப்படவில்லை.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஏனைய அனைத்தையு முள்ளடக்கிய வருமானம் மீதான தாக்கம் | | வரிக்கு முந்திய இழப்பு மீதான தாக்கம் | | ஏனைய அனைத்தையு முள்ளடக்கிய வருமானம் மீதான தாக்கம் | | வரிக்கு முந்திய இழப்பு மீதான தாக்கம் | |
| | குழுமம் இ.ரூ. மில். | கம்பனி இ.ரூ. மில். | குழுமம் இ.ரூ. மில். | கம்பனி இ.ரூ. மில். | குழுமம் இ.ரூ. மில். | கம்பனி இ.ரூ. மில். | குழுமம் இ.ரூ. மில். | கம்பனி இ.ரூ. மில். |
| **இலங்கை ரூபாவிற்கெதிராக ஐ.அ.டொலரில் உயர்வு / (தேய்வு)** | | | | | | | | |
| +3% | 500.16 | 500.16 | 1,227.33 | 1,247.02 | 11.07 | 11.07 | 1,330.14 | 1,644.65 |
| -3% | (500.16) | (500.16) | (1,227.33) | (1,247.02) | (11.07) | (11.07) | (1,330.14) | (1,644.65) |

* ஐ.அ.டொலரின் உயர்வு இழப்புக்களில் அதிகரிப்பொன்றினை ஏற்படுத்துகிறது.

## 29. நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவக் குறிக்கோள்களும் கொள்கைகளும் (தொடர்ச்சி)

(ii) டுஙைரனைவைல சுளைம

திரவத்தன்மை இடர்நேர்வு என்பது, குழுமமானது அதன் தற்போதைய மற்றும் எதிர்காலக் காசுக் கடப்பாடுகளை உரிய திகதியில் செலுத்த முடியாமல் போவதன் காரணமாக ஏற்படுகின்றதொரு இடர்நேர்வாகும். குழுமமானது காசு முகாமைத்துவத்தினையும் வரவு செலவுத்திட்டச் செயற்பாடுகளின் நாளாந்தம் / வாராந்தம் / மாதாந்தம் / வருடாந்தம் மேற்கொள்வதன் மூலம் நிதிப் பற்றாக்குறைகள் தொடர்பான இடர்நேர்வுகளைக் கண்காணிக்கின்றது. குழுமமானது இடர்நேர்வுகளைத் தணிக்கும் பொருட்டு நீண்ட கால மற்றும் குறுங்காலக் கடன்கள், வங்கி மேலதிகப் பற்று வசதிகள் மற்றும் நிதியியல் / தொழிற்பாட்டுக் குத்தகைகள் என்பன உட்பட, நிதியியல் நிறுவனங்களிலிருந்தான பல்வேறுபட்ட நிதியியல் மூலங்களிலிருந்து பெற்றுக்கொண்டது.

கீழேயுள்ள அட்டவணை ஒப்பந்த ரீதியான கழிவிடப்படாத கொடுப்பனவுகளின் அடிப்படையில் குழுமத்தின் / கம்பனியின் நிதியியல் பொறுப்புக்களின் முதிர்ச்சித் தோற்றப்பாட்டினை தொகுத்துத் தருகிறது:

| | 2018 | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **குழுமம்** | கேள்வியின் அடிப்படையில் இ.ரூ. மில். | மூன்று மாதங்களுக்கு குறைவு இ.ரூ. மில். | 3 - 12 மாதங்கள் இ.ரூ. மில். | 1-5 வருடங்கள இ.ரூ. மில். | 5 வருடங்களுக்கு மேல் இ.ரூ. மில். | மொத்தம் இ.ரூ. மில். |
| வட்டி உழைக்கும் பொறுப்புக்கள் | 1,757.14 | 2,145.17 | 60,855.24 | 29,302.27 | 29.82 | 94,089.64 |
| விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவு | 2,946.37 | 1,505.50 | 217.43 | 19,016.36 | 3,522.74 | 27,208.40 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை | - | 26,998.76 | - | - | - | 26,998.76 |
| முன்னுரிமைப் பங்குகள் | - | 65.05 | 65.05 | 1,195.15 | - | 1,325.25 |
| | 4,703.51 | 30,714.48 | 61,137.72 | 49,513.78 | 3,552.56 | 149,622.05 |
| **கம்பனி** | | | | | | |
| வட்டி உழைக்கும் பொறுப்புக்கள் | 1,757.14 | 2,115.84 | 60,769.38 | 29,242.38 | 29.82 | 93,914.56 |
| விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவு | 2,946.37 | 1,505.50 | 217.43 | 19,016.36 | 3,522.74 | 27,208.40 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை | - | 26,009.10 | - | - | - | 26,009.10 |
| | 4,703.51 | 29,630.44 | 60,986.81 | 48,258.74 | 3,552.56 | 147,132.06 |

| | 2017 | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **குழுமம** | கேள்வியின் அடிப்படையில் இ.ரூ. மில். | மூன்று மாதங்களுக்கு குறைவு இ.ரூ. மில். | 3 - 12 மாதங்கள் இ.ரூ. மில். | 1-5 வருடங்கள் இ.ரூ. மில். | 5 வருடங்களுக்கு மேல் இ.ரூ. மில். | மொத்தம் இ.ரூ. மில். |
| வட்டி உழைக்கும் பொறுப்புக்கள் | 7,541.30 | 1,218.78 | 55,323.39 | 30,202.57 | 176.49 | 94,462.53 |
| விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவு | 1,409.25 | 689.74 | 2,724.68 | 5,561.65 | 2,534.07 | 12,919.39 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை | - | 36,697.06 | - | - | - | 36,697.06 |
| முன்னுரிமைப் பங்குகள் | - | 65.05 | 65.05 | 1,276.46 | - | 1,406.56 |
| | 8,950.55 | 38,670.63 | 58,113.12 | 37,040.68 | 2,710.56 | 145,485.54 |
| **கம்பனி** | | | | | | |
| வட்டி உழைக்கும் பொறுப்புக்கள் | 7,541.30 | 1,218.27 | 55,321.87 | 30,202.57 | 176.49 | 94,460.50 |
| விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவு | 1,409.25 | 689.74 | 2,724.68 | 5,561.65 | 2,534.07 | 12,919.39 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை | - | 35,956.39 | - | - | - | 35,956.39 |
| | 8,950.55 | 37,864.40 | 58,046.55 | 35,764.22 | 2,710.56 | 143,336.28 |

(iii) கொடுகடன் இடர்நேர்வு

கொடுகடன் இடர்நேர்வு என்பது நிதிச் சாதனமொன்றின் கீழ் அல்லது வாடிக்கையாளர் ஒப்பந்தமொன்றின் கீழ், இணைத்தரப்பினர் தமது கடப்பாடுகளைப் பூர்த்தி செய்யாமையின் காரணமாக ஏற்படுகின்ற நிதியியல் இழப்பாகும். குழுமமானது (முக்கியமாகப் பெறத்தக்க வர்த்தகத்திற்காக) அதன் தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தே அதன் கொடுகடன் இடர்நேர்வுகளுக்கு உட்படுகிறது.

பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்துக்களின் விற்பனை அயட்டா இணைந்த விற்பனை முகவர்களினூடாகவே முக்கியமாக இடம்பெறுகிறது. ஒப்பீட்டு ரீதியில் அத்தகைய விற்பனைகள் பரந்தளவிற்கு பன்முகப்பட்டிருப்பதன் காரணமாக இடர்நேர்வுகள் சிறிதளவேயாகும். இம்முகவர்களிடமிருந்தான தீர்ப்பனவுகள் அயட்டாவினால் அவற்றின் பயணிகள் மற்றும் சரக்குத் தீர்ப்பனவுத் திட்டத்தினூடாக சேகரிக்கப்படுகின்றன. சேகரிக்கப்படுகின்ற நிதியம் எயார்லையின்ஸ்சுக்கு அயட்டாவினால் நேரடியாக தீர்ப்பனவு செய்யப்படுகிறது. மேலும், அயட்டா அத்தகைய முகவர்களின் நாணய நம்பகத்தன்மை பற்றி உத்தரவாதத்தினையும் வழங்குகிறது.

முக்கிய விமான நிறுவனங்களுக்கிடையேயான பெறத்தக்கவையும் கொடுபடத்தக்கவையும் அயட்டா தீர்வகத்தினூடாக முக்கியமாகத் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன. பெறத்தக்கவைகளும் கொடுபடத்தக்கவைகளும் பொதுவாகக் கழிக்கப்பட்டு வாராந்த இடைவெளியில் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன. இது செலுத்தத் தவறுவதனால் ஏற்படும் இடர்நேர்வுகளில் தெளிவான குறைப்பிற்கு வழிவகுக்கிறது.

ஏனைய பணிகள் தொடர்பு முறைகளுக்காக, வழங்கப்பட்ட பணிகளின் தன்மை மற்றும் செயற்பரப்பினைப் பொறுத்து பிணைகள் தேவைப்படுத்தப்படுகின்றமை கடன்பாட்டாளர்களிடமிருந்தான அத்தகைய பிணையங்கள் வங்கி உத்தரவாதங்களையும் பாதுகாப்பு வைப்புக்களையும் உள்ளடக்குகின்றன.

இடர்நேர்வுகள் அடையாளம் காணப்படுகின்ற பொழுது பெறத்தக்க ஐயத்திற்குரிய கணக்குகளுக்காக பெறுமதி இழப்பு மேற்கொள்ளப்படுகிறது.

**மூலதன முகாமைத்துவம்**

இந்நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்பு 3இல் கூடியளவிற்கு முழுமையாக விபரிக்கப்பட்டவாறு, வர்த்தகத் திட்டத்தின் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் படுகடன் நிதியிடலைத் திரட்டுவதற்கான விதத்தில் பங்குரிமை மூலதன உள்ளீடு, நாட்டிற்கான உத்தரவாதம் / வசதிக் கடிதம் என்பனவற்றின் மூலமாக தேவையான நிதியிடல்களை உள்ளிடுவதற்கான அதன் கடப்பாட்டினை எடுத்துக்காட்டியது.

தற்போதைய சந்தை நிலைமைகளையும் குழுமத்தின் தொழிற்பாடுகளையும் பிரதிபலிக்கச் செய்வதற்கான சீராக்கங்களை செய்வதற்காக மூலதன அமைப்பினையும் எடுக்கப்பட்ட பொருத்தமான நடவடிக்கைகளையும் குழும முகாமைத்துவம் தொடர்ச்சியாக மீளாய்வு செய்து கண்காணித்தது.

## 30. ஒப்பீட்டு ரீதியான தகவல்கள்

மிகச்சிறந்த சமர்ப்பிப்புக்களைப் பெறும் பொருட்டு இலாபம் அல்லது நட்டக் கூற்றிலும், நிதியியல் நிலைமைக் கூற்றிலுமுள்ள பின்வரும் விடயங்கள் மீள வகைப்படுத்தப்பட்டுள்ளன:

| | குழுமம் | | | கம்பனி | | |
|---|---|---|---|---|---|---|
| | 2017 | மீள் வகைப்படுத்தல் | 2017 மீள் வகைப்படுத்தப்பட்ட | 2017 | மீள் வகைப்படுத்தல் | 2017 மீள் வகைப்படுத்தப்பட்ட |
| | இ.ரூ. மில். | இ.ரூ. மில். | இ.ரூ. மில். | இ.ரூ. மில். | இ.ரூ. மில். | இ.ரூ. மில். |
| **நிதி அறிக்கை நிலை** | | | | | | |
| முதலீடுகள் | - | 292.94 | 292.94 | - | 292.94 | 292.94 |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 2,053.35 | (292.94) | 1,760.41 | 1,623.32 | (292.94) | 1,330.38 |
| **இலாபம் அல்லது நட்ட அறிக்கை** | | | | | | |
| வருமானம் | 138,563.23 | 27.60 | 138,590.83 | 135,463.59 | 27.60 | 135,491.19 |
| விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரச் செலவு | (12,709.68) | (27.60) | (12,737.28) | (12,657.28) | (27.60) | (12,684.88) |
| ஊழியர் செலவினம் | (20,015.81) | 3.25 | (20,012.56) | (18,797.04) | 3.25 | (18,793.79) |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவினங்கள் | (10,700.30) | (3.25) | (10,703.55) | (10,450.45) | (3.25) | (10,453.70) |
| தேறிய சொத்துக்களின் தாக்கம் | | - | | | - | |

# இணைப்புகள்

| | |
|---|---|
| பத்து வருட மீளாய்வு | 102 |
| பாதை வரைபடம் | 104 |
| மைல் கற்கள் | 106 |
| கலைச் சொல்லாக்கம் | 108 |
| கூட்டம் பற்றிய அறிவித்தல் | 109 |

# பத்து வருட மீளாய்வு

| | | 2018 | 2017 | 2016 | 2015 |
|---|---|---|---|---|---|
| **இலாபம் அல்லது நட்ட அறிக்கை** | | | | | |
| வருமானம் | இ.ரூபா மில்லி. | 161,654.46 | 135,491.19 | 129,480.41 | 131,922.13 |
| செயற்படு செலவினம் | இ.ரூபா மில்லி. | 176,104.44 | 146,760.81 | 137,311.44 | 145,983.35 |
| நிகர இலாபம்/(நட்டம்) | இ.ரூபா மில்லி. | (17,213.57) | (28,929.99) | (12,621.69) | (16,494.66) |
| **நிதி நிலைமை அறிக்கை** | | | | | |
| பங்கு மூலதனம்/தெரிவிக்கப்பட்ட மூலதனம் | இ.ரூபா மில்லி. | 51,617.44 | 51,617.44 | 51,617.44 | 51,617.44 |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | இ.ரூபா மில்லி. | 37,476.46 | 24,660.56 | 23,548.01 | 22,836.77 |
| நடைமுறைச் சொத்துக்கள் | இ.ரூபா மில்லி. | 30,090.50 | 26,973.07 | 26,901.02 | 49,721.49 |
| மொத்தச் சொத்துக்கள் | இ.ரூபா மில்லி. | 67,566.96 | 51,633.63 | 50,449.03 | 72,558.26 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | இ.ரூபா மில்லி. | 130,358.61 | 126,302.55 | 100,334.44 | 103,414.31 |
| **விளைவு /அலகு ஒன்றிற்கான செலவு** | | | | | |
| மொத்த விளைவு | இ.ரூ. தொன் கி.மீ | 84.37 | 80.08 | 79.06 | 80.32 |
| அலகு ஒன்றுக்கான செலவு | இ.ரூ. தொன் கி.மீ | 69.1 | 64.79 | 61.39 | 61.88 |
| இலாப நட்டமில்லா சுமைக் காரணி | % | 81.9 | 80.91 | 77.65 | 77.03 |
| வ.ப.கி ஒன்றுக்கான வருமானம் | இ.ரூபா/வ.ப.கி | 8.60 | 8.40 | 8.20 | 8.20 |
| **உற்பத்தி** | | | | | |
| பயணிகள் இயலளவு | கி.இ.கீ மில்லி. | 18,487.54 | 15,608.10 | 15,790.28 | 16,180.27 |
| மொத்த இயலளவு | கி.தொ.கி.மீ. மில்லி. | 2,549.88 | 2,167.92 | 2,165.21 | 2,224.87 |
| **போக்குவரத்து** | | | | | |
| கொண்டு செல்லப்பட்ட பயணிகள் | எண். 000 | 5,839 | 4,446 | 4,328 | 4,348 |
| கொண்டு செல்லப்பட்ட பயணிகள் | வி.ப.கி மில்லி. | 15,280.78 | 12,455.05 | 12,727.66 | 12,963.71 |
| பயணிகள் சுமைக் காரணி | % | 82.65 | 79.80 | 80.60 | 80.12 |
| கொண்டு செல்லப்பட்ட சரக்கு | தொன்கள் | 132,958 | 116,221 | 102,082 | 101,878 |
| கொண்டு செல்லப்பட்ட சரக்கு சுமை | வ.தொ.கி மில்லி. | 401.66 | 374.46 | 356.76 | 373.32 |
| கொண்டு செல்லப்பட்ட மொத்தச் சுமை | வ.தொ.கி மில்லி. | 1,749.14 | 1,475.29 | 1,484.77 | 1,519.93 |
| மொதத சுமைக் காரண | % | 68.60 | 68.05 | 68.57 | 68.32 |
| **அலுவலர்கள்** | | | | | |
| சராசரி பலம் | எண்ணிக்கை | 7,019 | 7,021 | 6,959 | 6,987 |
| ஒரு ஊழியருக்கான வருமானம் | ரூபா | 23,030,982 | 19,294,059 | 18,606,181 | 18,881,084 |
| ஒரு ஊழியருக்கான இயலளவு | தொன் கி.மீ | 363,283 | 308,776 | 311,139 | 318,430 |
| ஊழியர் ஒருவருக்காக கொண்டு செல்லப்பட்ட சுமை | தொன் கி.மீ | 249,201 | 210,126 | 213,359 | 217,537 |
| **கப்பற் படை** | | | | | |
| A320-200 | எண்ணிக்கை | 5 | 6 | 6 | 6 |
| A321-200 | எண்ணிக்கை | 3 | 3 | 2 | 2 |
| A320neo | எண்ணிக்கை | 2 | 2 | - | - |
| A321neo | எண்ணிக்கை | 3 | - | - | - |
| A330-200 | எண்ணிக்கை | 6 | 6 | 6 | 7 |
| A330-300 | எண்ணிக்கை | 7 | 7 | 7 | 2 |
| A340-300 | எண்ணிக்கை | - | - | - | 4 |
| டெபோ ஓட்டர் | எண்ணிக்கை | - | - | - | - |
| ஆண்டு இறுதியில் பணியிலுள்ள விமானங்கள் | எண்ணிக்கை | 26 | 24 | 21 | 21 |
| **விமானங்களின் பயன்பாடு** | | | | | |
| A320-200 | ஒரு நாளில் பறந்த மணி | 13.12 | 11.70 | 12.43 | 12.86 |
| A320-நியோ | ஒரு நாளில் பறந்த மணி | 12.25 | 9.31 | - | - |
| A321-200 | ஒரு நாளில் பறந்த மணி | 12.42 | 12.08 | 12.65 | 13.10 |
| A321-நியோ | ஒரு நாளில் பறந்த மணி | 13.14 | - | - | - |
| A330-200 | ஒரு நாளில் பறந்த மணி | 11.94 | 11.67 | 12.59 | 14.11 |
| A330-300 | ஒரு நாளில் பறந்த மணி | 15.02 | 14.03 | 14.66 | 13.43 |
| A340-300 | ஒரு நாளில் பறந்த மணி | - | - | - | 11.42 |
| கப்பற் படை | ஒரு நாளில் பறந்த மணி | 13.25 | 12.44 | 12.02 | 12.90 |

| 2014 | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|---|
| 121,585.83 | 119,570.90 | 92,867.93 | 77,125.45 | 62,363.58 | 73,307.77 |
| 150,389.46 | 146,700.24 | 111,775.88 | 81,334.34 | 69,026.74 | 84,794.86 |
| (32,408.34) | (26,088.57) | (19,778.03) | (381.61) | (2,698.20) | (9,305.94) |
| 51,617.44 | 32,032.75 | 19,432.67 | 5,146.35 | 5,146.35 | 5,146.35 |
| 25,212.47 | 23,338.28 | 37,591.58 | 19,862.87 | 28,531.75 | 19,333.18 |
| 37,154.23 | 54,905.22 | 22,072.71 | 18,276.59 | 15,910.82 | 15,008.38 |
| 62,366.70 | 78,243.50 | 59,664.29 | 38,139.46 | 44,442.57 | 34,341.56 |
| 88,609.07 | 71,346.64 | 64,235.43 | 28,017.97 | 28,399.92 | 25,012.31 |
| 77.26 | 74.31 | 64.47 | 60.27 | 54.94 | 64.85 |
| 64.96 | 64.68 | 57.28 | 45.92 | 43.37 | 50.71 |
| 84.07 | 87.03 | 88.84 | 76.19 | 78.94 | 78.19 |
| 7.80 | 7.60 | 6.60 | 6.30 | 5.80 | 6.8 |
| 15,780.54 | 15,944.31 | 14,248.94 | 12,481.41 | 10,724.83 | 11,731.56 |
| 2,187.18 | 2,186.96 | 1,978.33 | 1,755.23 | 1,541.03 | 1,635.62 |
| 4,175 | 4,255 | 3,459 | 2,867 | 2,558 | 2,735 |
| 12,810.95 | 12,968.74 | 11,270.23 | 9,584.02 | 8,357.89 | 8,546.44 |
| 81.18 | 81.34 | 79.10 | 76.79 | 77.93 | 72.85 |
| 94,410 | 101,100 | 87,750 | 86,053 | 72,058 | 73,106 |
| 355.59 | 377.75 | 345.67 | 332.98 | 283.83 | 302.36 |
| 1,466.74 | 1,513.70 | 1,338.30 | 1,184.13 | 1,028.11 | 1,065.15 |
| 67.06 | 69.22 | 67.65 | 67.46 | 66.72 | 65.12 |
| 6,578 | 6,359 | 5,594 | 4,998 | 4,614 | 4,837 |
| 18,483,708 | 18,803,412 | 16,601,346 | 15,431,263 | 13,516,164 | 15,155,627 |
| 332,499 | 343,916 | 353,652 | 351,186 | 333,991 | 338,148 |
| 222,976 | 238,041 | 239,238 | 236,922 | 222,825 | 220,210 |
| 8 | 8 | 7 | 4 | 3 | 3 |
| - | - | - | - | - | - |
| - | - | - | - | - | - |
| - | - | - | - | - | - |
| 7 | 7 | 7 | 5 | 4 | 4 |
| - | - | - | - | - | - |
| 6 | 6 | 6 | 5 | 5 | 5 |
| - | 1 | 2 | 2 | - | - |
| 21 | 22 | 22 | 16 | 12 | 12 |
| 12.11 | 11.79 | 11.21 | 11.77 | 11.23 | 10.76 |
| - | - | - | - | - | - |
| 9.54 | - | - | - | - | - |
| - | - | - | - | - | - |
| 14.68 | 13.82 | 14.30 | 14.56 | 12.86 | 13.45 |
| - | - | - | - | - | - |
| 11.44 | 13.10 | 15.22 | 15.16 | 14.31 | 15.04 |
| 12.76 | 12.82 | 13.48 | 14.05 | 13.05 | 13.15 |

# பாதை வரைபடம்







நேர வலயம் கொழும்பில் 1130 ஆக இருக்கையில் மற்றைய அனைத்து நேரங்கள்

## பயணப் பாதை வலையமைப்பு

சிறிலங்கன் எயார்லையின்ஸ் தற்பொழுது ஐரோப்பா, மத்திய கிழக்கு, தென்னாசியா தூரகிழக்கு மற்றும் வட அமெரிக்காவிலுள்ள 48 நாடுகளின் 111 சேரிடங்களுக்கு சேவைகளை நடத்துகின்றது.




SriLankan Airlines

oneworld

| 1100 | 1130 | 1130 | 1300 | 1400 | 1500 | 1530 | 1600 | 1800 |
|---|---|---|---|---|---|---|---|---|
| கான் தீவு<br>கராச்சி<br>லாகூர்<br>மாலே | இந்தியாவில்<br>அம்ரிஸ்தார்<br>பங்களூர்<br>புபனேஷ்வர்<br>புத்தகயா<br>சென்னை<br>கொச்சி<br>கோயம்புத்தூர்<br>காயா<br>கௌஹாத்தி<br>ஹைதராபாத்<br>ஜெயப்பூர்<br>கத்மண்டு<br>கொல்கத்தா<br>லக்னோவ்<br>மதுரை<br>மும்பாய்<br>புதுடெல்லி<br>பட்னா<br>திருச்சிராப்பள்ளி<br>திருவானந்தபுரம்<br>வாரணாசி | கொழும்பு | பாங்கொக்<br>ஹனோய்<br>ஹோ சி மின்<br>நகரம்<br>ஜகார்த்தா<br>பொகுகெற்<br>பொனம்<br>பென்ஹ்<br>யன்கொன் | பேஜிங்<br>கன்ரன்<br>கோலா லம்பூர்<br>லங்காவி<br>பென்னங்<br>பேர்த்<br>ஷங்காய்<br>சிங்கப்பூர் | புகோகா<br>ஹனேடா<br>இதாமி<br>கன்சாய்<br>நகோயா<br>நரிட்டா<br>சபோரோ | அடிலேயிட்<br>டார்வின் | பிறிஸ்பன்<br>மெல்பன்<br>சிட்னி | ஒக்லண்ட் |

# முக்கிய நிகழ்வுகள்

## 2008 2009

- தொழிற்பாட்டுக் குத்தகை உடன்படிக்கையொன்றின் கீழ் எயார்பஸ் A320 விமானமொன்று கம்பனிக்கு விநியோகிக்கப்பட்டது.
- 10 ஆண்டு காலப்பகுதிக்கு எமிறேற்ஸ் வசமிருந்த கம்பனியின் முகாமைத்துவக் கட்டுப்பாடு 2008 மாச்சில் காலாவதியானது. இதன் விளைவாக 2008 ஏப்பிறல் 1ஆம் திகதியிலிருந்து கம்பனியின் முகாமைத்துவம் இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

## 2009 2010

- தொழிற்பாட்டு குத்தகை உடன்படிக்கையொன்றின் கீழ் இரண்டு A320 விமானங்கள் கம்பனிக்கு விநியோகிக்கப்பட்டன.

## 2010 2011

- தொழிற்பாட்டுக் குத்தகை உடன்படிக்கையொன்றின் கீழ் எயார்பஸ் A320 விமானமொன்றும் அகன்ற உடலமைப்பைக் கொண்ட எயார்பஸ் A330 ஒன்றும் கம்பனிக்கு விநியோகிக்கப்பட்டன.
- 2010 யூலையில் எமிறேற்ஸ் வசமிருந்த கம்பனியின் 42.63 சதவீதமான பங்குரிமையினை கொள்வனவு செய்வதற்கு இலங்கை அரசாங்கம் வசதியளித்தது.

## 2014 2015

- கம்பனியானது 2014 மே மாதம் வண்வேர்ள்ட் அணியில் இணைந்து கொண்டது.
- 2014 யூனில் கம்பனியானது முதற்றடவையாக 05 ஆண்டு சர்வதேச முறிகளை வழங்கியது.
- அகன்ற உடலமைப்புக்களைக் கொண்ட விமானங்களை மீள்தொகுதிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக, கம்பனிக்கு மூன்று புத்தம் புதிய A330-300 விமானங்கள் முறையே 2014 ஒக்டோபரிலும், 2015 மாச்சிலும் விநியோகிக்கப்பட்டன.

## 2015 2016

- எபெக்ஸ் பயணிகள் தேர்வு விருது 2015இல் எயார்லையின்ஸ் நான்கு கௌரவம் வாய்ந்த தலைப்புக்களுக்காக தெரிவுசெய்யப்பட்டிருக்கிறது. பிராந்தியத்தில் மிகச் சிறந்தது: ஆசியா மற்றும் அவுஸ்திரலாசியா, "மிகச் சிறந்த விமானத்தில் பயணிப்பவர்களுக்கான வெளியீடு", "மிகச் சிறந்த விமானத்தில் பயணிப்பவர்களுக்கான வீடியோ" மற்றும் "மிகச் சிறந்த தரை நடவடிக்கை அனுபவம்" ஆகிய நான்கு வகைகளுக்காக எயார்லையின்ஸ் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளமை இதுவே முதற்றடவையாகும். எயார்லையின், ஆசியா மற்றும் அவுஸ்திரேலாசியாவில் பயணிகள் அனுபவத்திற்காக அதிசிறப்புச் சாதனையாளர் விருது - 2015 செத்தெம்பர் எபெக்ஸ் போட்லாந்து ஒரேகன் மற்றும் மிகச் சிறந்த முழுப் பணி வழங்கும் எயார்லையின், மத்திய மற்றும் தென்னாசியா - எதிர்காலப் பயண அனுபவ விருது ஆசியா - 2015 சிங்கப்பூர் என்பனவற்றை வென்றுள்ளது.
- அகன்ற உடலமைப்பு விமான மீள்தொகுதிப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக கம்பனிக்கு நான்கு புதிய A330-300 விமானங்கள் ஒகத்து மற்றும் நவெம்பரிலும் 2 விமானங்கள் 2015 திசெம்பரிலும் விநியோகிக்கப்பட்டன.

## 2016 2017

- இரண்டு A320 நியோ விமானங்கள் 2017 பெப்புருவரியிலும், 2017 மாச்சிலும் பெற்றுக்கொள்ளப்பட்டன - முதலாவதாக இரண்டு A320/A321 புதிய எந்திரத் தேர்வினைக் கொண்ட விமானங்கள் விமானத் தொகுதிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டன.
- சிறிலங்கன் 11 உணர்வுபூர்வமான புதிய சேரிடங்களான - லாகூர், ஜகர்த்தா, டாக்கா, கொல்கத்தா, மதுரை, வாரணாசி, புத்தகயா, மஸ்கட், பஹ்ரேன், சீசெல்ஸ் மற்றும் ஹான் தீவுகளுக்குப் பணிகளை மேற்கொண்டது.
- "உயர் பயண விருது தென்னாசியாவில் மிகச் சிறந்த எயார்லையின்" என்ற விருதும் "2016 ஆசியாவில் எதிர்காலப் பயண அனுபவங்களில் தொடர்ந்து இரண்டாவதாண்டாக மத்திய மற்றும் தென்னாசியாவில் மிகச் சிறந்த முழுமையான பணிகளைக் கொண்ட எயார்லையின்" விருதும் கம்பனிக்கு வழங்கப்பட்டது. எயார்லையின் 7ஆவது ஆசிய தொழில்தருநர் நாம விருது வழங்கலில் எயார்லையின் "பயிற்சியளித்தல் சிறப்பு விருது" மற்றும் வியாபார முறையில் "மிகச் சிறந்த மனித வள உபாயம்" என்ற விருதையும் பெற்றுக் கொண்டது.

## 2011 2012

- தொழிற்பாட்டு குத்தகை உடன்படிக்கைகளின் கீழ் நான்கு எயார்பஸ் A320 விமானங்களும் அகன்ற உடலமைப்பினைக் கொண்ட இரண்டு எயார்பஸ் A330 உம் அகன்ற உடலமைப்பினைக் கொண்ட ஒரு A340 விமானமும் கம்பனிக்கு விநியோகிக்கப்பட்டன.
- எயார்லையினை மீள்மூலதனமயப்படுத்தும் பொருட்டு இலங்கை அரசாங்கத்தினால் ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட பங்குரிமை மூலதனத்தினை மேற்கொள்வதற்கு அமைச்சரவை ஒப்புதலளித்தது.

## 2012 2013

- A320 விமானிகளுக்கு பயிற்சியளிப்பதற்காக இலங்கையின் கணனியில் வடிவமைக்கப்பட்ட முதலாவது மாதிரிப் பறப்புக் கூடமொன்று ஆரம்பிக்கப்பட்டது.
- தொழிற்பாட்டு குத்தகை உடன்படிக்கையொன்றின் கீழ் எயார்பஸ் A320 விமானமொன்று கம்பனிக்கு விநியோகிக்கப்பட்டது.
- மத்தள சர்வதேச விமான நிலையத்திலிருந்து சர்வதேச ரீதியான பறப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன.
- 2012 மே மாதத்தில் ஐ.அ.டொலர் 175 மில்லியன் கொண்ட தொகையைப் பெறும் பொருட்டு வெளிநாட்டு வங்கிகளின் கூட்டமைப்புடன் நிதியியல் உடன்படிக்கையொன்றினை கம்பனி மேற்கொண்டது.

## 2013 2014

- எயார்பஸ் A330 விமான விமானிகளின் பயிற்சிக்காக கணினியில் வடிவமைக்கப்பட்ட மாதிரிப் பறப்புக் கூடமொன்று ஆரம்பிக்கப்பட்டது.
- 2013 திசெம்பரில் கம்பனி அமடியூஸ் அல்ரியாவிற்கு பயணிகள் சேவைகள் முறைமையினை நிறுத்தியது.
- நடுத்தர கால நிதியிடலின் பொருட்டு ஐ.அ.டொலர் 150 மில்லியனைப் பெற்றுக் கொள்வதற்காக வங்கிகளின் கூட்டமைப்புடன் 2014 மாச்சில் கம்பனி நிதியியல் உடன்படிக்கையொன்றினை மேற்கொண்டது.

## 2017 2018

- 03 புத்தம் புதிய எயார்பஸ் A321 நியோ விமானங்கள் முறையே 2017 ஜுன், ஒக்டோபர் மற்றும் டிசம்பரில் கிடைக்கப்பெற்றன.
- நிறுவனம் 04 புதிய பயண முடிவுகளான மெல்போர்ன், ஹைதராபாத், கோயம்புத்தூ ர் மற்றும் வி'சக பட்டணம் என்பனவற்றுக்கு பயணங்களை ஆர ம்பித்தது.
- எயார்லைன் பயணிகள் அனுபவ சங்கம் (APEX) இடமிருந்து நான்கு நட்சத்திர விருதையும், 2017 ஆம் ஆண்டின் எதிர்கால பயண அனுபவ விருது - சிங்கப்பூர் விருதையும் மற்றும் மிகச் சிறந்த சேவைகளுக்கான விருதை மூன்றாவது முறையாகவும் பெற்றுக்கொண்டது. மேலும், சிங்கப்பூரில் 2017 ஆம் ஆண்டு இடம்பெற்ற விமானத்திற்குள்ளேயான ஆசிய பசிபிக் விருதுகள் நிகழ்வில் "வர்த்தக விமான அறைகளில் புதிய படைப்புகள்" விருதையும் வென்றது.

# கலைச் சொல்லாக்கம்

### கிடைக்கத்தக்க இருக்கை கிலோ மீற்றர் (கி.இ.கி.)

விற்பனைக்கு வழங்கப்பட்ட இருக்கைகளும் அதில் அவர்கள் பயணித்த தூரமும்.

### கிடைக்கத்தக்க தொன் கிலோ மீற்றர் (கி.தொ.கி.)

இது போக்குவரத்துச் சாதனங்களை அளவிடுமொன்றாகும்.

பறப்பொன்றின் மூலம் உருவாக்கப்பட்டு கிடைக்கத்தக்க தொன் கிலோ மீற்றர்கள் என்பது பறந்த தூரத்தினால் பெருக்கப்பட்ட தொன்களினால் அளவிடப்பட்ட விமானப் பயணிகள் பாரத்தின் இயலளவாகும்.

### வருமானப் பயணிகள் கிலோ மீற்றர் (வ.ப.கி.)

கொண்டு செல்லப்பட்ட பயணிகளையும் அவர்கள் கொண்டு செல்லப்பட்ட தூரத்தினாலும் உருவாக்கப்பட்டது.

### சுமைக் காரணி

வழங்கப்பட்ட இயலளவிற்கான வருமானச் சுமையின் சதவீதத் தொடர்பு.

கிடைக்கத்தக்க இருக்கை கிலோ மீற்றர்களுக்கு வருமானப் பயணிகள் கிலோ மீற்றர்களின் தொடர்புபட்டதாக பயணிகள் சுமைக் காரணி விளங்குகையில் ஒட்டுமொத்த சுமைக் காரணி கிடைக்கத்தக்க இருக்கை கிலோ மீற்றருக்கான வருமானப் பயணிகள் கிலோ மீற்றருடன் தொடர்பானதாக விளங்குகிறது.

### வருமானப் பயணிகள் கிலோ மீற்றரொன்றிற்கான வருமானம்

வருமானப் பயணிகள் கிலோ மீற்றரொன்றிற்கான வருமானம், வருமானப் பயணிகள் கிலோ மீற்றருக்கான பயணிகள் கிலோ மீற்றருடன் தொடர்பானது.

### அலகிற்கான செலவு

அலகொன்றிற்கான செலவு கிடைக்கத்தக்க தொன் கிலோ மீற்றருக்கான பயணிகள் வருமானத்துடன் தொடர்புபட்டது.

### ஒட்டுமொத்த விளைவு

ஒட்டுமொத்த விளைவு வருமான தொன் கிலோ மீற்றருக்கான தேறிய போக்குவரத்து வருமானத்துடன் தொடர்பானது.

தேறிய போக்குவரத்து வருமானமென்பது பயணிகள், மிகை பொதிக் கட்டணம், சரக்கு மற்றும் அஞ்சல் வருமானம் என்பனவற்றின் தொகையாகும்.

### இலாப நட்டமற்ற சுமைக் காரணி

சுமைக் காரணியானது, தொழிற்பாட்டு செலவுடன் கூடிய அட்டவணையிடப்பட்ட எயார்லையின்ஸின் தொழிற்பாடுகளிலிருந்தான வருமானத்தினை சமப்படுத்துவதனை தேவைப்படுத்துகிறது.

# கூட்டம் பற்றிய அறிவித்தல்

சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டின் பங்குடமையாளர்களின் நாற்பதாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் பின்வரும் நோக்கங்களுக்காக, 2019 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு 30ஏ, மலலசேகர மாவத்தை, கொழும்பு 7இல் அமைந்துள்ள, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளமை பற்றிய அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகிறது.

1. 2018 மாச்சு 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கையினையும், நிதியியல் கூற்றுக்களையும், அவற்றுடன் உள்ள கணக்காய்வாளர் அறிக்கையினையும் பெற்றுப் பரிசீலித்தல்.

2. யாப்பிற்கான 19ஆவது திருத்தத்தின் 36ஆம் பிரிவிற்கிணங்க கணக்காய்வாளர் நாயகம் கம்பனியைக் கணக்காய்வு செய்வார் என்பதுடன் பணிப்பாளர்கள் தமது ஊதியத்தினை நிர்ணயிப்பதற்கும் இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றனர்.

சபையின் கட்டளைப்படி

**தல்றின் திருக்குமார்**
*கம்பனியின் செயலாளர்*

2019 பெப்ரவரி 28
கொழும்பு

**குறிப்புக்கள்:**

1. கூட்டத்தில் கலந்து கொள்ளவும், வாக்களிக்கவும் உரித்துடைய உறுப்பினரொருவர் தனக்குப் பதிலாக கூட்டத்தில் கலந்து கொள்ளவும் வாக்களிக்கவும் பதிலாள் ஒருவரை நியமிக்க தகுதியுடையவராவர். பதிலாளருக்கான படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ளது. பதிலாள் உறுப்பினராக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை.
2. பதிலாளின் பூரணப்படுத்தப்பட்ட படிவம் "எயார்லையின்ஸ் சென்ரர்", பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கா என்ற முகவரியிலமைந்துள்ள கம்பனியின் பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலகத்தில் கூட்டம் நடைபெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரத்திற்குக் குறைந்தது 48 மணித்தியாலங்களுக்கு முன்னதாக அதாவது 2019 ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்குப் பிந்தாமல் கையளிக்க வேண்டும்.
3. கூட்டுத்தாபனமொன்றினை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளொருவர் அவரை/அவளை கூட்டுத்தாபனத்தினை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்றினைக் கொண்டுவருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார். பிரதிநிதித்துவப்படுத்துபவர் உறுப்பினராக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

# குறிப்பு

# பதிலாள் படிவம்

**சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்**

2019 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு 30ஏ, மலலசேகர மாவத்தை, கொழும்பு 7இல் அமைந்துள்ள இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ள சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டின் பங்குடமையாளர்களின் நாற்பதாவது பொதுக் கூட்டத்தில் சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டின் உறுப்பினர்/உறுப்பினர்களாக இருக்கும் என்னை/எங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் எனது/எமது சார்பில் பின்வரும் பணிப்பாளர்களில் ஒருவருக்கு வாக்களிப்பதற்கும் அங்கு நடைபெறும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளவும் எனது/எமது சார்பில் ..........................................................................................................................................

என்ற முகவரியைச் சேர்ந்த ............................................................................................................................................................................................ ஆகிய நான்/நாங்கள்

..................................................................................................................................................................................................................... என்ற முகவரியைச் சேர்ந்த

....................................................................................................................................................... என்பவரைப் பதிலாளாக நியமிக்கின்றேன்/நியமிக்கின்றோம்.

பின்வரும் பணிப்பாளர்களிலொருவர்:

திரு. கணேகம சேன விதானகே  
திருமதி டொக்டர் ரொஷான் பெரேரா  
எயார் மார்ஷல் கபில ஜயம்பதி  
திரு. சுசந்த கட்டுகம்பொல  
திரு. ஜொஹான் விஜேசிங்க  
திரு. எஸ்.ஜீ.சேனாரத்ன  
பேராசிரியர் அர்ஜுன டி சில்வா

| | இற்கு | எதிராக |
|---|---|---|
| 1. 2018 மாச்சு 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கையினையும் நிதியியல் கூற்றுக்களையும் அவற்றுடன் உள்ள கணக்காய்வாளர் அறிக்கையினையும் பெற்று பரிசீலிப்பதற்கு | ☐ | ☐ |
| 2. யாப்பிற்கான 19ஆவது திருத்தத்தின் 36ஆம் பிரிவிற்கிணங்க கணக்காய்வாளர் நாயகம் கம்பனியைக் கணக்காய்வு செய்வார் என்பதுடன் பணிப்பாளர்கள் தமது ஊதியத்தினை நிர்ணயிப்பதற்கும் இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றனர். | ☐ | ☐ |

இரண்டாயிரத்து பத்தொன்பதாம் ஆண்டு ................................ மாதம் .......................................... திகதி கையொப்பமிடப்பட்டது.

...............................................................  
கையொப்பம்

**குறிப்பு:**  
(அ)*பொருத்தமற்ற சொற்களை வெட்டிவிடவும்.  
சொற்கள் நீக்கப்படாதிருக்குமிடத்து அல்லது பதிலாளின் கருத்துப்படி சந்தேகம் தோன்றுமிடத்து (பதிலாளரினால் பூரணப்படுத்தப்பட்ட அறிவுறுத்தல்களில் உள்ளடக்கப்பட்டுள்ள காரணங்களின்படி) பதிலாள் பொருத்தமானது என அவர்/அவள் நினைக்கும் விதத்தில் அவர் வாக்களிக்கலாம்.

**பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்:**

1. பதிலாளுக்குரிய படிவத்தினை தெளிவான முறையில் உங்களின் முழுப் பெயரையும் முகவரியையும் நிரப்பிய பின்னர் கையொப்பத்திற்கென தரப்பட்டுள்ள இடத்தில் கையொப்பத்தினையும், திகதியினையும் இட்டு சரியாகப் பூரணப்படுத்திக் கொள்ளவும்.
2. வதியும் / வதிவற்ற பங்குடமையாளர்களைப் பொறுத்தவரையில், கம்பனிக்கு பதிலாளின் பூரணப்படுத்தப்பட்ட படிவத்தினை திருப்பி அனுப்பும் பொழுது முத்திரை பதிக்கப்பட்டிருப்பது கவனிக்கப்படும்.

# கூட்டிணைப்புத் தகவல்கள்

**கம்பனியின் பெயர்**
சிறிலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டெட்

**கம்பனியின் பதிவு இல.**
PB 67

**சட்ட ரீதியான வடிவம்**
பொறுப்பு வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி

**பணிப்பாளர் சபை**
திரு. ரஞ்ஜித் பெர்னாண்டோ (தலைவர்)
திரு. மனோ தித்தவெல்ல
திரு. சுசந்த கட்டுகம்பல
டொக்டர் ரொஷான் பெரேரா
எயார் மார்ஷல் கபில ஜயம்பதி
திரு. எஸ்.ஜீ. சேனாரத்ன
திரு. ஜொஹான் விஜேசிங்க
பேராசிரியர் அர்ஜுன பி டி சில்வா

**சபை கணக்காய்வுக் குழு**
திரு. மனோ தித்தவெல்ல (தலைவர்)
திரு. எஸ்.ஜீ. சேனாரத்ன
டொக்டர் ரொஷான் பெரேரா
எயார் மார்ஷல் கபில ஜயம்பதி

**சபையின் மனிதவள மற்றும் ஊதியக் குழு**
எயார் மார்ஷல் கபில ஜயம்பதி (தலைவர்)
திரு. சுசந்த கட்டுகம்பல
டொக்டர் ரொஷான் பெரேரா

**கம்பனியின் செயலாளர் / கூட்டிணைப்பு செயலக சேவைகள் தலைவர்**
திருமதி தெல்றின் திருக்குமார்

**வங்கியாளர்கள்**
இலங்கை வங்கி
மக்கள் வங்கி
நஷனல் டிவலப்மன்ட் வங்கி பிஎல்சி
ஸ்டான்டட் சாட்டட் வங்கி
சிற்றி பாங்க் என்ஏ
சம்பத் வங்கி பிஎல்சி
நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பிஎல்சி
ஹட்டன் நஷனல் வங்கி பிஎல்சி
கொமர்ஷியல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி
அமானா வங்கி பிஎல்சி

**கணக்காய்வாளர்**
கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம்
306/72இ
பொல்துவ வீதி,
பத்தரமுல்ல

**பதிவு செய்யப்பட்ட அலுவலகம்**
எயார்லைன் நிலையம்
பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்,
கட்டுநாயக்க,
ஸ்ரீலங்கா.

**கூட்டிணைப்பு இணைய தளம்**
www.srilankan.com

optima
Designing Your Year!
Designed & Produced by
Optima Designs (Pvt) Ltd.
A full service design and print company.
www.optimadesigns.lk

SriLankan Airlines

எயார்லைன் நிலையம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க, ஸ்ரீலங்கா.
www.srilankan.com